0 ன ஆடி JULY 1944 6 அ

# காவேரி



EAD The Cauver
IDEAL MAGAZINE FOR T

உயர்தரமான

# கோட்டிங்ஸ்
# ஷர்ட்டிங்ஸ்
# பனியன்கள்
# புடவைகள்
# வாயில்கள்
# பிரிண்டட் துணிகள்

★ மற்றும் சகலவிதமான துணிகள் ★
நவீன மோஸ்தரில் தேவைக்கு

## பன்ஸால் டிரேடிங் கம்பெனி

No. 2, சின்னகடைத்தெரு
தெப்பக்குளம் போஸ்ட்
திருச்சிறைப்பள்ளி.

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

## தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

**KUMBAKONAM.**

218548


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மதரூஸ் | பாலக்காடு | திருச்சினுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.



## ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

# பொருளடக்கம்

தாரண மலர் 3 — ஆடி இதழ் 12


| | | |
|---|---|---|
| மஹாத்மாவின் குண்டுவீச்சு | ... ... | 4 |
| கதம்பம் | ... ... | 6 |
| மந்திரி சபை நினைவுகள் | ... தி. சே. சௌ. ராஜன் | 9 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் | ... ராமையா | 13 |
| பொம்மை இது என்ன பொம்மை? | ... ஆர்ஜீ | 17 |
| புத்தக விமர்சனம் | ... ... | 22 |
| இதென்ன உலகம்! | ... கிருத்திவாஸ் | 25 |
| ஜகஜ்ஜனனி | ... கே. சுந்தரம்மாள் | 32 |
| மின்னல் | ... வி. ஜி. ஸ்ரீநிவாஸன் | 39 |
| ஜாதிக்குழப்பம் | ... கே. சந்தானம் | 41 |
| யாருக்கு யார்? | ... வெ. பத்மநாபன் | 45 |
| பிரதிக்ஞை | ... மானஸிகன் | 51 |


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப்பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.




# காவேரி

தாரண மலர் 3 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆடி இதழ் 12


## மஹாத்மாவின் குண்டு வீச்சு

மஹாத்மா காந்தி ஓர் வெடி குண்டை வீசினார். அதன் பலனாக இன்று இந்திய அரசியல் ஸ்தம்பனம் கடகடத்துவிட்டது. இந்திய அரசியல் நிலைமையைச் சீர்படுத்தாமல் காலம் கடத்திவிடலாம் என்று எண்ணிவந்த பிரிட்டிஷ் மனப்பான்மையில் பேரிடிவிழுந்துவிட்டது. இனி இந்தியத் தேசிய கோரிக்கைக்கு ஒருவாறு பதிலளித்தாகவேண்டும். இந்த நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணிவிட்டது, மஹாத்மா விசிய டயம் பாம்.

அதன் மர்மம் என்ன?

மஹாத்மா விடுதலை ஆகித் தேக நிலை குணமடைந்தவுடன் வைஸ்ராயைப் பேட்டிகாண வேண்டுமென்றும், அதற்கு முன்பு காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களுடன் தாம் கலந்து ஆலோசிக்க வசதி அளிக்கவேண்டுமென்றும் வைஸ்ராய்க்கு எழுதினார். ஆனால் அடக்குமுறைதான் சிறந்தது என்று கண்டுகொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதை மறுத்துவிட்டது. இனி வாதாடுவதில் பிரயோஜனமில்லை; உலக அபிப்பிராயத்தைத் தம்பால் இழுத்துத் தம் கோரிக்கை எவ்வளவு நியாயமானது என்பதை வெளிப்படுத்தினால் தான் இவர்கள் வழிக்கு வருவார்கள் எனக் கண்டுகொண்டார் மஹாத்மா. வீசினார் குண்டை. ஓர் வெள்ளைப் பத்திரிகை நிருபருடன் தம் அரசியல் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டினார். இந்தப் பாமை முதலில் அந்நிருபர் வைசிராயிடம் உபயோகிக்கவேண்டியது, பிறகுதான் அதை வெளிப்படுத்தலாம் என்ற நிபந்தனையும் விதித்தார். ஆனால் அந்நிருபர் அதை வெகு சீக்கிரத்தில் உடைத்துவிட்டார். எனவே இன்று இந்திய அரசியல் நிலை கொந்தளித்து நிற்கிறது.

மஹாத்மா என்ன சொன்னார்? "1942ல் இருந்த அரசியல் நிலை இன்று இல்லை. நான் காரியக்கமிட்டியாருடன் கூடிப் பேசி அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும். ஒத்துழையாமை இயக்கத்தை நான் இனி ஆரம்பிக்க முடியாது. அப்படி ஆரம்பித்தாலும் அது பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கடினமான நிலைக்குள்ளாக்கும். அதில் எனக்கு மனமில்லை; இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சம் முதலிய மக்களின் அவதிகளை நீக்குவதுதான் காரியக்கமிட்டியின் முதல் நோக்கமாக இருக்கும். அதற்கு ஸிவில் அரசாங்கம் இந்தியர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். தேசிய அரசாங்கம் அமைக்கப்படவேண்டும். ராணுவ அதிகாரங்களை எல்லாம் பிரிட்டிஷாரே வைத்துக்கொள்ளட்டும். இந்திய ஸிவில் அரசாங்கம் ராணுவப் படைகளுக்கு என்னென்ன வசதி வேணுமோ அதை அனைத்தையும் செய்து கொடுக்கும்."

யுத்தகாலத்தில் இந்தியர்களிடம் அதிகாரத்தை மாற்றினால் யுத்த முயற்சி தடைபட்டுவிடும், மஹாத்மாவின் அஹிம்ஸா முறை இந்திய தேசிய அரசாங்கத்தை யுத்த முயற்சியில் ஈடுபடவிடாது, எனவே தேசியக் கோரிக்கை யுத்தம் முடியும் வரை நடவாத காரியம் என்று பிரிட்டிஷார் பறை சாற்றிப் பிரசாரம் செய்து வந்தனர். ஆனால் இன்று மஹாத்மாவே தேசிய அரசாங்கம் ராணுவத்திற்குச் சகல வசதிகளும் அளிக்கும் எனக் கூறவே பிரிட்டிஷ் நம்பியிருந்த சாக்குப் பறந்து விட்டது.

பிரிட்டிஷார் மற்றுமொரு நிபந்தனை விதித்து வந்தனர். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஒற்றுமையில்லை; இந்நிலையில் தேசிய அரசாங்கம் அமைப்பதென்றால் நாட்டைக் கலகங்களுக்குவிட்டுவிடுவதாகும். அப்படிக் கலகங்கள் மூண்டால் யுத்த முயற்சியைப் பாதிக்கும். எனவே இது முடியாத காரியம் என்று வாதாடினர். இந்தப் பொய் மூட்டையையும் அவிழ்த்துவிடவேண்டுமெனத் தீர்மானித்து, ராஜாஜி மன்றாடி வற்புறுத்திவந்த முஸ்லிம் ஸ்வயேச்சைப் பிரிவு திட்டத்திற்கும் மஹாத்மா இசைந்தார். ஜின்னாவுடன் கூடி இதைப்

பற்றிப் பேசவும் [illegible] பதையும் சமீபத்தில் தெரிவி[illegible]

தேசீய முன்னே[illegible]ட்டுக்கட்டையாக நினைத்துக் க[illegible] பெரும் கோட்டைகள் இரண்டும் [illegible] ஒரு நொடியில் மஹாத்மாவின் ட[illegible]ாமினுல் தகர்த்தெறியப்படவே பதில் பேசத்தெரியாமல் விழிக்கிருர் பிரிட்டிஷ் மந்திரி அமெரி.

ஆனுல் ஜனுப் ஜின்னு தங்களுக்குத் துணை புரிவார் என நம்பி முஸ்லிம் லீக் ஸ்தாபனம் என்னசெய்கிறது என்று பிரிட்டிஷார் காத்திருக்கிறதாகத் தெரிகிறது. ஜின்னு மட்டும் தங்கள் முஸ்லிம் கோரிக்கை என்ருவது கைகூடவேண்டுமென்று மனப்பூர்வமாக விரும்பினுல், இதுதான் தகுந்த தருணம். காந்திஜி மனம்மாறி அதற்கு இணங்க இசைந்துள்ளபோதே ஓர் ஒப்பந்தம்செய்துகொள்வது அவசியம். ஆனுல் பிரிட்டிஷாரை நம்பி, பிடிபடாமல் கிளைக்குக் கிளை தாவுவாரேயாகில், அவர்கதி அதோகதியாகிவிடும். லீக் அங்கத்தினர்களே அவரைப்பதவியிலிருந்து இறக்கிவிடுவார்கள்.

இத் தருணத்தில் காங்கிரஸ் லீக் ஒப்பந்தம் ஏற்படுமானுல் இந்திய அரசியல் அமைப்பில் ஓர் மாறுதல் ஏற்படுவது திண்ணம். பிரிட்டிஷார் தேசியக் கோரிக்கைக்கு இணங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஜின்னுவையும், லீக்கையும் எதிர்பார்த்து நிற்கிறது தேசீய முன்னேற்றம்.

ஒன்று மட்டும் நிச்சயம். பிரிட்டிஷாரின் பொய்ப் பிரசாரம் வெளியாய் விட்டது. தேசீய அரசாங்கம் ஏற்பட்டால் யுத்த முயற்சி பாதிக்கப்படும் என்ற சாக்கு இனியும் சொல்ல முடியாது.

ஆனுல் புதிய சமாதானங்கள் வெளிவரலாம். அடுத்த மாதத்திற்குள் நிலைமை ஒருவாறு தெளிவுறும் என எதிர்பார்க்கலாம்.

21 JUL 1944
MADRAS

மேதாஸ்
"சுந்தரி எலிக்ஸர்"
ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு
★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—
K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—
ஸென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,
ஸெகண்ட்ராபாத்.

# கதம்ப

## கபட நாடகம்

சில பெரிய மனிதர்கள் அவர்கள் வீட்டு விசேஷ வைபவங்களுக்குத் தாராளமாய் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பிவிடுகிறார்கள். அந்த அழைப்பை நம்பி ஒரு ஏழை சென்றால் அவனுக்கு அவமதிப்பே கிடைக்கும்! ஏழைகளில் மானிகள், சென்று அவமானமடைவதை விட செல்லாமலிருத்தலே மேலென இருந்து விடுவார்கள்.

உலகத்திலேயே பெரிய வல்லரசுகளாக விளங்கும் பிரிட்டனும் அமெரிக்காவும் யுத்தத்திற்குப்பின் உலகச் செல்வ நிலைமையைச் சீர்படச்செய்ய, சுயநலநிமித்தம் "மகா நாடு" என்று சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் கூட்டின. ஆள்கூட்டம் வேண்டுமல்லவா! சுதந்திரமிழந்து நாடிழந்து பரதவிக்கும் பிரான்ஸ், அதே நிலைமையிலுள்ள இதர ஐரோப்பியச் சில்லறைத் தேசங்கள், உதவிக்கு ஏங்கி உயிருக்கு மன்றாடும் சைனா, பிரிட்டனைச் சார்ந்த ஆனால் சுதந்தரத்துடன் வாழும் குடியேற்ற நாடுகள் இவைகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அடிமை இந்தியாவையும் மறந்துவிடவில்லை. ஆள் அனுப்ப உத்தரவு வந்ததின்பேரில் இந்திய சர்க்கார் நீட்டின இடத்தில் கையெழுத்திடும் பழக்கமுள்ள பழைய ஒட்டாவா வீரர் திரு. ஷண்முகம் செட்டியாரை அனுப்பி வைத்தார்கள். பழைய பழக்கத்தையும் வழக்கத்தையும் உதறித்தள்ளி செட்டியார் இந்தியா சார்பாகக்கொஞ்சம் பேச ஆரம்பிக்கவே மகா நாட்டு மூலவர்களுக்குப் பிரமாதக் கோபம் வந்துவிட்டது. நாமத்தை நன்றாய்க் குழைத்துக் கொஞ்சம் கரியையும் சேர்த்துப் பட்டையாகச் செட்டியாருக்குச் சாத்திவிட்டனர். அந்த நாமம் சாத்தப்பட்ட படலத்தைச் சற்று விபரமாகக் கவனிப்போம்!

இந்தியாவிலிருந்து விலையுள்ள சாமான்களை எல்லாம் கொண்டுபோய் அதற்குப் பதிலாக மதிக்க முடியாத பெயர்ஏட்டுக் கணக்காகக் கோடிக்கணக்கில் இந்தியப்பணம் சீமையிலிருப்பதாகத் தெரியவருகிறதல்லவா? "இப்படி எங்கள் பணம் ஏன் வீணாகச் சீமையில் முடங்கிக் கிடக்கவேண்டும்? அதை இந்தியாவிற்கு உபயோகமான வழியில் செலவு செய்யலாமே, முழுவதையும் கொடுக்க மனமில்லாவிட்டாலும் ஒரு பாகத்தையேனும் வெளியிடலாமே" என்று கெஞ்சினார். "இந்தியப் பணம் சீமையில் ஏது? அப்படியிருந்தாலும் அது திருப்பிக்கேட்க முடியாத கடன், திருப்பித் தருவதாகவிருந்தாலும் சொற்ப பாகமே கொடுக்க நேரும், அதுவும் பிரிட்டனது இஷ்டம்போல்!"—இவ்விதமாகக் கிளர்ச்சி செய்து வந்த கெயின்ஸ் துரை சகுனி மாமா போல் மகா நாட்டில் பிரசன்னமாயிருந்தார். வீராவேசத்துடன் கிளம்பினார்! "இந்த யுத்தத்தினால் சீமைக்கு நஷ்டம் எவ்வளவு தெரியுமா? மகா வறட்சையடைந்துவிட்டது. பிரிட்டன் ஏன் இப்படிக் கடன்காரனாக அவதிப்படவேண்டும்? நீங்கள் மட்டும் கடன் கொடுத்தவர்களாகச் சுகப்படவேண்டும்? இந்தியப் பணம் சீமையிலிருப்பதை வெளிவிட்டுவிடுவது முடியாத-நடவாத காரியம்! அப்படிச் செய்தல் பிரிட்டனது பொருளாதார நிலைமையைப் பெரிதும் பாதிக்கும்" இப்படியாக ஒரு சொல்மழை பொழிந்தார். "பலே, பலே" என்று அமெரிக்கப் பிரதிநிதிவேறு தட்டிக்கொடுத்தார்!

செட்டியார் திடுக்கிட்டார். மானம் கப்பலேற வேண்டியது பாக்கியிருப்பதால் மேலும் கெஞ்சலானார். "உலகப் பொருளாதார க்ஷேமநிதி ஏற்படுத்தப்போவதில் இந்தியாவின் பணத்துக்கும் பாதுகாப்பு இருக்கும்படியாகச்செய்ய வேண்டும்" என்று மன்றாடினார். "இந்தியாவுக்குத் தனிப் பொறுப்பு யாதொன்றும் கிடையாது. இருக்கவேண்டிய அவசியமுமில்லை. எல்லாம் பிரிட்டனது பொறுப்பு" என்ற பதில் வந்தது. செட்டியார் வெறுப்புக்கொண்டு "நான் ஏமாற்றமடைந்தேன்" என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறார்.

செட்டியார் இந்திய சர்க்காரின் மாயவலையில் சிக்கி இந்தியப் பிரதிநிதியாக இப்படிப்பட்ட மோசடி மகாநாட்டிற்குப் போகாதிருந்தால் அடிமை நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அவமானம் அவ்வளவாகத் தெரியாது!

செட்டியார் போன்ற தாஸர்கள், பக்தர்கள், ஏமாந்த சோணகிரிகள் எப்பொழுதும் அகப்படுவார்கள் என்ற அஸ்திவார நம்பிக்கையின் பேரிலேயே பிரிட்டிஷ் ராஜதந்திரம் கட்டப்பட்டுள்ளது என்பதை இனியாவது செட்டியார் போன்றவர்கள் உணர ஆண்டவன் அருள்புரிவாராக.

## செழிக்கச்செய்யும் தூது!
## (Fertilizer Mission)

இந்திய மக்களிடம் மகா காருண்யம் கொண்ட பிரிட்டிஷ் சர்க்கார் செய்யும் சில

காரியங்களைப் பார்த்தால் நாம் வாழும் அடிமை வாழ்வு ஆனந்தமாய்த்தான் தோன்றும். ஊன்றிக் கவனித்தால் விஷயமெல்லாம் படுமோசமாக இருக்கின்றது புலப்படும்!

பாருங்கள்! நமது நாட்டிலுள்ள பூமிகள் எல்லாம் நல் வளம்கொண்டு செழிக்கச் செய்யப் பிரிட்டிஷ்சர்க்கார் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டுள்ளார்கள்? பல ஆயிரம் மைல்களுக்கப்பாலிலிருந்து, - சீமையிலிருந்து சிலநிபுணர்களை வரவழைத்துள்ளார்கள். இந்த நிபுணர்கள் நமது பூமியைச் செழிக்கவைக்க வல்லவர்களா? அல்லது சீமையைச் செழிக்கச் செய்ய ஆர்வம் கொண்டவர்களா என்பதைக் கடவுள்தான் அறிய முடியும்!

நம்நாட்டு விவசாயிகள் ஒன்றும் தெரியாதவர்கள்; விவசாயத்தில் அனுபவமில்லாதவர்கள். அதனால்தான் நம் நாட்டு ஆசாமிகள் யாரும் வந்துள்ள தூதுகோஷ்டியில் சேர்க்கப்படவில்லை. நிலக்கரியும், சுண்ணும்பும் மட்டும் அகப்படும் இங்கிலாந்து தேசத்துக்குத்தான் நம் நாட்டு வளப்பம் புரிபடும்.

வந்துள்ளவர்கள் பிரபல வியாபாரக்கம்பெனியைச் சார்ந்தவர்கள். இவர்களது முக்ய நோக்கம் "செயற்கை உரம் செய்யக்கூடிய வசதி நிறைந்த இடங்களைத் தேடிப்பிடித்துப் பல தொழிற்சாலைகளை நிர்மாணம் செய்வதாம்.

தொழிற்சாலைகளுக்கு மூலதனம் உதவுவது யார்? இந்தியர்களா, இந்திய சர்க்காரா? அல்லது சீமை முதலாளிகளா? விபரம் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பத்திரிகைச் செய்தியொன்று இந்தியர்களைத் திடுக்கிடச் செய்கிறது. "பீஹார் மாகாணத்தைப்பொறுத்தவரை Imperial Chemical Industries என்ற பெரிய வெள்ளை முதலாளி ஸ்தாபனம் மூலதனமளிக்கும். மாகாண சர்க்கார் 2 கோடி ரூபாய் அதற்கு உதவி (Contribution) அளிப்பார்கள். கம்பெனி தொழிற்சாலை ஏற்படுத்தி நிறையச் செயற்கை உரத்தை உற்பத்தி செய்யும்."

பீஹாரில் நடப்பதுதான் மற்ற மாகாணங்களிலும் நடக்குமென்று நம்பலாம்.

சீமை ஆசாமிகள் எதிலும் நிபுணர்கள், உப்பில்லாமல் கலக் கஞ்சி குடிப்பவர்கள் என்பதை ஒப்புக்கொண்டாலும் இந்தியாவிலும் விவசாய அனுபவமுள்ள ஒரு சிலராவது இருக்கின்றார்கள் என்பதை நமது சர்க்கார் மறந்தது ஆச்சரியமாகத்தானிருக்கின்றது.

இவ்வளவு முக்கிய விஷயத்தைப்பற்றி இந்தியாவில் பேச்சு மூச்சு இல்லாமல் எல்லோரும் உறக்கங்கொண்டுவிட்டதை நினைக்க இன்னும் அதிக ஆச்சிரியமாகத் தோன்றுகிறது.


நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனும்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ.,

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

**கேடரைன்**



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணுடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ,, கெமிஸ்ட்ஸ்,

286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

முக கவர்ச்சிக்கும்
ஆரோக்கியத்திற்கும்
தலைசிறந்த

**கண்ணன்**
**பேஸ் பவுடரையே**
எப்பொழுதும் உபயோகியுங்கள்

**கண்ணன்**
**பென்சில்களையும்**
எப்பொழுதும் உபயோகியுங்கள்

விபரங்களுக்கு எழுதவும்

**கண்ணன் & கோ.**

கும்பகோணம்.

## கலாரஸிகர்களுக்கு ஆபத்து!

. எங்கே பார்த்தாலும் வேலை நிறுத்தம், எதற் கெடுத்தாலும் வேலை நிறுத்தம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் சங்கீத சபைகள், நாட்டிய மந்திர்கள், கலாமண்ட பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன- கலாரஸிகர் களின் கூட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வரு கின்றது. நாளையதினம் சங்கீத வித்துவான்கள், இசைவாணிகள், நாட்டியக் கலாநிதிகள், சுந் தரிகள் திடீரென்று, "நாங்கள் இனி மக்களுக் குத் தொண்டு செய்ய மாட்டோம்! எங்கள் குறைகள் பல கவனிக்கப்படவில்லை. எங்க ளுக்குக் கொடுக்கப்படும் காப்பித்தண்ணீர் ருசி யாகவில்லை. கொடுக்கும் ஊதியம் போதாது", என்று சொல்லி வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள்மீது அபார மோகங்கொண்டுள்ள கலாரசிகர்கள் என்னபாடு படுவார்கள் என் பதை நினைக்கப் பயங்கரமாக இருக்கின்றது! கலாரசிகத்தன்மையைவிட்டொழித்து அதற்கு ஒரு முழுக்குப்போட்டுவிடவும் நமக்குத் தைரி யமில்லை!

ஜப்பானியர் படையெடுத்த மணிபுரி சமஸ் தானத்தில் நடன மாதர்கள் கூட்டங்கூடினார் கள். கலாரசிகர்கள் அக்கூட்டத்துக்கு அனு மதிபெற முடியவில்லை! எதற்காகக் கூடினார் கள்? பல நடனமாதர்கள் வருஷம் ஒன்றுக்கு லக்ஷ ரூபாய்க்குமேல் சம்பாதிக்கிறார்களாம். ஆறுயிரம் ஏழாயிரம் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை அனந்தமாம். அந்த ஊர் சமஸ் தானதிபதியை ஆட்டிவைக்கும் லேடால் என்ற வெள்ளை அதிகாரி நாட்டின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யத் திட்டம் போட்டான். தின்னும் உப்புக்குக்கூட வரிபோட்டு வகு விக்கும் இனத்தைச்சேர்ந்த வெள்ளை அதிகாரி நாட்டியக்காரிகளுக்கு வருமானவரி விதித்து விட எண்ணிவிட்டான். இந்த விபரீதச் செய லைக் கண்டிக்கத்தான் மணிபுரி நடன மாதர் கள் கூடினார்கள். "எங்களுக்கு விதிக்கப்பட் டுள்ள வருமான வரி ரத்துசெய்யும் வரை பொதுமக்களுக்கு எங்கள் பணி கிடைக்காது" என்று தீர்மானம் செய்து வேலை நிறுத்தமும் செய்துவிட்டார்கள்.

ஏற்கனவே ஜப்பானியர்கள் செய்த கொடு மையினால் மணிபுரியின் அழகு அதிகம் அழிந் தது. பிரசித்திபெற்ற அந்த ஊர் நடன மாதர் களும் வேலை நிறுத்தம் செய்துவிட்டபின் அந்த ஊர் அழகும் போச்சு, புகழும் போய்விட்டது!

மற்ற ஊர்களிலும் மணிபுரி நடனமாதர்கள் செய்துள்ள வேலை நிறுத்தம் பரவி, கலா ரசி கர்கள் கொடுமைகளுக்கு ஆளாகாதிருக்க உடனே இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புதிய விதியொன்று ஏற்படுத்த எல்லாம் வல்ல பிரிட்டிஷ் சர்க்காரைப் பிரார்த்திக்கி றோம்.!

## விஷவாயுப் பிரயோகம்

இந்தியப் பாதுகாப்பு நிமித்தம் பிரிட்டிஷ் சர்க்கார் அமெரிக்காவில் ஒரு பெரிய பட்டா ளத்தை இறக்கியுள்ளார்கள்! இந்தப் பட்டா ளத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தலைவர் நமது இந்தியாமந்திரி அமெரி துரை! அமெரிக்கர் கள் இந்தியா விஷயமாய் அனுதாப அக்கரை கொள்ளாதிருக்கவே பட்டாளம் வைக்கப் பட்டுள்ளது. இந்தப் பட்டாளத்தைச் சேர்ந்த வர்களின் வேலை ருசிகரமும் கொடுமையும் கலந்ததாயுள்ளது!

டீபார்ட்டிகள், நடன பார்ட்டிகள், பொதுக் கூட்டங்கள், மத போதனைகள் செய்வது இவைகள் மூலம் அப்பாவி அமெரிக்கர்களைக் கூட்டித் திடீரென்று அவர்கள்மீது விஷவாயு வைப் பிரயோகம் செய்து அவர்களது மூளை யைக் குழப்பி, பகுத்தறிவைப் பாழ்படுத்தி விடுவது—இதுதான் அந்தப் பட்டாளத்தின் முக்கிய வேலை!

இந்தப் பட்டாளத்தார் தாங்கள் உபயோகிக் கும் விஷவாயுவை வாய்கள் மூலமாகவே கொட்டுகின்றனர். அந்த விஷ வாயுவில் ஒரு துளியை முல்ஹர்க்கார் (Mulherkar) என்ற அறிவாளி எப்படியோ கைப்பற்றி அதிலுள்ள விஷப் பொருள்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளார். விஷவாயுவி லுள்ள பொருள்களாவன:– (1) இந்தியர்கள் நாகரிகமற்றவர்கள். (2) ஜாதிமத சச்சரவு கள் இந்தியாவில் அனந்தம். (3) ஜனநாயக அரசியல் இந்தியாவுக்கு ஏற்காது. (4) சுதந் திரத்தை ஒருசில சுயநலக்காரர்களைத்தவிர மற்ற இந்தியர்கள் விரும்பவில்லை. (5) பிரிட் டன் இந்தியாவுக்குச் சுதந்திரமளித்துவிட் டால் குழப்பமும், கலகமும் ஏற்பட்டு இந்திய மக்கள் அல்லற்படுவார்கள். (6) பஞ்சத் தாலும் பிணியாலும் இந்திய மக்கள் மடியா மல் சுபிக்ஷமாக வாழப் பிரிட்டிஷ் அரசாக்ஷி அவசியமானது. (7) பிரிட்டன் இந்தியாவை விட்டு அகன்றுவிட்டால் அன்றே உலகில் கிறிஸ்துவ மதமும் அழிந்துவிடும்.

இந்தப் பட்டாளத்தில் சுமார் 300 சிப்பாய் கள் உண்டாம். தேசபக்திகொண்ட பல வெள்ளைப் பாதிரிகளும் பட்டாளத்தில் சேர்ந்து சேவைசெய்து வருகிறார்களாம். இந்தப் பட்டாளத்தின் செலவு பிரிட்டிஷ் சர்க்கா ருடையதா அல்லது இந்திய சர்க்காருடையதா வென்பது கண்டுபிடிக்கமுடியாத தேவ ரக சியம்.

நல்லவேளையாகப் பட்டாளத்தாரின் விஷ வாயுப் பிரயோகம் மூளையுள்ள அமெரிக்கர் களைப்பாதிக்கவில்லையாம்! பட்டாளத்திலுள்ள இந்தியர்கள் கக்கும் விஷவாயு ஒன்றுமே செய் வதில்லையாம். அமெரிக்க மக்கள் சிரிக்கிறார் களாம்.

# மந்திரிசபை நினைவுகள்

தி. சே. சௌ. ராஜன்

ஆட்சிமுறை மாற்றி அமைக்கப்படுவது அநேகமாக ஒரு புரட்சியின் காரணமாகவே ஏற்படும். இது சரித்திரம் அறிந்த விஷயம். நமது மாகாணத்திலும் அரசியல் ஆதிக்கம் மக்களுக்கு ஒரு சிறு பகுதி வந்தவுடன் அவர்களுடைய மனம் மாறியது; கடும் புரட்சிகள் உண்டாகவில்லை. எனினும் சிறிய புரட்சிகள் உருவெடுத்தன. தொழிலாளர் உலகத்தில் இது காணப்பட்டது. மக்களின் பெருவாரி வாக்குக்களால் அதிகாரம்பெற்ற மந்திரி சபை ஏழைமக்களுடைய நெடு நாளைய குறைகளையெல்லாம் தீர்த்துவிட வேண்டுமென்கிற எண்ணம் நியாயமானதுதான். ஆனால் எல்லாம் ஒரே காலத்தில் எப்படிச் செய்வது? மந்திரி சபைகளுக்குட்பட்ட அதிகார வர்க்கத்தின் ஊதியத்தைக் குறைத்தது அதிகாரிகளின் உள்ளத்தில் வருத்தத்தை உண்டு பண்ணியது. அதிலும் பெரிய பதவிகளில் சீமையிலிருக்கும் இந்தியா மந்திரியாலும் மத்தியகவர்மெண்டாராலும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் சம்பளத்தைத் தொடுவதற்குக்கூட மந்திரிகளுக்குப் புதிய சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆகையால் மாகாண கவர்மெண்டு நியமனத்திற்கு உட்பட்ட சிறிய அதிகாரிகளின் சம்பளத்தைத்தான் குறைக்க முடிந்தது.

அன்னிய ஆட்சியின்கீழ் உழைக்கும் அதிகார வர்க்கத்தினருக்கு மிதமிஞ்சிய சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது ஏகாதிபத்யத்தின் ஒரு மர்மம். சுரண்டல் கொள்கையின் பேரில் கட்டப்பட்ட ஆட்சி முறையில் நம் நாட்டினரில் செல்வாக்கு வாய்ந்த ஒரு பகுதியினரைப் பங்காளிகளாக எடுத்துக் கொள்வது ஏகாதிபத்யத்திற்கு அளவற்ற சக்தியை அளித்து வருகிறது; ஆகையால் அவர்கள் பதவியை அசைக்க வொட்டாமலும், வருவாயில் குறைவில்லாமலும் இருக்கும்படி திட்டம் செய்திருக்கிறார்கள். புதுத் திட்டத்தில் மந்திரிகள் தலையிடாவண்ணம் முறைகளும் இப் புதிய சட்டத்தில் ஏற்பட்டுள்ளன. ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தர் சரியாக வேலை பார்க்கிறதில்லையென எனக்கும், எனது காரியதரிசிக்கும் நன்கு தெரியும். இந்தக் கேவலமான அதிகாரியை ஏன் நீக்கிவிடக்கூடாது என்று நான் கேட்டேன். அதற்கு எனது காரியதரிசி ஒரு பதில் அளித்தார். அது எனக்கு இன்றும் மறக்கவில்லை. "உயர்தர அதிகாரியின்பேரில் குற்றம் சாட்டி ரூபிப்பதைக்காட்டிலும் நூறு சாதாரண குற்றவாளிகளைத் தூக்கிலிடுவது சுலபம்" எனச் சொன்னார். அது முற்றிலும் உண்மையென எனக்கு நன்கு தெரிந்தது.

"இந்த அதிகாரக் கோட்டையிலிருப்பவர்களை ஒன்றும் செய்யவில்லை. ஏழைகளாகிய எங்கள்பேரில்தான் பாய்ந்துவிட்டார்கள்" என மாகாண அதிகாரிகள் மனம் வருந்தினார்கள். ஆட்சி முறையில் முதலிலேயே இந்த நிபந்தனை ஏற்படுத்தி எங்கள் கீழிருக்கும் இந்திய அதிகாரத்தினர் மனதைக் கொதிக்க வைத்துவிட்டோம். அவருக்கு மேலாகவிருக்கும் உயர்தர அதிகார வர்க்கத்தின் ஏளனத்திற்கும், மறைமுகமான இகழ்ச்சிக்கும் ஆளானோம். விவசாய கடன் ரத்துச் சட்டத்தினால் இந்திய முதலாளிகளின் மனம் வெறுப்புற்றது. பயனடைந்த விவசாயியும் போதிய அளவு எங்களை ஆதரிக்கவில்லை. இதற்கு மேல் வியாபார வரி, புகையிலை வரி, பெட்ரோல்வரி முதலியவைகளால் சம்பந்தப்பட்ட முதலாளிகள், வியாபாரிகள் இவர்களுக்கு எங்கள்பேரில் கசப்பு ஏற்பட்டது. பாக்கி இருந்த ஆதரவும் ஹரிஜன ஆலயப் பிரவேசச்சட்டத்தினால் இந்து சமூகத்தினரில் ஒரு பகுதியினருக்கு ஆத்திரமூட்டியது. இதனிடையே ஹிந்தி எதிர்ப்பு, தொழிலாளர்கள் தீவிர இயக்கம், வேலை நிறுத்தம் (ஸ்டிரைக்) ஆலைகள் மூடுவது, வேலையில்லாமல் திண்டாடுவது, எல்லாம் மும்முரமாக ஏற்பட்டன.

காங்கிரஸ் பதவிக்கு வந்தவுடன் எல்லோருக்கும், எல்லாக் குறைகளும் ஒரே காலத்திலேயே தீர்ந்துவிடவேண்டுமென

ஆத்திரம். பதவியிலிருந்த ஒரு வருஷத்திற்குள் எழுபத்தைந்து ஆலைகளில் வேலை நிறுத்தம், தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களின் ஆத்திரம், பிடிவாதம், இவைகளைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. ரயில்வே தொழிலாளர் சங்கத்தில் வெகுகாலமாகக் தொடர்பு கொண்டிருந்து, எங்களுடன் தொழில் இலாகா மந்திரியாயிருந்த ஸ்ரீமான். வி., வி, கிரி அவர்களே திணறும்படி ஸ்டிரைக்குகள் நடந்தன. அவைகளில் பெரும்பாலானவை தொழிலாளருக்குச் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டது. கூடிய மட்டில் ஆலைச் சொந்தக்காரர்களும், ஏஜண்டுகளும் ஒத்துழைக்க முன் வந்தார்கள். அதில் இரண்டு ஆலைகளின் வேலை நிறுத்தம் கவனிக்கத் தக்கது. மதுரை ஹார்வி மில்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது; கவர்மெண்டாருடைய சமரசத் தீர்ப்பை முதலாளிகள் ஒப்புக் கொள்ள மறுத்து வேலை துவக்கினார்கள். ஆலையில் வேலை துவக்கக்கூடாதென 144 செ. சட்டத்தின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆலை திறக்க முடியவில்லை. இந்திய சரித்திரத்தில் முதல் முறையாக ஆங்கில ஏஜண்டுகளால் நடத்தப்படும் ஆலைக்குத் தடை உத்தரவு கொடுத்த பெருமையோ சிறுமையோ சென்னைக் காங்கிரஸ் ஆட்சிக்கு ஏற்பட்டது. தடை உத்தரவு பிறந்த மறுநாளே உடன் படிக்கையேற்பட்டு, தொழிலாளர்கள் தாங்களே வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். மற்றொன்று சென்னையிலிருந்த சூளை நூல்நூற்கும் ஆலைச் சாலை. இதிலும் முதலாளி தொழிலாளி சச்சரவுதான். முதலாளிகள் இந்தியர்கள், வட நாட்டினர், மார்வாரி சமூகத்தினர். இவர்களுடனும் சமரசப்பேச்சு நடந்தது. ராஜாஜியும், கிரியும் எவ்வளவோ முயன்றும் தொழிலாளர்கள் இசைய மறுத்துவிட்டார்கள். தொழிலாளர் தலைவர்களை எவ்வளவு வற்புறுத்தியும் அவர்களும் உடன்படவில்லை. முதலாளிகள் தொழிலாளிகள் கேட்கும் முறையில் தாங்கள் ஆலையை லாபகரமாக நடத்த முடியாதெனச் சொல்லிவிட்டார்கள். முதல் இரண்டு மாதம் ஆலை வேலை செய்யாமல் மூடப்பட்டது. சுமார் ஐயாயிரம் தொழிலாளர்கள் சோற்றுக்கு அவதிப்பட்டு வந்தார்கள். கடைசியாக ஆலையை மூடிவிட முதலாளிகள் முடிவு செய்தார்கள். அப்போதும் தொழிலாளிகள் இணங்க மறுத்துவிட்டார்கள். ஆலையும் அடியோடு மூடப்பட்டுவிட்டது. ஓர் இந்திய முதலாளியும் தொலைந்தான். ஐயாயிரம் தொழிலாளர்களும் பிழைப்பற்று வாடினர். நான்கு


ஜம்மியின்
லிவர்க்யூர்மூலம்
புனர்ஜன்மம்



ஜம்மியின்
லிவர்
க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை அதைப்
பருந்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்
தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருட காலமாக
கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற் ஸம்-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர்.
திருச்சிராப்பள்ளி.

மாதங்கள் சென்ற பிறகு தொழிலாளர்கள் முதலாளிமார்களின் நிபந்தனையை ஒப்புக்கொண்டு வேலை செய்ய முன்வந்தார்கள். ஆனால் முதலாளிகள் நான்கு மாதம் நஷ்டப்பட்ட பிறகு, இவ்வளவு தொல்லை கொடுக்கக்கூடிய தொழிலாளர்களைக் கொண்டு ஆலையை நடத்துவதைக் காட்டிலும், மூடிவிடுவதென முடிவு செய்துவிட்டார்கள். ராஜாஜி எவ்வளவோ முயற்சி செய்தும் ஆலை திறக்காமலே போய்விட்டது. தொழிலாளர்களுக்கும் அதினின்று ஓர் படிப்பினை ஏற்பட்டது. நாடு இருக்கும் நிலையில் முதலாளியை ஒழித்து விடும் முயற்சி தொழிலாளர்களுக்கு நன்மைஉண்டாக்காது. தொழிலாளர்களுக்கு சலுகை காட்டக்கூடிய ஆட்சி முறையில் முதலாளி முதுகை ஒடிக்க முயற்சிசெய்யாமல், முடியும் வரையில் தங்களுக்குரிய நியாயமான ஊதியத்தை அதிகாரத்தின் செல்வாக்கைக்கொண்டு பெறவேண்டும். இந்தியக் கைத் தொழில்களை அறவே ஒழித்து விடும் முயற்சியில் இறங்கக் கூடாது என்பது படிப்பினை. இது எவ்வளவு தூரம் தொழிலாளர் சமூகத்தினருக்கு அவர்களது உரிமையைப் பெற உதவிற்று என எளிதில் சொல்லமுடியாது. யுத்த காரணத்தினால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, மந்திரிகளைப் பதவியைவிட்டு விலகும்படி தீர்மானித்துவிட்டது. அதற்கப்புறம் ஆலை வேலை நிறுத்தம் என்பதே மறைந்துபோய்விட்டது,


# ஹோமியோபதி

என்னும் நவீன வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ தங்கள் வீட்டிலிருந்தே படித்துத் தேர்ச்சி பெற்று, தாங்கள் டாக்டராகலாம். முழு விபரங்கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரகடனத்திற்கு எழுதவும்.

★

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்**

டவுன் எக்ஸ்டென்ஷன் கும்பகோணம்.

தென் இந்தியாவின் தலை சிறந்த ஹோமியோபதி ஸ்தாபனம்.


1935-ஆம் புதிய சீர்திருத்தம் மாகாண சுயாட்சி அளித்துவிட்டதென இந்தியா மந்திரியும் அதிகார வர்க்கத்தினரும் ஓயாது பறைசாற்றுகின்றனர். அவர்களது பொறுப்பற்ற தன்மைக்கும், அறிவீனத்திற்கும், மாகாண சுயாட்சியின்பேரில் பழியைச் சுமத்துகிறார்கள். வங்கத்தில் உணவில்லாத கோர நிகழ்ச்சிக்குப் பொறுப்புமாகாண சர்க்கார்தான் என்று கூசாமல் பார்லிமெண்டில் சொல்லுகிறார்கள். இந்தியா மந்திரி இவ்விதம் உளறிக் கொட்டுகிறார். உண்மையில் மாகாண சுயாட்சி நடத்தும் பொறுப்பு கவர்னர் ஒருவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளுக்கு ஒரு உத்தரவும்போட அதிகாரமில்லை. எல்லாம் கவர்னர் கையெழுத்தின்கீழ் நடைபெறுகிறது. பழங்காலத்து மன்னர்களுக்குச் சர்வ அதிகாரமும், அவர்களுக்கு யோசனை கூறுவதற்கு அமைச்சர்களும் எப்படியிருந்தார்களோ, கிட்டத்தட்ட அவ்விதமேதான் மாகாண சுயஆட்சி நிறுவப்பட்டிருக்கிறது. சட்டசபைக்குச் சட்டம் செய்வதற்கு அதிகாரமிருக்கிறது. அந்த அதிகாரமும் கவர்னர் முத்திரை பெற்றுத்தான் சட்டமாகவேண்டும். சட்டசபைகள் வேலை செய்யாமல் ஆலோசனையாளர்களைக் கொண்டு ஆட்சி நடத்தும் கவர்னர்களுக்கும், பழைய காலத்தில் மன்னர் ஆட்சிக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. கவர்னர் தாமே சட்டம் செய்கிறார். வரி விதிக்கிறார். சட்டங்களை ரத்துசெய்கிறார். சட்டங்களையெல்லாம் கடந்து நிர்வாகம் நடத்தும் பொறுப்பையும் வகித்து நடத்துகிறார். இவ்விதம் நடத்த 1935-ஆம் சட்டம் இடங்கொடுக்கிறது. இது ஏதோ சில காலங்களுக்கு மட்டில் என்பதும் இல்லை. வருஷா வருஷம் பார்லிமெண்ட் சபை இந்த யதேச்சாதிகாரத்தை அங்கீகரித்துத் தனது பொறுப்பைத் தீர்த்துக்கொள்ளுகிறது. சட்டம் அமுலில் இருந்த காலத்தில்கூட இந்தமுறை ஒருவாறு மறைமுகமாகவே வேலைசெய்து வந்தது. இதற்கு உதாரணம் சிந்து, வங்காளம், ஒரிஸ்ஸா முதலிய மாகாணங்களில் அடிக்கடி பார்க்கிறோம். 1935-ஆம் சட்டம் கவர்னரும், மந்திரிகளும், சட்டசபைகளும் ஒருமித்து நடத்தும் முறையை அடிப்படையாய்க் கொண்டபோதிலும் கூட கவர்னர் யதேச்சாதிகாரத்திற்குப் பல சந்தர்ப்பங்களும், இடமும் ஏற்படுத்தியே நிறுவப்பட்டிருக்கிறது.

சர்க்கார் கார்யாலயம் இருவிதமாகச் சென்னையில் வேலை செய்தது. பெரும் பகுதி மந்திரிகளின்கீழ் அவரவர்களுக்களிக்கப்பட்ட இலாகாக்கள் வேலை செய்தது. இது தவிர கவர்னருக்கென ஓர் தனிக் கார்யாலயம் உண்டு. அதற்குத் தனி சிப்பந்திகளும், கார்யதரிசிகளும் வைக்கப்பட்டார்கள். கவர்னர் பரிசீலிக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் பார்த்து, கவர்னருக்கு அறிவுறுத்தும் வேலையை இந்தக் கார்யாலயம் மேற்கொண்டது. அநேகம் தடவை மந்திரிகளுடைய முடிவான யோசனைகள் மறுபடியும் பரிசீலிக்கப்பட்டுப் புதிய சிபார்சுகளைச் செய்வதோ அல்லது விட்டுப்போனவைகளைக்கவனிக்கும் முறையில் கவர்னர் கையெழுத்திட்டுத் திரும்பவும் எங்களுக்கு வரச்செய்வது இதற்கெல்லாம் இடம்கொடுத்துச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. மாகாண ஆட்சியின் பொறுப்பு முற்றிலும் கவர்னரின் முடிவான அபிப்பிராயத்திற்கும், தீர்ப்புக்கும் உள் அடங்கியது. ஆகையால் தாம் இஷ்டப்பட்ட எந்த விஷயத்திலும் தலையிட கவர்னருக்கு அதிகாரம் உண்டு. ஊழியர்களின் (சர்விஸ் ஆட்கள்) நிலையைப் பரிசீலிக்க, அவர்கள் குறையை மாற்ற, நீக்க, எல்லாவற்றிற்கும் மந்திரிகளைக் காட்டிலும் மேலான அதிகாரம் கவர்னருடையது. இந்தச்சிக்கல் ஒழுங்காக நடைபெற இருவருடைய நட்பும், நல்லுறவும் வேண்டும். பிரதம மந்திரி ராஜாஜியும், கவர்னர் எர்ஸ்கின் பிரபுவும்; ஏகமனதோடு வேலை செய்ததால் அவர்களுடைய கார்யாலயங்களும் அவர்கள் கருத்தை அறிந்து தக்கபடி நடந்தன. சென்னையில் அநேகமாக இம்முறை ராஜாஜியின் சிறந்த பகுத்தறிவினால் வெகு நாட்களுக்குப் பிளவு உண்டாகாமல் வேலை செய்தது. நாங்கள் வேலையை விடும் சில மாதங்களுக்கு முன்னால், கவர்னர் கார்யாலயத்தில் சில அதிகாரிகள் வேலை மாறினார்கள். மிஸ்டர் ரூதர்போர்டுதுரை கவர்னர் காரியதரிசியானார். அதன் பிறகு கவர்னர் கார்யாலயத்திற்கும், எங்களுக்கும் கடிதப் போக்கு வரவும், சர்க்கார் கட்டுக்கள் போக்கு வரவும் அதிகமாயின. விபரீதமான சில வியாக்யானங்களும் கிளம்பின. எனினும் ராஜாஜி இவைகளைத் தகுந்தபடி கையாண்டு வந்ததால் நிலைமை கைமீறி விடவில்லை. வேலை வெற்றிகரமாகவே நடைபெற்றுவந்தது. நாங்கள் நிறைவேற்றப் போட்டிருந்த திட்டம் பல குறையாகவே நின்றுவிட்டன. ஸ்ரீமான் பிரகாசம் கொண்டுவரவிருந்த ஜமீன் குடிகள் சட்டம், இந்து தர்ம பரிபாலன சீர்திருத்தச் சட்டம், தொழிலாளர் சம்பந்தமான பல சட்டங்கள், முதலியன எல்லாம் வெகுதூரம் வேலை நடந்திருந்தும், திடீரென ராஜிநாமா செய்ய ஏற்பட்டதால் எல்லாம் நின்றுவிட்டன. சட்டங்களில் விவசாயிகள் கடன் சட்டம், சுகாதாரச் சட்டம் இரண்டும் தற்பொழுதிருக்கும் கவர்னர் ஆட்சி முறையில் மாற்றி அமைக்கப்படவில்லை. ஆலயப்பிரவேசச் சட்டம் காங்கிரஸ் மந்திரிகளைத் தவிர மற்றவர்களால் நிறைவேற்றமுடியாது. பல நிபந்தனைகள் கொண்டது. அவைகளைத் தாண்டுவதற்குத் பொதுமக்கள் ஊக்கம், விடாமுயற்சி, ஆர்வம் எல்லாம் தேவை. யுத்த காலத்தில், சக்தி முழுவதையும், யுத்தத்தில் செலவிட வேண்டிய மனோபாவமுள்ள ஆட்சியில், அதிலும் பொதுமக்கள் ஆதரவில்லாத ஆட்சியில், இந்தச் சட்டம் நிறைவேறாது. அந்தச் சட்டத்திலுள்ள நிபந்தனைகளின் பலத்தினாலேயே அநேக சட்டங்களையும், திட்டங்களையும் மாற்றிய கவர்னர் ஆட்சி, இந்தச் சட்டத்தை தொடவில்லை.

முற்றிற்று





**தாய்மார்களே!**

**உங்களுடைய குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளை நீக்கவும் தடுக்கவும்**

# கிரைப்-விட்-டி

மிகவும் அவசியமானது

*Distributors in Ceylon:-*

**LAJAPATHRAI STORES**

25/¼ Dam Street, Pettah, COLOMBO

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

***ராமையா***

இந்த வருஷம் நடந்திருக்கும் கலியாணங்களினால் அடுத்த வருஷம் நம் தேசத்து ஜனத்தொகை சுமார் நூறு கோடி பெருகப் போகிறது என்கிறான் அம்மாஞ்சி. அடடா, என்ன கலியாணங்கள், என்ன கச்சேரிகள், என்ன ஊர்கோலங்கள்! இருபது வயதுக்கு மேற்பட்டுள்ள பையன்கள் எல்லாருக்கும் கல்யாணம் ஆய்விட்டது, இருபத்தொன்பது முப்பது வயதில் கலியாணம் ஆகப்போகிறதா என்று காத்துக் கொண்டிருந்த பேர்வழிகள் கூட பரதேசி கோலம் போய் மாலைமாற்றி ஊஞ்சல் ஆடி நலங்கும் இட்டுவிட்டார்களென்றால், இன்னும் என்ன வேண்டும்!

ஒருவேளை அடுத்தவருஷம் மகாமகம் வருகிறதே அதினால் கல்யாணங்கள் நடத்த மாட்டார்கள் என்கிற பயத்தினாலோ, அல்லது, மோட்டார் கார், டைர், பெட்ரோல் இவைகளெல்லாம் "எஸ்ஸன்ஷியல் ஸர்விஸ்" காரப்பேர்வழிகளுக்கு மாத்திரம் தான் உண்டு, பாக்கிப்பேர்களுக்குக் கிடையாது என்கிற "கண்ட்ரோல்" வந்தமாதிரி, பெண்ஜாதிகள் "எஸ்ஸன்ஷியல்" ஆட்களுக்கு மாத்திரம் உண்டு, பாக்கிப் பேருக்குக் கிடையாது என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தினாலோ, அல்லது "எஸ்ஸன்ஷியல்" ஆட்களுடைய பெண்கள் மாத்திரம்தான் கலியாணம் கழிக்கலாம், பாக்கி பெண்களுக்கு "பர்மிட்" கிடைக்காது எனச் சொல்லிவிடுவார்கள் என்ற விபரீத பயமா? "அப்படியுங்கூட நடக்குமா, ராமய்யா" என்கிறான் அம்மாஞ்சி! நான் என்ன பதில் சொல்வது? ஏதோ பெட்ரோல் வேண்டும், டயர் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரு வக்கில் அல்லது வியாபாரி ரேஷன் ஆபீசரிடம் போனால் 'கிடையாது போம், நீர் "எஸ்ஸன்ஷியல்" அல்ல என்று அவர் சொல்லலாம்! என்பெண்ணுக்குக் கலியாணம் பண்ணலாமா, என்று கேட்டால், கூடாது போம், நீர் எஸ்ஸன்ஷியல் அல்ல, ஆதலால் உம்முடைய பெண்ணுக்குக் கலியாணம் எஸ்ஸன்ஷியல் அல்ல என்றும் சொல்லுவார்களா என்ன? சே, சே, நான் நம்பவில்லை!

எதற்கு வேண்டுமென்றாலும் கண்ட்ரோலும், ரேஷனும் வைக்கட்டும், எடுக்கட்டும்—.

இப்பொழுது முக்கியமாக நமக்கு வேண்டிய காரியங்கள் இரண்டு. 1. சங்கீதக் கச்சேரிகளுக்கு ரேஷன் வேண்டும். 2. சங்கீத வித்வான்கள், வித்வாம்ஸினிகள் (அந்த மாதிரி ஒருவார்த்தை இருக்கோ, இல்லையோ) கேட்கும் தொகைகளுக்குக்கட்டாயம் கண்ட்ரோல் வேண்டும்—அடேய்யா! 500ரூபாய்க்கு குறைந்து ரேட் கிடையாதாம். 1000 ரூபாய் என்று வாய் கூசாமல் கேட்கிறார்களாம்! நாக்கில் நரம்பு இல்லாமல் தொகைகள் கேட்பதுடன், வாயிலிருந்து வரத்தகாத ஸாஹித்யங்களைப் பாடிவிட்டு, கண்டத்திலிருந்து வெளிக் கிளம்பக் கூடாத சப்தங்களையும் வெளிக் கிளப்பிவிட்டுப் போய்விடுகிறார்கள். இவர்களும், இவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து இத்தகைய ஒழுக்கத்தைப் பெருக்கடிக்கிறார்களே அவர்களும், ஸங்கீத அபிமானிகளாம்!

"கொடுப்பவர் ஒருவர், வாங்குபவர் ஒருவர், அதில் உனக்கென்ன கஷ்டம், அம்மாஞ்சி? வக்கில்களுக்கும் வைத்தியர்களுக்கும் ஏராளமாகக் கொடுக்கிறார்களே, அவர்களைக் கண்டு நீகசந்து கொள்ளவில்லையே? ஸங்கீத வித்வான்களுக்குக் கொடுத்தால் மாத்திரம் நீ ஏன் வருத்தப்படுகிறாய்? பாவம் அவர்களும்தான் பணப்பெருக்கு அடையட்டுமே" என்று நான் கேட்க,

அம்மாஞ்சி: "உலக்கைக் கொழுந்தே, சொல்வதைக் கேள். வக்கில்களும் வைத்தியர்களும் எல்லோருக்கும் தேவையல்ல, வீண் வியாஜ்ஜியக்காரன் பணத்தைக் கொட்டத் தான் வேண்டும். வைத்தியர்களுக்குக் கொடுப்பதும் வ்ரயம் என்பார்கள்! பூர்வ ஜன்ம பாப விமோசனம் அல்லது முப்பாலும் துஷ்கிருத்திய பலம் ஆகவும் இருக்கலாம். ஸங்கீதமும் ஸங்கீத வித்துவான்களும் சகலருக்கும் வேண்டிய கலா நிலயங்கள். இவைகளுடைய விலைகளை விபரீதமாக உயர்த்துவது தர்மத்துக்கும் நாகரிகத்துக்கும் விரோதமான ஆசாரம்! உயிர் வாழ்க்கைக்கு அவசியமில்லாத வஸ்துக்கள் விலை உயர்ந்து போய்விட்டதால் கேடுவராது. ஆதலால் தான் ராஜாங்க முறையில் அரிசி, உப்பு, சர்க்கரை, துணி இத்தகைய வஸ்துக்களுக்குக் "கண்ட்ரோல்" என்கிற கட்டுதிட்டம் விதித்திருக்கிறார்கள். அதுபோலவாகும் ஸங்கீதம். இது சர்க்காரால் நடவாத காரியம்.

நலம் தெரிந்து, நல்வாழ்க்கையறிந்து, குணம் தெரிந்து, குடிவாழ்க்கையில் கருத்துள்ள பெரியோர்கள் ஸங்கீதத்தின் சிறப்பைக் குறைக்காமல், சகலருக்கும் இலகுவாகக் கிட்டுமாறு, பணத்தால் அல்லாது செல்வாக் கால் மட்டுமே விருத்திசெய்யவேண்டும்'' என்றுன்.

பட்டணத்தில் சென்ற இரண்டு மாதங்க ளாக நடந்த கல்யாணங்களில் நடைபெற்ற ஸங்கீதக் கச்சேரிகளைக் கேட்டவர்கள் இந்த விஷயத்தைச் சிறிது கவனித்து ஆலோசிக்க வேண்டும். பாட்டுக் கச்சேரி இல்லாத கலி யாணம் ஒன்றுகிலும் இல்லை. முகூர்த்தம் காலை —மணிமுதல் —மணிவரையில்! மியூ ஸிக் மாலை 5 மணி அல்லது 6 மணி. சில கலி யாணங்களில் ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள், நான்கு நாளும் கச்சேரி. வழக் கம்போல் உள்ளவை மேடை, நாற்காலிகள், வெட்டி ஆசாமிகளுக்கு ஜமக்காளங்கள், வீதியில் உள்ள காலிப்பயல்களுக்கு "லௌட் ஸ்பீகர்கள்"—உள்ளே நுழையும்போது மல்லி கைப்பூ மாலை, சந்தனம்; ஐந்து நிமிஷங்கள் உட்காருவது; வெளியே வரும்போது காகி தப் பையில் ஒருதேங்காய், இரண்டு வெற் றிலை, 1¼ பாக்கு, இவைகளுடன் திரும்புவது. ஆகக்கூடி முழுக்கச்சேரியும் கேட்பது ஸங் கீத வித்துவான், பக்கவாத்தியக்காரர்கள், அவர்களுக்குச்சோடா உடைத்துக் கொடுக்க வும் குடிக்கவும் உள்ள ஆசாமிகள்—பெண் ணுக்குத் தகப்பனுர் தாயார் பேஜாராக நின்றுகொண்டிருப்பார்கள். பிள்ளைக்குத் தாயார் அவருடைய சம்பந்திகளைக் கவனித் துக்கொண்டிருப்பார். தகப்பனுர் வியாதியஸ் தராக இருந்தால் அவருடைய டாக்டருக்கு உபசாரம் செய்வார், வக்கிலாக இருந்தால் பிரதானமான கக்ஷிக்காரரைக் கவனிப்பார், உத்தியோகஸ்தராய் இருந்தால் தனக்கு மேல் அதிகாரிகளை வரவேற்பார், வியா பாரியாயிருந்தால் தம்க்கு உபகாரமாயிருப் பவர்களை விழுந்து விழுந்து உபசரிப்பார், கம்பெனி உத்தியோகஸ்தராயிருந்தால் துரை துரைசானிகளுக்கு மாலைகளைப்போடுவார். இப்படிப் பலவிதமாக நடக்கும். மாப்பிள்ளை கம்பளி ஸூட் போட்டுக்கொண்டு வெயர்த் துப்போய் விசிறிக்கொண்டிருப்பான். கலியா ணப்பெண்டிஷ்யூஸாரியைஅணிந்துகொண்டு ஸாதுவாகப் பொச் பொச் என்று கண்களை மூடி மூடித் திறந்துகொண்டு உட்கார்ந்திருக் கும். ஸந்தர்ப்பமோ கலியாணம், சந்தடியோ சொல்லத் தகாது. கச்சேரியைக் கேட்பவர் களோ கிடையாது. இனி ஸங்கீதம் எத் தகையது? அரியக்குடி ராமானுஜய்யங்கார் கச்சேரி என்று வைத்துக்கொள்வோம். கட் டாயம் இந்த மூன்று கீர்த்தனங்கள் உண்டு. அதாவது எவரினை அவதாரம் எத்திதிவோ, ராமநன்னுப்ரோவரா, நேபொகடகுண்டே. ஜீஎன்பீ என்பீர்களோ? சரி, ஏதா உனரா, பாலசுப்ரமண்யம் பஜேஹம்! முசிரி என் பீர்களோ? எந்த வேடுகோ ஓராகவா, ம. ஷா. என்பீர்களோ? என்னகானு ராம பஜன, அல்லது அதேமெட்டில் இன்பமூட்டி துன்பங்காட்டி என்றெல்லாமோ ஒரு பாட்டு உண்டோ அந்த ஸாஹித்யம்! டீ. கே. பட் டம்மாள் கேழ்ப்பீர்களோ? கட்டாயம் வேத நாயகம் பிள்ளையின் துச்ச ஸாஹித்யங்களில் இரண்டாவது பாடாமல் விடமாட்டார். சமீபமாக ஒரு கலியாணத்தில் வக்கில்களைத் திட்டி ஒரு பாட்டுப் பாடினுர். அதற்கு எவ்வ ளவு கரகோஷம். முக்கியமாக ஸ்திரீகள் கூட்டத்தில்தான் பலே கைதட்டல். அங்கி ருந்த ஸ்திரீகளில் முப்பாலும் வக்கீல்களின் ஸம்ஸாரங்கள் தான்! இப்படியெல்லாம் நடந் துகொண்டிருக்கின்றன.

மொத்தமாகக் கவனித்தால் கலியாணங் களில் ஆத்மார்த்தமாக ஒரு காரியம்கூட செய்வதில்லை என்று ஏற்படுகிறது. நாகசுர மேளம் வேண்டும்; அது எத்தகையதாயிருந் தாலென்ன? ஊதுபவன் ஏ. ஆர். பி. ஸைரன் மாதிரி ஊதினுல்தான் என்ன? முகூர்த்த வேளையில் மோக்ஷமுகலதா வாசித்தால் என்ன? உயர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் வீட் டுக் கலியாணத்தில் சிவதீக்ஷாபரு என்ற கீர்த்தனை ஊதினுலும் என்ன? விறுவிறுப் பாகச் சப்தம் இருக்கவேண்டும். சமயோசித மாகக் கொட்டுமேளம் கொண்டவேண்டும்.' இவ்வளவுதான் அவன் செய்யவேண்டிய வேலை. அவன் சிறிது ஸுஸ்வரமாக வாசிக் கக்கூடியவனுயிருந்துவிட்டால் அவனுக்குத் திருஷ்டி பரிஹாரம்போல் ஒரு பலபட்டரைப் "பாண்டு" வாத்தியம் வைத்துவிடுவார்கள். பத்துப் பயல்களாகச் சேர்ந்துகொண்டு "தி சார்ஜண்ட் மேஜர் மேட் லவ் டு மீ" என்ற இங்கிலீஷ் பாட்டையோ, அல்லது "ராமுனி ஸமான மெவரு" என்ற கீர்த்தனையை, "ராக முகுனி ஸகமக மானமெகவகரு" என்பது போல் ஊதித் தள்ளிக்கொண்டிருப்பார்கள். அச்சாபீஸில் பொறி பறக்கும்படி அடிக்கச் சொல்லி இரண்டாயிரம் இன்விடேஷன்கள் அடித்து, அறிந்தவர்களுக்கும் அறியாதவர் களுக்கும் அனுப்பி, கலியாணத்துக்கு முன் பேப்பரில் போட்டு, கலியாணம் கழிந்தபின் தம்பதிகளின் போட்டோவையும் பேப்பரில் பதிப்பித்து, ஆயிரக்கணக்காக வந்தவர்களில் பிரபலமானவர்களின் பெயர்களைக் குறித்து வெகு விமரிசையாகக் கலியாணம் நடந்த தாகவும், "நியூமரஸ்" பிரஸண்டுகள்

கிடைத்ததாகவும், அவைகளைப் பிரத்தியேகமாக அங்கிகரிக்க அவகாசமில்லாமலிருப்பதாகவும் பிரசுரித்து விடுகிறார்கள்! இவையெல்லாவற்றிலும் எவ்வளவு ஆத்மார்த்தம் உண்டு என்று நீங்களே யோசியுங்கள்!

பணத்தைச்செலவு செய்து பெரிய காரியங்களை நடத்துபவர்கள் இவ்வளவு சிரத்தையற்று நடந்துகொண்டால், பணத்தைப் பெற்றுக்கொண்டு பாடிவிட்டுப் போகிற வித்வான்களுக்கு மாத்திரம் ஆத்மார்த்தம் எங்கிருந்து உண்டாகும்? சங்கீதம் பொருத்தமாயிருந்தாலென்ன, அஸம்பாவிதமாக இருந்தாலென்ன, கேட்டு அனுபவித்தாலென்ன, அப்படிச் செய்யாமற் போனாலென்ன? பணத்தைச் செலவு செய்தவர் கருத்து என்ன? சம்பந்திகளுக்கும், சுற்றிலுமுள்ளவர்களுக்கும் திருப்தியாகும்படி சிறப்பாகவும், பலவிதத்திலும், ஆயிரக்கணக்காகப் பணத்தைச் செலவழித்துக் கலியாணம் செய்ய வேண்டும் என்பது. "வெளுத்துவாங்கி விட்டார் ஸார்! இருபது ரூபாய்க்குக் குறையாது என்று எஸ்டிமேட் போட்டார்! (இருபது என்றால் இருபதாயிரம்) முப்பது வரைக்கும் ஆய்விட்டது! பந்தல், மேளக்காரன், கச்சேரிகள் இவைகளுக்கு மாத்திரமே ஐயாயிரம் ஆய்விட்டது! பாருங்களேன், முதல்நாள் ம. ஷ. கச்சேரியன்று மூவ்வாயிரம் தேங்காய் செலவழிந்து கடைசியாகத் தேங்காய் இழுத்துண்டுடுத்துன்னா அதிலேயே பாருங்களேன்"— என்று பலவாறு எல்லோரும் பேசிக்கொள்ளுவார்கள்! இதுபோதாதா?

சங்கீதக் கச்சேரிகள் ஒருவாறு நின்றுவிடும் இன்னும் இரண்டு தினத்தில்; பிறகு இருக்கவே இருக்கின்றன சபைகளின் கைங்கரியங்கள். இவ்வளவு அதிகமாக ஸங்கீதம் இருக்கக்கூடாது என்கிறான் அம்மாஞ்சி. செவிகளுக்கு அஜீரணம் வரும்படியாகவா ஸங்கீதம் கேட்பது? ஸங்கீதத்துக்குக் கட்டாயம் கண்ட்ரோல் வேண்டியதுதான். நிஜமான ரஸிகர்கள் பெருகவில்லை; நல்ல வித்துவான்களும் வெகு குறைவு. ஆனால் சபைகள் மாத்திரம் பெருகிவிட்டன, கச்சேரிகளும் அதிகரித்துவிட்டன. ஆதலால் சபைகளை நடத்துவதற்கு ஸங்கீதம் தெரியாது வீண் ஜம்பப்பேர்வழிகள் ஏராளமாகக் கிளம்பிவிட்டனர். அவர்களுக்கு ஏற்றாற்போல் கச்சேரிசெய்ய ஆட்களும் அதிகரித்துவிட்டனர். யாராயிருந்தாலும்சரி, எப்படிப் பாடினாலும் சரி 'என்ன அழகு, எவ்வளவு பேஷா இருந்தது' என்று மெச்சிப் பேசவும் எழுதவும் மேதாவிகள் விபரீதமாக அதிகரித்துவிட்டனர். இனி நம் கர்னாடக ஸங்கீதத்துக்கு என்ன குறைவு? ஸங்கீதக் கச்சேரி இல்லாத சம்பவம் ஒன்றாகிலும் கிடையாது! கலியாணங்களில்தான் கேட்க வேண்டியதில்லை. அம்மாஞ்சியினுடைய வண்ணான் வீட்டில் நடந்த ஒரு கலியாணத்தில்கூட அவனுக்குத் தகுந்த ஒரு ஸினிமா ஸெட் கிடைத்து விட்டது; பத்திரிகையில் "மியூஸிக்" 6 மணி (மாலை) என்று அச்சிட்டு விட்டான்! பிறகு உபநயனம், அக்ஷராப்யாஸம், முடி இறக்குதல் மூக்குக்குத்தல், எல்லாவித கலியாணங்களுக்கும் கச்சேரிகள் உண்டு. காப்பி ஓட்டல் திறந்தால் கச்சேரி; கிரஹப்ரவேசம் செய்தால் கச்சேரி; கிளப்பில் கவர்னருக்கு டீ பார்ட்டி யென்றால் கச்சேரி; யுத்த பண்டுக்குக் கச்சேரி; இனி நடக்கப்போகும் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் மெமோரியல் பண்டுக்கும் கச்சேரி. சங்கீத அபிவிருத்திக்காக நாம் உழைக்கிறோமா, அல்லது நம்முடைய அஸந்தர்ப்ப விருத்திக்காக ஸங்கீதம் உழைக்கிறதா என்று புலன் படவில்லை.

பொருத்தம் என்பது ஹிந்துக்களுடைய ஒழுக்கங்களிலிருந்து கழன்று ஓடிவிட்ட மாதிரி இருக்கிறது என்கிறான் அம்மாஞ்சி! நேயர்களின் அபிப்பிராயம் என்னவோ?


குளிர்ந்த வாசனையுடன்

உயர்ந்த முறையில் தயாரித்த

**எவரெஸ்ட்** (ஸ்பெஷல்)

&

**அமர்ஜோதி**

—: பேஸ் பவுடர்கள் :—

சந்தனாதி — அரைக்கீரை விதை — பிருங்காமலக தைலம் — மட்டிப்பால் பத்தி வில்லைகள் — அரகஜா — சந்தனப் பவுடர் முதலிய வாசனாதிரவியங்கள்

தயாரிப்பவர்கள்:

**வி. ராமய்யர் அண் கோ.,**

பர்பியூமர்ஸ்

கும்பகோணம்.

# காலம் மாறிவிட்டது!



1780-ம் ஆண்டில் அப்ரஹாம் லூயி பிரெகு என்பவர் அவர் பெயரிட்ட சுருள் ஹேர் ஸ்பிரிங்கை உற்பத்தி செய்தார்




பாலன்ஸ் சக்கரத்தை ஹேர் ஸ்பிரிங் கட்டுப்படுத்துகிறது. மனித ரோமத்தின் கனத்தில் மூன்றில் ஒரு பங்குதான் ஹேர் ஸ்பிரிங்கில் அமைக்கப்பட்டுள்ள எஃகின் கனம். இத்தகைய நுட்பமான பாகத்தை அமைப்பது வெகு திறமை வாய்ந்த தொழிலாளிகளால்தான் சாத்தியம். இந்தியப் பொது மக்களுக்காக வெஸ்ட் எண்டு கடிகாரங்களை தயாரிப்பவர் இத் தொழிலாளிகளே



பிஜௌ மினியேச்சர் 'D'
18 காரட் கட்டித் தங்கம் கனமான கேஸ்
ரூ. 400



பிஜௌ ஸெமி தின் — 8" ஸைஸ்
18 காரட் கட்டித் தங்கம் கனமான கேஸ்
ரூ. 310

காலதாமதமாக வருவதால், விளம்பரப்படுத்தப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமல்ல. ஆயினும் ஸ்டாக்கிற்கு ஏற்றவாறு ஆர்டர்கள் பூர்த்தி செய்யப்படும்

## WEST END WATCH Co.
*Bombay* - *Calcutta*

## வெஸ்ட் எண்டு வாட்ச் கோ.
பம்பாய் — கல்கத்தா.

# பொம்மை, இது என்ன பொம்மை?

ஆர்ஜீ

"ஐயா, இந்தப் பொம்மையைப் பார்த்திங்களா? ரொம்ப அழகான பொம்மை. பாத்தா, கூப்பிடறாப் போலேயிருக்கு! கண்ணைப் பாருங்கோ ,சிமிட்றதுன்னா! என்ன அழகு, என்ன அழகு! எத்தனையோ சாமான்களை ஏலம் போட்டிருக்கேன். ஆனால் இந்தமாதிரி ஒரு இந்திர ஜாலப் பொம்மை என் கைக்கு வந்தது கிடையாது. நிக்கிற நிலையெப் பாருங்கோ. என்ன வனப்பு, ஒய்யாரம். நாம் சிரித்தா அது கூட சிரிக்கிறாப்போல இருக்கு! ஆனால் நாம் அழுதால் அது அழுமோ என்று கேக்கலாம். (சுற்றிப் பார்த்துக்கொண்டே) என்னத்துக்கையா அழணும்! இந்தப் பொம்மை கையிலிருந்தால் ஒரே ஆனந்தம்தான். இதற்கு விலை ரூ. "100" என்று ஏலம் கூறுபவன் சொல்லி அந்த ஹாலில் இருப்பவர்களையெல்லாம் ஒரு முறை பார்த்தான்.

அன்று நடக்கும் ஏலம் விசேஷமாகவிருந்ததால் ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது. ஆனால் ரூபாய் நூறு என்ற மாத்திரத்தில் அவ்வறையிலிருந்தவர்களுக்குள் ஒருவனுக்கே மனம் திடுக்கிட்டது. அவன்தான் ராஜு என்று அழைக்கப்படும் ராஜாராவ். அவன் முதல் நாளே வந்து அந்தப் பொம்மையைப் பார்த்துவிட்டுப்போயிருந்தான். அதனால் அவனுக்கு அந்த ஏலம் கூறுபவன் சொன்னதெல்லாம் பொய்யில்லை, மெய்யென்று நன்கு தெரியும். அன்றைக்கு அவன் அங்கு வந்திருந்ததும் அந்தப் பொம்மைக்காகவே. ஆனால் கையில் நூறு ரூபாயிருக்கவில்லை, அதனால்தான் திடுக்கிட்டான். எங்கே அந்தப் பொம்மை, அந்த இந்திரஜாலப் பொம்மை தன் கையைவிட்டுப் போய்விடுமோ என்று பயந்தான்.

ஏலம் கூறுபவன்:— "என்ன ஐயா, ரூ. 100 ஒருவருக்கும் இஷ்டமில்லையா? நல்ல சாமான் என்றால் இப்படித்தான் ஏமாந்து போவேங்கோ! எனக்கென்ன ஐயா, ரூ. 50. (எல்லோரையும் ஒருதரம் பார்த்துவிட்டு) அதுவுமில்லையா? ரூ. 25" என்றான்.

ராஜாராவ் சட்டென்று தன் கையைத் தூக்கினான்.

ஏலக்காரன்—சந்தோஷமாய் " அப்படி வா ஐயா, வா, ரூ. 25—ரூ. 25—"

ஓர் கிழவர்:— "ரூ 30—"

ஏலக்காரன்—"இப்போது தான் ருசி தட்டறாப்போலேயிருக்கு! உம்...... ரூ. 30—"

ராஜாராவ்:— "ரூ. 35—"

ஏலக்காரன்—"போட்டின்னா போட்டி, ஒரு பொம்மை கண்ணாட்டிக்குப் போட்டி!" (சபையில் சிரிப்பு)

கிழவர்:— "ரூ 40—"

ஏலக்காரன்—(ராஜாராவைப் பார்த்து) "என்னய்யா, ரூ 40— மேலெ உண்டா? இது ஒரே பொம்மைதான். இதேப் போலே வேறே இல்லை. இருக்கவும் முடியாது. என்ன?"

ராஜு—"ரூ 50—" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

ஏலக்காரன்—"சபாஷ். ரூ 50— (கிழவர் பக்கம் பார்த்து) என்னா ஸார், ரூ 50. அது மலிவுதான். மேலே உண்டா இல்லையா? (கிழவர் தலை அசைக்க) போச்சா, உமக்கில்லை, அதிர்ஷ்டம் வேண்டும், ஐயா, அதிர்ஷ்டம் ரூபா 50— ரூ 50— (ஒருவரும் மேல் கூறாதபடியால் ஒரு தரம் இரண்டுதரம். மூன்று தரம்) ரூ 50-"என்று சொல்லிப் பொம்மையை ராஜாராவுக்குக் கொடுத்து விட்டான்.)

ராஜு பொம்மை கிடைத்ததோ இல்லையோ ஏதோ காணாததைக்கண்டது போலும் கிட்டாதது கிட்டினது போலும் சட்டென்று எழுந்து வீட்டுக்குச் சென்றான். அங்கே தன் அறையில் அந்தப் பொம்மையை வைத்துவிட்டு அதை உற்று நோக்கின வண்ணமாகவேயிருந்தான். அதன் அழகு அவன் மனதைப் பறித்துவிட்டது. அன்றுமுதல் ஒவ்வொரு நிமிஷமும் அதேதான் அவன் கண் முன். மனதிலுங்கூட அவ்வுருவேதான். வீட்டிலிருக்கும் வரைக்கும் அதைத்தான் பார்த்துக்கொண்டிருப்பான். என்ன என்னெல்லாமோ நினைப்பான்.

நித்திரையிலும் அந்த உருவம்தான். அது அவன் கண்களைவிட்டு நீங்கவேயில்லை. அதைப் பார்ப்பான், சிரிப்பான். கண்களில் நீர்வரும். துடைப்பான். பின்பும் பார்ப்பான். பின்னும் சிரிப்பான். எழுந்து சற்று நடப்பான். பின் பக்கமாகத் திரும்பிப் பார்ப்பான். சிரிப்பான். தனக்குத்தானே தலையை அசைத்துக் கொள்வான். இப்படி ஓர் பைத்தியக்காரன்போல் அன்றுமுதல் நாடகம் நடத்த ஆரம்பித்துவிட்டான் ராஜு.

அவனுக்கு ஓர் தோழன், மோகன் ராவ் என்று பெயர். ஆறு மாதம் முன்தான் கல்யா

ணம் ஆயிற்று. ஆனந்தமாக இல்லறம் நடக்கிறது.

ராஜுவுக்கு வயது 30 இருக்கும். கல்யாணமில்லை. ஓர் பத்திரிகை ஆபீஸில் வேலை. மோகனுக்கும் அங்குத்தான் வேலை.

மோகன் ராஜுவின் நடவடிக்கைகளில் ஓர் மாறுதல் உண்டாயிருப்பதைக் கண்டு அதன் காரணமறிய விருப்பம் கொண்டான். ராஜு முன்போல் அவனிடம் பேசுவதில்லை. அவன் வீட்டிற்கும் வருவதில்லை. ஆபீஸிலும் எவ்வளவு கலகலப்போடிருந்தானோ அவ்வளவுக்கவ்வளவு மௌனியாய்விட்டான். இதன் காரணம் தெரியாததால் மோகனுக்குச் சற்று வருத்தம். ராஜுவுக்கு என்ன மன நோயோ என்று திகைத்தான். கேட்டால், "ஒன்றுமில்லை நான் நன்றாகத்தானேயிருக்கேன்" என்பான் ராஜு.

மோகன் ராஜுவின் தாயாரைக் கண்டு ஒரு நாள் இது விஷயமாகப் பேசினான். அவன் தாயாரும் தானும்அம்மாறுதலைக்கவனித்திருப்பதாயும் ஆனால் அதன் காரணம் தெரியவில்லையென்றும் சொன்னாள். "எப்போ பார்த்தாலும் ஒரு பொம்மையைக் கையில் வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டேயிருக்கான். அதிலே என்ன இருக்கோ என்னமோ" என்று சொன்னாள். இதைக் கேட்டதும் மோகன் ராஜு அறைக்குச் சென்று அவன் இல்லாதபோது அந்தப் பொம்மையைப் பார்வையிட்டான். கொஞ்சம் பார்த்தான். கொஞ்சம் உற்றுப்பார்த்தான். கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் ஆழ்ந்து பார்த்தான். ஏதோ கொஞ்சம் புன்சிரிப்புச் சிரித்தாப்போல் தோன்றிற்று. கண்களில் ஜலம் வரும்படி அடங்காச் சிரிப்பு உண்டாயிற்று. அவன் மனதில் என்ன உணர்ச்சி உண்டாயிற்றோ என்னமோ. நடந்ததைத்தான் கண்டோம். அங்குமிங்கும் பார்த்தான். சட்டென்று அப்பொம்மையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றுவிட்டான் மோகன்.

பிடித்தது பைத்தியம் மோகனுக்கு. தன் அறையில் கதவைத் தாளிட்டுக்கொண்டு உட்கார்ந்தான். பொம்மை மடிமேலிருந்தது.


# "Grow more Vegetable"

யுத்தம் காரணமாக உணவுப்பொருள்கள் கிடைக்கவில்லை என்று ஏன் கவலைப்படவேண்டும்! உணவுப்பொருள்களை அதிகமாகப்பயிர் செய்யுங்கள் என்பது ஓர் தேசீய வேண்டுகோள். அதையேதான் **ஸ்ரீனிவாஸா கார்டன்ஸாரும்** சொல்கிறார்கள். சொல்வதோடு மட்டுமில்லாமல் பொறுக்கி எடுக்கப்பட்டதும், உயர்ந்ததுமான **நாட்டுக் காய்கறி விதைகள், இங்கிலீஷ் காய்கறி விதைகள்,** உயர்ந்த ஜாதி **ஒட்டுமாங்கன்றுகள்** பலவித **பழச்செடிகள், புஷ்பச்செடிகள், கொடிகள்,** பலரகமுள்ள **ரோஜா** தினுசுகள் கண்ணைக்கவரும் **குரோட்டன்ஸுகளும்** சப்ளை செய்கிறார்கள். — **கேட்லாக் இனாம்**

புரோப்ரைட்டர்:— K. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

## ஸ்ரீனிவாஸா கார்டன்ஸ்

கடலங்குடி P. O. (Via.) நாச்சியார்கோவில்

பார்த்தான் சிரித்தான்; கண்களைத் துடைத்துக்கொண்டான், எழுந்தான், உட்கார்ந்தான். மறுபடியும் பார்த்தான் பொம்மையை; இதென்ன மகிழ்ச்சி; என்றைக்குமில்லாத ஆனந்தம்!

சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வறையின் முன் அவன் மனைவி வந்து கதவைத்தட்ட ஆரம்பித்தாள்.

மோகன்—"யார்?"

மனைவி—"யார், நாந்தான், என்ன பண்றேள். என்னிக்குமில்லாதே இதென்ன கதவைச் சாத்திக்கொண்டகள்?"

மோகன்—"நீலா! உனக்கென்ன வேணும் இப்போ? கொஞ்சம் காரியமாயிருக்குண்ணு கதவைத் தாளிட்டுக் கொண்டேன். உனக்கென்ன வேண்டும்?" என்று சற்றுக் கோபமாகக் கூறினான் போலிருந்தது நீலாவுக்கு.

நீலா—"என்ன கோபம்போலேயிருக்கே. என்னத்துக்கு? யார்மேலே? ஆபீஸிலிருந்து வந்தது முதல் இன்னும் காப்பி குடிக்கக்கூட இல்லையேன்னு வந்தா, இப்படிப் பேசுகிறேளே! என்ன ஆபீஸில் ஏதாவது நடந்ததா என்ன? நான்போறேன். உங்களிஷ்டம்" என்று சொல்லிவிட்டு அங்கேயே நின்றுகொண்டிருந்தாள்.

உள்ளே மோகன் மறுபடியும் தன் மயக்கத்தில் விழ ஆரம்பித்தான். அவன் சிரிப்பு நடப்பு எல்லாவற்றையும் நீலா கவனித்துக்கொண்டு ஆச்சரியப்பட்டவளாய் அங்கு நின்றுகொண்டிருந்தாள். இது நிற்க.

ராஜு வீட்டிற்கு வந்ததும் தன் அறையில் அப் பொம்மையைக் காணாமல் மனம் திடுக்கிட்டான். திடுக்கிட்டான் என்றால் போதாது. அவன் ஏதோ ஒன்றை உயிரோடு பறிகொடுத்துவிட்டாற்போல் பரதவித்தான். அங்குமிங்கும் தேடிக் கிடைக்காமல் கடைசியாகத் தன் தாயாரைக் கேட்க அவள் மோகன் வந்தான் என்று சொல்லவே, சட்டென்று மோகன் வீட்டிற்கு ஓட ஆரம்பித்தான்.

மோகன் வீட்டில் நீலா வெளியில் நிற்கிறாள், மோகன் உள்ளே பயித்தியக்கார வேஷம் ஆடுகிறான். ராஜு சமிக்ஞையாய் மோகன் எங்கே என்று கேட்க, அவள் உட்பக்கம் சுட்டிக் காட்டுகிறாள்.

ராஜு—"மோகன், மோகன், கதவைத்திற" என்று கூப்பிட்டதும் மோகன் திடுக்கிட்டுப் பொம்மையைப் பெட்டியில் ஒளித்துவைத்துக் கதவைத் திறக்கிறான். ராஜு உள்ளே சென்று அங்குமிங்கும் பார்க்கிறான்.

மோகன்—"ராஜு, என்ன பார்க்கிறாய்?"

ராஜு—"என்னவா, உனக்குத் தெரியாது, பாவம்! எங்கே அந்தப் பொம்மை?"

மோகன்—"எந்தப் பொம்மை? எனக்கு என்ன தெரியும்?"

ராஜு—"மோகன்! போறும் போறும் இந்தப் போலிவேஷம். மரியாதையாகக் கொடுத்துவிடு"

நீலா—"என்ன பொம்மையா? அதோ அந்தப் பெட்டியென்னமோ அவஸரமாகத் திறந்து சாத்தினாப்போலேயிருக்கே" என்றாள். ராஜு சட்டென்று அதைத் திறக்க அந்தப் பொம்மை கண்ணுக்குப் பட்டது. தாமதமென்ன? கையிலெடுத்துக்கொண்டு ராஜு போய்விட்டான். இவ்விடத்தில் என்றுமில்லாது மோகனுக்கும் நீலாவுக்கும் சண்டை ............சற்று நேரத்திற்குத்தான்!

ராஜு அந்தப் பொம்மையைப் பார்த்து, யோசித்ததாவது "இது என்ன நிஜமா, அல்லது கற்பிதமா? நிஜமென்றால் இவள்யார்? கற்பிதம் என்றால் இயற்றிய சிற்பி யாரோ?


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம், ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

ஒரு நாள் இவன் ஆபீஸில் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி ஒரு விளம்பரம் வந்தது. அது பின் வருமாறு:—

விளம்பரம்.

சற்றேறக் குறைய மூன்று வருஷங்களுக்கு முன் எனது வீட்டில் ஒரு திருட்டு நடந்தது. அதில் எவ்வளவோ நகை நட்டுக்கள், துணி மணிகள், இன்னும் பலவகைச் சாமான்கள் களவாடப்பட்டன. ஆனால் அதில் சிறு பொம்மையுமிருந்தது. அது ஒரு சிறுமியின் உருவம். அப்பொம்மையையாவது அல்லது அதைப் பற்றின துப்பு எதையாவது யாரும் அறிவித்தால் நன்கொடை அளிக்கப்படும்.

விலாஸம் கோடீச்வரராவ்

ராஜு அவ்விளம்பரத்தைப் படித்தான். மனதில் ரகஸியம் தெரிந்து கொண்டான். ஆபீசில் செலவு வாங்கிக்கொண்டு திடீரென்று கோடீச்வரராவ் இருக்கும் ஊருக்குப் புறப்பட்டான்.

கோடீச்வர ராவ் வீட்டுக்கும் வந்து சேர்ந்தான். அது ஓர் பெரிய மாளிகை. முன் புறத்தில் பெரிய தோட்டமும் உண்டு. வேலையாள் மூலமாய்த் தான் வந்ததைத் தெரியப்படுத்தி அனுமதி கிடைத்ததும் கோடீச்வரராவ் இருக்கும் அறைக்குச் சென்றான்.

கோடீச்வரராவுக்குக் குறைந்தது 50 அல்லது 55 வருஷமிருக்கும். தலை நரைத்து இருந்தது. ஏதோ மனத் துயரத்தால் இன்னும் பத்திருபதுவருஷம் முதிர்ந்தவராகக் காணப்பட்டார்.

கோ. ராவ்—......"ஐயா! நீர் யார்? உமக்கென்னவேண்டும்?"

ராஜு—"ஐயா, என் பெயர் ராஜாராவ். நான் இருப்பது......ஊர்."

கோ—"உம்" என்று சொல்லிவிட்டு எதையோ யோசிப்பதுபோல் காணப்பட்டார்.

ராஜு—"நீங்கள் ஓர் விளம்பரம் அனுப்பி இருந்தீர்கள் அல்லவா?" என்றான். உடனே அவர் ஆச்சர்யம் ததும்ப "ஆமாம். உமக்கென்ன தெரியும்?" என்றார்.


# சைபால்

CIBOL

(வெளி உபயோகத்திற்கு)

—முகப்பரு, சொரிசிரங்கு, வேனில்கட்டி,— பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் — சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கரை பிடிக்காது

— நறுமணம் உள்ளது —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

THE SOUTH INDIAN MFG. COY.

44, DHANAPPA MUDALY ST.

MADURA

ராஜு—"என்னிடத்தில் ஒரு பொம்மையிருக்கு. அதைப் பாருங்கள்" என்றான். தான் கொண்டுவந்திருந்த கைப்பெட்டியிலிருந்து அந்தப் பொம்மையை எடுத்து அவர்முன் வைத்தான்'

கோடீச்வரராவ் ஒரே தாவலாய் அதைக்கையில் பிடித்துக்கொண்டு ஓர் ஆனந்த தாண்டவம் புரிந்தார். ராஜு அர்த்தம் தெரியாமல் திகைத்து, இவர் தன்னைக்காட்டிலும் ஓர் பெரிய பைத்தியமோ என்று ஆச்சர்யமடைந்தான்.

கோ— (சிறிது நேரம் கழித்து), "ஐயா, தங்களுக்கு என் அன்பார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். தங்களுக்கு என்ன நன்கொடை வேண்டுமோ, கேளும். கொடுக்கத் தயார். என் உயிரையே எனக்களித்த உமக்கு என் உடைமையெல்லாம் சொந்தமே" என்றார்.

ராஜு— "ஐயா, ஒரே கேள்வி. அதற்குப் பதில் அளித்தால் போதும், எனக்கு ஒரு நன்கொடையும் வேண்டாம்" என்றான்.

கோ—"என்ன கேள்வி?"

ராஜு-"இந்தப் பொம்மை நிஜமா அல்லது கற்பனையா?"

கோ—"ஓகோ, அதுவா. இது நிஜம். என் கண்மணியின் உருவு."

ராஜு—(சற்றே திகைத்து) "கண்மணி யாரோ?"

கோ—"என் புத்திரி பத்மா."

'பத்மா! பத்மா!' என்று உரக்க கூப்பிட்டார்.

எங்கிருந்தோ "என்ன அப்பா" என்ற பதிலோடு யௌவனம் திகழ்ந்து அழகே உருவெடுத்து வந்தாற்போல் ஓர் யுவதி அவ்வறைக்குள் வந்தாள். பார்த்தான் ராஜு. பத்மாவும் பார்த்தாள். ராஜு சற்றே புன்முறுவல் செய்தான். அவளும் அப்படியே சிரித்தாள். அவனும் சிரித்தான்.

கோடீச்வரராவ் இதைப்பார்த்தார். இன்னும் ஆனந்தம். "பொம்மையும் கிடைத்தது, தன் பெண்ணுக்கு ஓர் மருமகனும் கிடைத்தான்" என்ற நினைவு போலும்!

கோ-ராவ்— "ராஜுராவ்! உமக்கு நன்கொடை வேண்டாம் என்றீர், அல்லவா? நல்லது நீர் எனக்குச்செய்த ஓர் மகத்தான காரியத்திற்கு நான் வெறுங்கையோடு உம்மை அனுப்புவது தகாது. உமக்கும் நான் ஒரு பரிசு அளிக்கப் போகிறேன். நீர் அதை மறுக்க முடியாது; எங்கே மறுத்திடும் பார்ப்போம்" என்று சொல்லிப் பத்மாவின் கரத்தை ராஜுவுக்களித்தார். ராஜு மெய் மறந்துவிட்டான். கனவே நினைவாகிவிட்டது. விழித்துப்பார்த்தான். மார்பில் ஓர் நவீனம். கிடப்பது தன் ஈஸிசேர். "ஹூம்" என்று எழுந்தான். கண்களைத் துடைத்தான். புஸ்தகத்தை வீசி எறிந்தான் மேஜை மேல்!




# புத்தக விமர்சனம்

## நாடகமணி மோலியர்

யோகிசுத்தானந்த பாரதியார் இயற்றியது. அன்பு நிலயப் பிரசுரம். விலை 0—13—0.

மோலியர் எழுதிய காதல்வைத்யன் என்ற நாடகத்தை நமது மேடைகளில் நடிக்கத் தக்க வாறு தமிழாக்கியுள்ளார் சுவாமி சுத்தானந்த பாரதிகள். மோலியரின் வரலாறும் அவர் நகைச்சுவையின் திறனும் விளக்கப்பட்டிருக் கின்றன. மோலியரியற்றிய வேறு இரண்டு நாடகங்களையும் சுவாமிகள் மொழிபெயர்த் திருப்பதாகத் தெரிகிறது. "ஆஷாடபூதி" "வம்பிகாதலன்" என்ற மகுடங்களுடன் விரைவில் வெளிவரும் என்று அறிந்து மகிழ் கிறோம்.

## ஸ்ரீ சங்கர விஜயம்

யோகி சுத்தானந்த பாரதியார் அருளியது. விலை 0—5—0. அன்புநிலய வெளியீடு.

அன்பு நிலயத்தாரால் ஸ்ரீ சங்கர ஜயந்தியை ஒட்டி வெளியிடப்பட்ட இந்நூல் ஓர் ஒளிச் சுடராக விளங்குகிறது. ஸ்ரீ சங்கரருடைய வரலாறும் உபதேசமணிகளும், ஸ்ரீ நரஸிம்ம பாரதிகளுடையவும் கும்பகோணம் ஸ்ரீசங்கரா சாரிய சுவாமிகளுடையவும் ஆன பெரு மைகள் விளக்கப்பட்டுள்ளன. யாவரும் படித் துப் பயன்பெறவேண்டிய அரிய நூல் இது.

## தமிழிசை முழக்கம்

ஆசிரியர் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். அன்பு நிலையப் பிரசுரம். விலை 0—9—0.

தமிழர்கண்ட ஏழிசையும் பன்னிருராசியும், பண்களும் பாணிகளும் பிற்காலம் கர்நாடக இசையாகி வடக்கேயும் சென்று பார்ஸி அரபி யுடன் கலந்து இந்துஸ்தான் இசையுமானது என்று சுவாமிகள் இப்புத்தகத்தில் வாதிக் கிறார். இதையும் நம்பும் மனிதர்கள் இருக் கிறார்களே, அவர்களுக்கு இது பயன் படட்டும்.

## அபிராமி அந்தாதி

திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடு

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீ னத்தின் பாதுகாப்பில் உள்ள கோயில்களில் ஒன்று, திருக்கடவூர் அபிராமி அம்பிகை கோயில். அவ்வூரில் 250 ஆண்டுகளுக்கு முன் அபிராமி பட்டர் என்ற தேவி உபா ஸகர் இருந்தார், தேவியின் அருளுக்குப் பாத் திரமானார். அவரது அனுபவ வெளியீடாக அமைந்தது தான் அபிராமி அந்தாதி என்னும் இந்நூல். தேவி உபாஸகர்களால் மிகவும் போற்றப்படுவது.

திருப்பனந்தாள் காசிமடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்திஸ்வாமிகள் திருவுள்ளப் பாங்கின்படி, கலைமகள் ஆசிரியரும், பண்டி தரும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் முதலிய தேவி உபாஸனை நூல்களில் தேர்ச்சி பெற்றவரு மான கி. வா. ஜகந்நாதன் அவர்களால், உரை முன்னுரை, ஆராய்ச்சி உரை முதலியவைகளு டன் விளங்கும் இந்நூல், திருப்பனந்தாள் மடத்துத் தலைவரின் தமிழ்த் தொண்டுக்கு ஓர் சிறந்த சான்று.

## முருகன் வழிபாடு

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அருளி யது. அன்புநிலய வெளியீடு விலை 0—4—0.

யோகி சுத்தாநந்தபாரதியார் திருப்பரங் கிரி முருகனை உபாசித்தபோது தமது உள்வழி பாட்டிற்காகச் செய்யப்பட்ட சில பாட்டுக் களை அன்பு நிலயத்தார் ஓர் குறுஞ்சுவடியாக வெளியிட்டிருப்பது இது. பாட்டுக்களால் பயன்பெற இயலாதவர்கள் 'சுப்ரமண்ய விளக் கம்' என்ற பகுதியையாயினும் படித்துப் பயன்பெறப் பார்க்கலாம்.

## பாசரசு

மலர் விலை 0—12—0 பாசரசு காரியலயம், பெரம்பூர், சென்னை.

இப்புதிய முயற்சியை நாம் வரவேற் கிறோம். கதை கட்டுரை கவிதை நாடகம் முதலிய விஷயங்கள் தாங்கி மாதாமாதம் வெளிவரும் என்று தெரிகிறது. எழுத்தாளர் களின் விஷயதானத்துக்குச் சன்மானம் அளிக்கப்படும் என்று அறிய மகிழ்கிறோம்.

## சமூகத்தில் ஸ்த்ரீகளின் ஸ்தானம்

காந்திஜீயின் மொழிகள்—வெளியிட்டவர் :- அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ்நாட்டுக் கிளை, திருப்பூர்.

கையால் செய்த காகிதத்தில் தயாரிக்கப் பட்டது. நூற்போர்களுக்கும் நெய்பவர்களு க்கும் இனாமாக வினியோகிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு விலை 0—3—0.

விலைக்கு வாங்கியும் படிக்கத்தக்கதுதான்.

## ஸ்ரீ அரவிந்தர்

எழுதியவர் :—ஸ்ரீ கோதண்டராமன். விலை ரூ. 2—0—0 கிடைக்குமிடம் : சக்தி காரியா லயம், சென்னை, மதுரை.

இது மூன்றாவது பதிப்பு. இப்பதிப்பில் ஸ்ரீ அரவிந்தரின் வாழ்க்கையைப் பற்றிய பல புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஸ்ரீ அரவிந்தரின் யோக தத்வத்தைப்பற்றி விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

“சனாதன தர்மமே நமக்குச் சுதேசியம். இந்து சமுதாயம் சனாதன தருமத்துடன் உதித்து அதனுடனே இணங்கி வளர்கிறது. சனாதன தருமம் க்ஷீணிக்கும்போது சமுதாயம் க்ஷீணிக்கிறது” என்கிருர் ஸ்ரீ அரவிந்தர். அவர் விவரிக்கும் சனாதன தருமம் எது? இது கவனத்துக்குரியது.

## இன்ஞ நாற்பது

(பழைய உரையுடன்) விலே அஞ பத்து.
இது தமிழ்ப் பதிப்பக வெளியீடு; பதிப்பாசிரியர் ராவ்சாகிப் ச. வையாபுரிபிள்ளே; வெளியிட்டவர்—தமிழ்ப்பதிப்பகக் காரியாலய கார்யதரிசிகள்; கிடைக்குமிடம்:—
சக்தி காரியாலயம், சென்னே.

இது, சங்கமருவிய தொகை நூல்களுள் பதினெண்கீழ்க் கணக்குக்களிற் சேர்ந்துள்ள தொன்று; இதை இயற்றியவர் கபிலரென்னும் புலவர். வேத நெறிபற்றியவர்.

ஒரு நாற்பது பாடல்களேயுடைய இந்நால் பழமையான தென்று குறிக்கப்படுகிற உரையுடன் 15 பக்கங்களிலே அடங்கியுளது; இவை நிற்க, முன்னும் பின்னும் இன்னும் 40 பக்கங்களிலே கற்பவர் கவனிக்கத்தக்க பல பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன; நல்ல கா‌டிதத்திலே அழகாகப் பதிப்பிக்கப்பட்டுளது. தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டியது.

## புலவர் பெருமான் மீஞட்சிசுந்தரம் பிள்ளே

இந் நூலே எழுதியவர் யோகி ஸ்ரீ சுத்தாநந்த பாரதியார்; வெளியிட்டவர் இராமச்சந்திபுர அன்பு நிலேயத்தார்;
விலே அஞ பத்து.

‘பிள்ளேவாள்’ என்றும், ‘பிற்காலக்கம்பர்’ என்றும் கற்ருேரும் மற்ருேரும் போற்றிப் புகழ்ந்து கொண்டாட விளங்கியவர் புலவர் பெருமான் மீஞட்சி சுந்தரம் பிள்ளேயவர்கள், பத்தொன்பதாம் நூற்ருண்டிலே இடைக் காலப் பகுதியிலே இலங்கிய பாவலர்களுள் தலேமை பெற்றவர் இப்புலவர் பெருமானே.

இச்சிறந்த கவிச்சிங்கத்தின் சரித்திரம் மஹாமஹோபாத்தியாய டாக்டர், தாக்ஷிஞத்ய கலாநிதி உ. வே, சாமிநாதய்யரவர்களாலே மிகமிக விரிவாக எழுதி வெளியிடப்பட்டுள்ளது; அஃது இரண்டு பாகங்களுடையது. நூலழகும் நுட்பதிட்பங்களும் அமைந்தது. அதனேப் படிக்க அவகாசமில்லாதவர்களுக்கு இச் சிறு நூல் பெரிதும் பயன்படுவதாகும். இக்காலத்தார் சுருக்கத்தையே பெரிதும் விரும்புபவராயிருக்கின்றனர். ஆதலின், இந்நூற்ருண்டிலே சிறந்த புலவராகி விளங்குகிற யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் சுருங்கச் சொல்லல் பற்றிச் சுவை குன்ருதபடி இச்சிறு நூலே எழுதி யுதவியுள்ளார். தமிழ் மக்கள் தங்கள் அரிய செல்வமாக இதனேயும் ஏற்றுக்கொள்வார்கள்.



உங்களுடைய குழந்தைக்கு இவ்வளவுதானு செய்யமுடியும்

இன்னும் நிரம்பச்செய்யவேண்டும். உங்கள குடும்பம்—உங்கள் அருமைக் குழந்தைகள்-சுபிக்ஷமாக வாழ அடிகோல வேண்டும். உங்கள் பிள்ளேகள் படிக்கவும் பெண்கள் இன்புற்று மணம் செய்து கொள்ளவும்—எல்லாவற்றைக் காட்டிலும், உங்கள் மன அமைதிக்காகவும் இதைச் செய்யவேண்டும். அதை இப்பொழுதே செய்யவும். இத்தகைய பணிகளுக்கெல்லாம் ''நேஷனல்'' உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறது — — —

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார்' மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

சென்னே கிளே ஆபீஸ்:
நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைஞ பஜார் ரோடு,
எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள்,
பங்களூர் & மதுரை

# அரிய மலர்களின் நறுமணம்...




கோடை வெப்பத்தில் மிகுந்த ஆசுவாஸமளிப்பது.

வீட்டில் எப்பொழுதும் ஒருபாட்டில் கையோடு வைத்திருங்கள்.

டாடாஸ் ஓடி கொலோன் நல்ல பதமும் வீரியமும் பரிசுத்தமும் வாய்ந்ததாகையால் ரோகிகளுக்கு உபயோகிக்க அது இன்றியமையாதது.

## டாடாஸ்
## ஓ டி கொலோன்

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
**19, வன்னியர்தெரு, தபால் பெட்டி நெ. 31**
**மதராஸ்.**

**தி டாடா ஆயில் மில்ஸ்**
**கம்பெனி லிமிடெட்.**

# இதென்ன உலகம்!

புதிய தொடர்கதை

இலா சந்திர ஜோஷி ஹிந்தியில் இயற்றியது

★

மொழி பெயர்ப்பு—**கிருத்திவாஸ்.**

உண்மை யென்னவெனில், அந்தக் காலத்தில் ராஜுவை நன்கு நான் அறிந்து கொள்ளவில்லை. 'பகவான் புத்தரைப்போல அவனும் அறிவுத் தீயில் ஸ்நானம் செய்தவன். பகவான் புத்தரது சிந்தனைப் பிரவாகத்திற்கும் அவனுடைய சிந்தனைப் பிரவாகத்திற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கக் கூடும். இருந்தாலும் தீயின் குண தர்மம் ஒன்றுதானே. அவன் இன்று உயிருடனிருந்தால்—அவனது அறிவுத்தீ நன்கு கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்திருக்குமாகில்—உலகத்தில் நல்ல ஜ்யோதி உண்டாகியிருந்திருக்கும்' என்று இப்பொழுதுதான் தோன்றுகிறது, எனக்கு. இம்மாதிரி உபயோகமற்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருப்பதால் என்ன கிட்டப் போகிறது?

எப்படியிருந்தாலும்—இத்தகைய சகோதரனுடன் ஒத்துழைக்க முடியாமற் போனாலும்—அன்பு பாராட்டாமல் இருக்க முடியாது, என்பதைக் கண்டுகொண்டேன். ராஜுவோ, இயற்கையின்பால் 'சக்தி' காட்டும் கடோரத்தை நினைந்து உருகிக்கொண்டிருந்தான். நானோ, இயற்கையின் இன்தென்றல், நறுமலர்கள், மதிமயக்கும் இன்பம், இவைகளின் ஆகர்ஷண சக்தியில் மயங்கிகின்றேன்.

பாக்கியமற்ற பெண்ணே! உன் வாழ்க்கை ஆணின் உதவியின்றிச் சோபிக்காது. ஆணின் உதவி யில்லையேல், நீ ஜடமாகவும், அசைவற்றவளாகவும் சோபையிழந்து கிடக்க வேண்டியதுதான். ஆணின் உதவியினால்தான் இந்த வாயு மண்டலத்தில் உன் அதிகாரம் நடைபெறுகிறது. நீதான் மென்மை வாய்ந்த உள்ளப் போக்கினால் ஆணைத்தன் வசப்படுத்திக் கொள்கிறாய். உன் உள்ளத்தில் ஆணின் 'பெருந்தன்மை' ஒருவித கட்டற்ற மகிழ்ச்சியை உண்டு பண்ணிவிடுகிறது. உடனே கணக்கற்ற ஆண்களைத் தன் அழகென்னும் வலையில் சிக்க வைக்க உன்னுள்ளம் துடிக்கிறது. ஆணினத்தின் உயர்ந்த அன்பு உனக்குக் கிட்டாமற் போகுமாகில், நீ பிணத்திற்குச் சமானமானவளாகி விடுவாய். அப்படியிருக்கும் பொழுது, ஆணினத்தை அழிக்கும் நோக்கம் உன் பிறவிக் குணமாக தோன்றுகிறதே! அது ஏனோ? குழந்தைகள்பால் நீ காட்டும் வாத்ஸல்யம், வெகு பிரசித்தி பெற்றது. ஆனால், கருக்குலைவு செய்தல், கழுத்தைத் திருகிமாய்த்தல், முதலிய தீய குணங்களும் உன்னிடம் காணக்கிடக்கின்றனவே! 'நல்லபாம்பு' என்ற பெயர் படைத்த நாகம் நச்சுப் பையைத் தன் வாயிற்குள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதே, அதே இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் போலும் பெண்கள் என்ற பேய்கள். அந்தோ, நான் என்று பெண் பிறவியினின்றும் விடுபட்டு, ஆண் பிறவியோ, அல்லது பக்ஷிப் பிறவியோ, எடுப்பேன்? ஆண் பிறவி கிடைக்குமாகில், சிருஷ்டியின் எல்லாக் கர்மங்களிலும் கலந்து கொண்டு, இறவாழியைக் கடந்து, சச்சிதானந்தஸ்வரூபத்தை அடைய முயலுவேன். பக்ஷிகளின் யோனியில் பிறக்க நேர்ந்தால், பிறப்பு—இறப்பு, பாபம்—புண்ணியம். அன்பு—காதல் என்ற கட்டுப்பாடுகளினின்றும் விடுபட்டு, கவலையின்றி, ஆனந்த சாகரத்தில் மூழ்கி, இன்பம் என்னும் தேனைப்பருகுவேன்.

ஸௌந்தரியத்திற்குப் பெயர்போன கிரேக்க அழகி ஹெலென்! நீ எங்கேயிருக்கிறாய்? ஒரு காலத்தில், காலனையும் மயக்கக்கூடிய 'அழகு' என்னும் வலையில் ஆணினத்தையே பிடித்துக் கட்டிப்போட்டாயே. அந்தோ, ரத்த தாகம் படைத்த மலர் போன்ற மென்மையான அவயவங்களையுடைய, ராக்ஷஸப் பெண்ணே! நீதானே டிராயில் (Troy) பெரும்போரை வருவித்துக் கணக்கற்ற 'நரபலி'க்குக் காரணமானவள்? தன் அழகென்னும் சாணைபிடித்த ஆயுதத்தினால் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டனையே! அப்படிப்பட்ட உன்னைத்தானே கிரேக்க நாட்டுக் கவிகள், தம் காவியங்களில் வர்ணித்தனர். அழகென்னும் ஆயுதப் பரீக்ஷையை நடத்த, என்னுள்ளத்தும் அளவு கடந்த ஆசை ஒருதடவை எழுந்தது. உன்னைப் போலவே பிற்காலத்தில் என்னைப் போன்ற பெண் பேயையும் வர்ணிப்பார்களோ, என்னவோ! நல்லெண்ணம் வாய்ந்த ஆணினத்தால் பெண்ணுள்ளத்தில் புதைந்து கிடக்கும் ராக்ஷஸ மனப்போக்கை அறிந்துகொள்ள இயலுமா?

ஆனால் இதே ஆண் இனம் எப்படி என்னை ஏமாற்றிவிட்டது, தெரியுமா? பெண்ணினத்திடம் விரோதபாவம் என்னுள்ளத்தில் குடி கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதே போல இந்த ஆணினத்தினிடமும் பழிக்குப்பழி வாங்கும் நோக்கம் எனது உள்ளத்தை 'வேல்' போலத் துளைக்கிறது. நாசம்! நாசம்! இதைத் தவிர எனக்கு வேறு நம்பிக்கையே கிடையாது! கடவுளே!—

அப்பாவைக் கண்டு பேசுவதற்கென ஏராளமான ஜனங்கள் தினமும் வந்து போவ

6 218145

துண்டு. அச்சமயம், யௌவனத்தின் முதற் படியில், அடி எடுத்து வைத்துக்கொண்டிருந்த நான் எவ்வித சங்கோசமோ, நோக்கமோ இன்றி அவரது அறையில் போய் உட்கார்ந்திருப்பதுண்டு. குழந்தைகளைப்போல, பிடிவாதமும் பிடிப்பதுண்டு. விளையாடுவதும் உண்டு, என்ன காரணமோ தெரியவில்லை. அப்பா என்னைக் கடிந்து கொண்டதே கிடையாது. எப்பொழுதும் மிக்க அன்புடன் இருந்து வந்தார்.

எவ்வித நோக்கமுமின்றி, தந்தையின் அறைக்குள் போய் வந்தேனுயினும், ஒரு வித— தெளிவாகப் புலப்படாத நோக்கமொன்று என் மனத்துடன் இருந்திருக்கத்தான் வேண்டும். அந்த நோக்கம்—என் அழகின் உதவியைக் கொண்டு, மதிமயங்கித் தடுமாறும் ஆடவர்களை வசீகரிக்கும் நோக்கமாகத்தான் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? அந்தோ நீசப் பெண்ணே!

தந்தையின் அறையில் எப்பொழுதுமே அரசியல் சம்பந்தமான சம்பாஷணைதான் நடந்துகொண்டிருக்கும். ராஜுவைப் போல, அறிவை விருத்தி செய்து கொள்ளும் அவா, என்னிடம் அவ்வளவாக இல்லை. இருந்தாலும், மருளும் விழிகளால் உலகத்தை மயக்கி உலகத்து விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ளும் அவா இருந்தது. உலகத்துப் புதிய விஷயங்கள், எனக்குக் கதைகளைப் போல ருசிகரமாகப்பட்டன. அப்பாவைக் காண வரும் தலைவர்களிடம் 'விழி' என்ற ஆயதப் பரீக்ஷையை நடத்த ஆரம்பித்தேன். ஒருவனிடம் அதிகப் பற்றுதலோ, குறைவான பற்றுதலோ என் மனத்துள் ஏற்பட்டதில்லை. எல்லாரையும் சேர்த்து நோக்கும்பொழுது என் உள்ளத்தில் ஒருவிதப் பூரிப்பு ஏற்பட்டது. நிறைந்த சபையை விட்டுத் தனியாக என் அறையில் அமர்ந்திருக்க எனக்குப் பிடிக்கவேயில்லை. தனியாக உட்கார்ந்திருக்கும்பொழுது என்னுள்ளத்தில் ஒருவிதத் துயரம் குடிகொண்டுவிடும். எனக்கு ஒன்றுமே ஓடாது.

இந்தமாதிரி நிலையில் இருக்கும் என் உள்ளத்தைச் சில தினங்களாக—நல்ல யௌவன தசையைஅடைந்த இரு அழகிய வாலிபர் கொள்ளைகொண்டு விட்டனர். அவர்களில் ஒருவர் டாக்டர். பெயர் கன்னையாலால். இன்னெருவர் காலேஜ் புரொபசர். பெயர் கிசோரி மோகன். புரொபசரை எனக்கு முன்பே தெரியும். அவர் 'கிராத்ஸ்வேட் பள்ளி மாணவிகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்காக ஒவ்வொரு மணி வருவார். இன்றுவரை எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பு, 'குரு சிஷ்ய பாவனையில் தான். இனி சிநேகிதன் என்ற முறை கிட்டும்' என்ற நம்பிக்கை உதித்தது. டாக்டரை எனக்கு முன்பின் தெரியாது. இந்த இரு சிநேகிதர்களும் வந்த பிறகுதான் என் வாழ்க்கைச் சரித்திரம் விரிந்திருக்கிறது. அதைச் சிறிது விஸ்தரித்தே கூறுகிறேன்.

கணவன்மார்களைப் பூஜிப்பது, குழந்தை குட்டிகளைப் பராமரிப்பது, சுற்றத்தார்கள், விருந்தாளிகள் முதலியவர்களுக்குச் சிசுருஷை செய்வது, உலகக்ஷேமத்திற்காக, திருதியைத் திதி, செவ்வாய்க்கிழமை முதலிய தினங்களில் விரதம் இருப்பது, தேவி கல்யாணியைப் போன்று குடும்ப வாழ்க்கையில் கண்ணும் கருத்துமாயிருப்பது, முதலிய அநேக சுபகாரியங்களில் ஈடுபட்டிருக்கும் அநேக மாதர்களுக்கு, துர்ப்பாக்கியவதியான-சுபகாரியங்களையே செய்து அறியாத-குடும்பவாழ்க்கையின் ரஸத்தையே பருகாத-பெண்களுக்கியற்கையான உயிரோட்டம் இருந்தும், வெறுப்பே உருவெடுத்த - இந்தப் பாவிப் பெண்ணின் கதையைப் படிக்க அவகாசமே கிடைக்காமலிருக்கக்கூடும். இருந்தாலும் அன்பிற்கன்பான என் தாய்மார்களே, சகோதரிகளே! 'துர்ப்பாக்கியவதியான இப்பெண்ணின் கதையைக் கேட்க நேர்ந்தால்—வெறுப்பைக் காட்டாமல், கருணை, நல்லெண்ணம் என்ற அமிருதத்தைப் பொழியுங்கள்' என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 7

டாக்டர் கன்னையாலாலும், புரொபஸர் கிசோரிமோஹனும் இணைபிரியா நண்பர்கள். இருவரும், வார்த்தையாடல், பிரசங்கம் புரிதல், சிறு விஷயத்தையும் சப்பை கட்டிப் பேசுதல் முதலியவைகளில் வெகு சமர்த்தர்கள். தம் பேச்சு வன்மை மூலம், ஜனங்களைக் கவர்ந்து கீர்த்தியடைந்தனர், இருவரும். ஆனால் என் தந்தைக்கு இவர்களது பேச்சில் கவர்ச்சி இருப்பதாகத் தோன்றவில்லை. ஒருகால் அவர்களது அந்தரங்க அறிவை, அவர் நன்குஆராய்ந்திருந்தாரோ, என்னவோ! என் தந்தைக்கும் இவ்விரு வாலிபர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டுமென நான் மனமார விரும்பினேன். ஆனால் அதற்கான அறிகுறி தென்படவே இல்லை.

அன்றைக்கு ஒருநாள் காலேஜ் கிடையாது. எனக்குப் பொழுது போகவில்லை, என் தந்தை தம் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். நான் அதற்குஇடையூருக வேண்டுமென்றே சென்றேன்.

'ஏதாவது காரியமிருக்கிறதா?' என்று வினவினர் அப்பா.

'ஒன்றுமில்லை சும்மா பேப்பர் பார்க்க வந்திருக்கிறேன்'

'பேப்பரை எடுத்துக்கொண்டு உன்னறையில் போய்ப்படி.'

நான் பேப்பர் படிக்கப் போயிருந்தால் அல்லவோ வெளிச் செல்வதற்கு? அப்பாவுடன் ஏதாவது பொழுது போக்கு—வம்பு அளக்கலாம் என்று சென்றிருந்தேன்.

'என்ன அப்பா எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று அவரது சொற்களில் கவனம் செலுத்தாமல் கேட்டேன்.

'ஒரு முக்கியமான கட்டுரை. பெரிய பெரிய தலைவர்களெல்லோரும் இதில் கையெழுத்திடுவார்கள். இது 'மானிபெஸ்டோ' (Man-i-festo) மாதிரி வெளியிடப்படும்'

'எதைப்பற்றி?'

அந்த அரை குறைக் கட்டுரையை என் கையில் கொடுத்து, 'இதை இரைந்துபடி, ஏதாவது பிழையிருந்தால் திருத்துவோம்' என்று கூறினார்.

நான் நாலுவரி படிப்பதற்குள் வேலைக்காரன் வந்து, யாரோ, இரண்டுபேர் பார்க்க வந்திருப்பதாகக் கூறினான்.

இரண்டு பேருக்காக ஹாலுக்குப் போவானேன் என்று எண்ணித் தம்மறைக்குள் அழைத்து வருமாறு ஏவினார்.

என் மனத்தைக் கவர்ந்துநின்ற அதே இரு வாலிபர்களும் அங்கே காக்ஷியளித்தனர். இருவரையும் வியப்புத் ததும்பும் பார்வையில் நோக்கினேன். இருவரும் என்னைக் கவனிக்காமல் இல்லை என்பதை அவர்களது மந்த ஹாஸம் எடுத்துக்காட்டியது. என் தந்தை வரட்டுச் சிரிப்புடன் அவர்களிருவரையும் வரவேற்றார்.

'மன்னிக்கணும். உங்கள் காரியத்திற்கு இடையூறாக வந்து சேர்ந்துவிட்டோம் போலிருக்கிறது' என்று ஆரம்பித்தார் கிசோரி மோகன்.

முன்போன்ற வரட்டுச் சிரிப்புடனேயே அப்பா, பதில் அளித்தார்—'இல்லை. ஒன்றும் அப்படியில்லை'.

தம் சங்கோசத்தைப் போக்கிக்கொள்ளும் நோக்கத்தில், அப்பா கேட்பதற்குமுன்பே, 'எங்களுக்கு ஒன்றும் வேலையில்லை. சாதாரணமாகப் பார்த்துப்போவோம் என்றுதான் வந்தோம்' என்று கூறினார் கிசோரி மோகன்.

'தங்கள் தயவிற்கு வந்தனம்' என்று அப்பா சொல்வாரோ என்று எண்ணினேன். ஆனால் அவர் ஒன்றும் பதில் கூறாமல் அதே வரட்டுச் சிரிப்பைத்தான் வெளிக்காட்டினார்.

சிறிது நேரம்வரை அறையில் மௌனம் நிலவியிருந்தது. அப்பா நினைத்தால், அந்த மௌனத்தைக் கலைத்து ருசிகரமான சம்பாஷணையொன்றை ஆரம்பித்திருப்பார். ஆனால் அவர், இந்த இரு சிநேகிதர்களின் முகத்தில் தோன்றிய கலவரத்தையும், படபடப்பையும் கண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது எனக்கு. எனக்கு அப்பாவின்பேரிலும், அந்த இரு சிநேகிதர்களின்பேரிலும் எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'பேசுவதில் சாதுர்யம் வாய்ந்த அவ்விரு சிநேகிதர்களும் ஏன் இவ்விதம் மௌனம் சாதிக்கின்றனர்? பேசப் பயந்துசாவதாயிருந்தால், தந்தையைக்காண ஏன் வருகின்றனர்? இம்மாதிரி ஊமைகளுக்கு தந்தையிடம் வரவே உரிமை கிடையாது. அப்பாவும் என்ன குழந்தையா, அதற்கு? பேசத் தெரியாமல் திண்டாடும் இவர்களிடம் விளையாடுகிறாரே' என்ற எண்ணங்கள்தான் எனக்கு எரிச்சலை உண்டு பண்ணின.

அரைகுறைக் கேள்வி ஞானமுடைய அவ்விரு சிநேகதர்களிடம், அப்பாவின், புத்தி கூர்மை, தீவிரவாதம், திடக்கொள்கை முதலிய சுபாவங்களை அறிந்துகொள்ளும் சக்தி எப்படி இருக்க முடியும்? தம் சிற்றறிவின் உதவியைக்கொண்டு அப்பாவிடம் நல்லபெயர் எடுக்க முயன்று கொண்டிருந்தனர், அவ்விரு சிநேகிதர்களும். ஆனால் மானிட சாஸ்திரம் தெரிந்த அப்பாவிடம் அவர்கள் ஜபம்சாயுமா?

8

ஐந்து நிமிஷநேரம் மௌனத்தில் சென்றிருக்கும். அந்த ஐந்து நிமிஷமும் ஒரு யுகம் போலச் சென்றது. சங்கோசம், வெறுப்பு, துயரம் இம் மூன்றும் சேர்ந்து, என் குடலை என்னவோ செய்தன. பேசுவதில் டாக்டர் தான் ரொம்ப கெட்டிக்காரர். அழகிலும் அவருக்குத்தான் முதன்மை ஸ்தானம் கிட்டும். அவரது நீண்ட பெரு விழிகளில் ஒருவித மோகன சக்தியிருந்தது. ஸ்வாமி விவேகாநந்தரை நான் நேரில் கண்டதில்லை. ஆனால்


சேலம்

கல்யாணப்பட்டு ஜவுளிரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

# ராம விலாஸ்

396, கடைவிதி சேலம்

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

வெவ்வேறு சமாதியிலாழ்ந்திருக்கும் பொழுது எடுத்த படங்களின் 'ஆல்ப'த்தைப் பார்த்திருக்கிறேன். யௌவன முறுக்கில் விவேகாநந்தரின் விழிகளில் காணப்பட்டதே, மோகன ஒளி, அதே டாக்டரின் கண்களிலும் பிரகாசிப்பதுபோல எனக்குத் தோன்றியது. ஆசார வியவகாரங்களில் விவேகாநந்தரின் கால்தூசி பெறமாட்டார், டாக்டர். அவருக்கும் இவருக்கும் முடிச்சுப்போட்டுப் பார்ப்பானேன்! ஜெர்மனியின் காலஞ்சென்ற, ஆண் சிங்கம் 'கைஸர் வில்ஹ' த்தின் மீசையின் கம்பீரம் உலகப் பிரசித்தி பெற்றது. பக்ஷபாதமின்றி அவனது படத்தைப் பார்ப்போர்களும், அவனது சரித்திரத்தைப் படிப்போர்களும், அவனது மீசைக்கே, உலகத்தையாளும் வன்மையிருக்கிறது என்று கூறுவார்கள். டாக்டரின் கருத்த, அடர்ந்த, தூக்கிநிற்கும் மீசை 'கைஸர் வில்ஹ' த்தின் ஞாபகத்தை எனக்கு மூட்டியது. 'கைஸரி'ன் திரமும் வீரமும் டாக்டரிடம் இருக்க நியாயமில்லை, இதுமாதிரி இயற்கை செய்யும் பண்டங்களில் ஒற்றுமை கண்டுபிடித்து ஏமாந்திருக்கிறேன். அநேகந் தடவை. அந்தோ! மெலிந்த தேகம்படைத்த—பெண்ணுருவம் வாய்ந்த—நெப்போலியன், உலகையே வெற்றி கொள்ளவில்லையா? ஆண் சிங்கம் என்று கூறத் தகுதியுள்ள இந்த டாக்டரிடம் 'அலித்தன்மை' தான் மறைந்திருக்கிறது என்று ஒருவராலும் கூறமுடியவில்லை.

அது எப்படியாவது போகட்டும். முதன் முதலில் இந்த மௌனத்தைக்கலைத்தவர் டாக்டர் கன்னியாலால்தான், அவர் கூறினர்—'இன்று காலை வைத்தியம் செய்து கொள்வதற்கென, ஒரு அம்மாள் என் வீட்டிற்கு வந்திருந்தார். அவர், வேசிகள் பொது நல வாழ்வில் சிரத்தைகாட்ட முன் வருவார்களாகில், அவர்களது வாழ்வு திருந்துவதோடு மட்டுமல்லாமல், நாட்டிற்கும் நன்மை ஏற்படும். 'பெண்கள் விடுதலை' (Female Emancipation) வெகு சீக்கிரம் வேசிகளிடத்துப் பரவிவிடும். அவ்வளவு சீக்கிரம் குடும்ப ஸ்திரீகளிடத்துப் பரவாது. ஆகையால் வேசிகளைப் பொது நல வாழ்வில் ஈடுபடுத்துவதற்கான பிரசாரம் நம் நாட்டில் மிகவும் அவசியமானது' என்று சொன்னர். அது எனக்கும் சரியாகத்தான் படுகிறது.

டாக்டரது பேச்சை ரஸித்துக்கொண்டே, தந்தையின் முக பாவத்தையும் கவனிக்கலானேன். அவரது வரட்டுச் சிரிப்பு இன்னும் அதிகரித்தது. கடைசியில் பரிகாசம் த்வனிக்கக் கூற ஆரம்பித்தார். "ஆம். நீங்கள் சொல்வது முற்றிலும்உண்மை. 'வேசிச் சீர்திருத்தம்' என்பது இல்லாத தேச சேவை எதற்கு? தற்காலத்திய Dawn Quixot (விபரீதப்போக்கு) சம்பிரதாயம், இதை ஆதரிக்கிறதே! 'Fallen sisters' (நெறிதவறிய மாதர்கள்) 'கதியற்ற துர்ப்பாக்கியப் பெண்கள்' என்ற அனுதாபச் சொற்கள், வேசிகள்பால் தம் அனுதாபத்தைக் காட்டுவதற்கெனவேதானே கண்டுபிடிக்கப்பட்டவை? இது ஒருபுறமிருக்க மற்றொரு புறத்தில், நமது குடும்ப மாதர்கள் அறுந்த செருப்பைக் காட்டிலும் இழிவாக நடத்தப்பட்டு வருகின்றனர். அதை நாம் கவனிப்பதில்லை. பகவானின் இந்த ஆனந்த சிருஷ்டியில் அவர்களுக்கு உரிமையோ பாத்தியதையோ கிடையாது. ஆண்களின் மோசக்கருத்து நிரம்பிய அரசியல் சேவை மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. குடும்ப ஸ்திரீகளின் மங்களகரமான குடும்ப நிர்வாகம், உபயோகமற்றதாகவும், அர்த்தமற்றதாகவும் கருதப்படுகிறது. இதைப் பாக்கிய தேவதை செய்த கூற்று என்று சொல்வதைத்தவிர வேறென்ன சொல்வது! கவலையைத் தீர்த்து வைக்கும் குடும்ப ஸ்திரீ திலகங்கள்தான், சிருஷ்டி நிலைத்திருப்பதற்குக் காரணமானவர்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம். பொது நல வாழ்வில் ஈடுபடாத மாதர்களுக்கு முன்னேற்றம் எப்படிக் கிட்டும்? அவர்களது பிறப்பு எதற்குப் பிரயோசனம்? என்பதுபோன்ற அபிப்ராயங்கள்தான் நம் சமூகத்தில் வலுத்துவருகின்றன. மாமனர்-மாமியார், தாய்-தந்தை, கணவன்-மகன், சகோதரன்-சகோதரி இவர்களுக்கு, எவ்விதப் பிரதிப் பிரயோசனத்தையும் எதிர் பாராமல், ஊழியம் புரிவதில், நம் நாட்டுக் கல்வி வாசனையே அற்ற மாதர்கள், தங்கள் வாழ்க்கையையே ஹோமம் செய்து விடுகின்றனர். கடமை யென்னும் செக்கில் தம்மையே சாருகப் பிழிந்துகொள்கின்றனர். இந்த நடத்தற்கரிய மகோன்னதமான தியாகத்தை, உலகத்தில் சிந்திப்பார் யாருமில்லை. பொதுக் கூட்டங்களில் பிரசங்கம் புரிவதையும் கௌன்சில்களில் ஈடுபடுவதையும்தான், பெருத்த ஆத்மத்தியாகமாக மதிக்கின்றனர் ஜனங்கள்.

'குழந்தை குட்டிகளைப் பராமரித்தல், குடும்பக்காரியங்களைக் கவனித்தல் முதலிய தம் கருமங்களை மறந்து, பொறுப்பற்ற பொது நல வாழ்வில் கவலையின்றி ஈடுபட்டுப் பிரசித்தி பெறுவதற்கு, எவ்வளவு பெரிய தியாகம் செய்ய நேரிடுகிறது' என்ற விஷயத்தை, என் தாயின் அரசியல் சேவையின்மூலம் என் தந்தை நன்கு கண்டறிந்துவிட்டார் போலும். அதனல்தான், அரசியல் க்ஷேத்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவரும், மனைவியை அரசியலில் இழுத்துவிட்டுப் பெயர் பெறச்செய்தவரும், தம் பெண்களுக்கு நவநாகரிகக் கல்வியளிப்பதில் முன்னின்றவரும், சிற்றின்பத்தில் மூழ்கித் தம் கடந்தநாட்களைக் கழித்து, சிறிது 'அபக்கியாதி' அடைந்தவருமான என் தந்தை, 'மாதர் உரிமை' 'வேசிச் சீர்திருத்தம்' இவைகளுக்கு மாருகப்பேசி, சீறி ஆற்றிக்கொண்டார், எனக்கருதுகிறேன். டாக்டர், புரொபஸர், நான் மூவரும் ஆச்சரியத்தால் மதிமயங்கி ஸ்தம்பித்துவிட்டோம். இவ்வளவுநேரம்பேச்சு ஸ்வாரஸ்யத்தில் மயங்கி, தந்தையின் பின் நின்றுகொண்டிருந்த நான் ஒரு நாற்காலியைத் தேடி உட்கார்ந்துவிட்டேன்.

டாக்டர், புரொபஸரைப்போல, அவ்வளவு சீக்கிரத்தில் எளிதாக நாணிப்போகும் தன்மை வாய்ந்தவரல்லர். 'அப்படியானால் அறியாமை என்னும் இருட்டில் மாட்டிக்கொண்டு, ஒருவிதக் குருட்டுப்போக்கில், மாதர்கள், ஆண்களுக்கு அடிமைத் தொழில்செய்து வருவதுதான் நியாயமெனக் கருதுகிறீர்களா?' என்று ஒரு கேள்வி கேட்டார் டாக்டர்.

'அடிமைத் தொழிலா? நம் நாட்டுக் கல்வி வாஸனையற்ற பெண்மணிகள், அறியாமையின் காரணமாக ஆண்களுக்கு அடிமைத்தொழில் புரிந்து வருகிறார்கள் என்ரு எண்ணுகிறீர்கள்? நாடு பூராவும் இதே பிரமைதான் பரவியுள்ளது. தம் இதயத்தில் ஊறும்—வரட்சியென்பதையே அறியாத—அன்பின் பிரவாகத்தை, அணைகோலிவைக்க முடியாததால், வேண்டுமென்றே தம்மை ஒரு கட்டுப்பாட்டில் பிணைத்துக்கொண்டு, கீதையில் கூறியுள்ள 'நிஷ்காம தர்மத்தை அனுஷ்டித்து வருகிறார்கள், நம் நாட்டு நாரீமணிகள்.' என்பது நம் அறிவிற்கு எட்டுவதில்லை. 'நமது அடக்குமுறைக்குப் பயந்து அல்லவா நம்மிடம் அடங்கிக் கிடக்கிறார்கள்' என்று இறுமாப்பு அடைகிறோம். ஆனால் அவர்கள் மட்டும் நம் கட்டுப்பாட்டை—அடக்குமுறையை—மீறுவதென்று தீர்மானித்து விடுவார்களாகில், நம்மால் ஒன்றும் செய்வதற்கு இயலாது—ஏன்! உலகத்து எந்தப்பெரும் சக்தியாலுமே அவர்களை அடக்க முடியாது. 'நமது இந்தத் துச்சமான சக்தியை அவர்கள் ஏளனம் செய்துகெண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்வதில்லை' என்று கூறிக்கண்களை அகலவைத்துக்கொண்டு சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்.

பிறகு, 'பெண்கல்வியாம்! பெண்கல்வி! இந்த நாட்களில் எங்குப்பார்த்தாலும் இதே முழக்கம்! 'யுனிவர்ஸிடி'ப் படிப்பினால் பெண்களுக்கு என்ன கிட்டும்? அரசியலில் பெயர் பெறுவதனால் என்ன மகுடத்தை அடைந்துவிடப்போகிறார்கள்? அவர்களது உள்ளத்துள் அழுந்திக்கிடக்கும் உயர் நோக்கங்களைச் சீர்திருத்திப் பயன்படுத்திக் கொள்வோமாகில், உலகிற்குப் பெரிய பெரிய நன்மைகள் ஏற்படக்கூடும். எனது கனவிலிருக்கும் புது தேசீயக் கல்வித்திட்டத்தில், 'பெண்கள் உரிமை' என்பதற்கே இடம் கிடையாது. கடவுளாகப் பார்த்துக்கொடுத்த—பிறவிமுதலே கிடைத்த அந்த உரிமையை—அந்த 'மாதர் உரிமை'யை-எவனாலும் பிடுங்கமுடியாது. 'வோட்டுரிமை பெறுவதனாலோ, 'கௌன்சில் மெம்பர்களாக ஆவதனாலோ, 'வார் பிராக்டிஸில் ஈடுபடுவதனாலோ, 'ஆனரெரி மாஜிஸ்திரேட்' பதவி வகிப்பதனாலோ, மாதர்கள் முன்னேற்றமடைந்துவிடுவார்கள் என்றெண்ணுவது வெறும் பகற்கனவே' என்றார்.

கன்னியாலால் பேசவாயெடுத்தார். என் தந்தை அவரை மடக்கிக் கூறலானார்—' தள்ளுங்கள், ஸார், குப்பையில், இந்த விஷயங்களையெல்லாம். இந்தமாதிரி பேச்சிற்கு முடிவே கிடையாது. நாட்கணக்காகப் பேசிக்கொண்டிருக்கலாம். அதிருக்கட்டும். கொஞ்ச நாட்களாக என் உடம்பே சரியாயில்லை. சரீரம் பூராவும் ஒரு வலி. தலைகனம், வயிற்றுக் கோளாறு, சோம்பல் எல்லாம் என்னைப் போட்டு வாட்டுகின்றன. படுத்தால் எழுந்திருக்கவே மனம் வரமாட்டேன் என்கிறது. வேலையொன்றும் ஓடமாட்டேன் என்கிறது. இதற்கெல்லாம் காரணமென்னவாயிருக்கலாம் ஸார்?'

விஷய மாறுதல் ஏற்படுவதைக் கண்டு கன்னியாலால் சிறிது கோபமுற்றார். இருந்தாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு அமைதியாகக் கூறலானார்—"வியாதி ஒன்றுமில்லை. சாதாரண பலஹீனம் (General Debility) போலிருக்கிறது. இருந்தாலும் ஒரு தடவை நன்கு 'ஸௌண்ட்' செய்துபார்த்துச் சொல்லுகிறேன் 'மலச்சிக்கல்' இருக்கும் பக்ஷத்தில் 'லிக்விட் பாரபின்' உபயோகியுங்கள். பலஹீனத்திற்கு ஏதாவது ஒரு 'டானிக்' உபயோகிக்கவேண்டியது அவசியம். ஆனால் தற்காலம் இந்த டானிக்குகளைக் காட்டிலும் நல்ல மருந்தொன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்த மானிட சரீரத்தில் கால்ஷியம் (calcium) என்ற வஸ்து இருக்கிறது. எலும்பு, நரம்பு முதலியவைகள் சுண்ணாம்புச் சத்து (Calcium) உள்ளவை. அவைகளில் அந்தச் சத்துக் குறைந்துபோகுமாகில், சக்திக் குறைவு (Loss of Energy) ஏற்பட்டுவிடுகிறது. பல் கெட்டுவிடுவதனால் மனிதன் நோயாளியாகிவிடுகிறான் என்பதை நாம் காண்கிறோம். சில டாக்டர்கள், பல் தேய்க்காமலிருப்பதனால்தான் பல் கெட்டுவிடுகிறது. பல் கெட்டுவிட்டால் மனிதன் நோய் வாய்ப்படுகிறான் என்று எண்ணுகின்றனர். அதனால் பல் சுத்தம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்துகின்றனர். ஆனால் இவ் வார்த்தைகள் சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது, உண்மையில் பல் சுத்தம் செய்யாததால் கெடவில்லை. ஆனால் 'கால்ஷியச் சத்து'க் குறைவதனால்தான் பல் கெடுகிறது. தினசரி விதம்விதமான ரஸாயன வஸ்துக்களைக் கொண்டு, எவ்வளவோபேர் பல்லைச் சுத்தம் செய்து கொள்கின்றனர். வெற்றிலை போட்டுக்கொள்வதனால் காவி யேறுமோ என்று எண்ணி வெற்றிலை போடாமலிருக்கின்றனர். அவர்களது பல்லும் கெட்டுத்தானிருக்கின்றது. பல் கெடுவதனால் மனிதன் நோய்வாய்ப்படுகிறதில்லை. பல் கெடுவதே வியாதிக்கறிகுறி. இந்தக் காரணங்களால் கால்ஷியச் சத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு புது ரஸாயனம், தேக பலவீனத்திற்கெனக் கொடுக்கப்படுகிறது. அதன் பெயர் 'டிரைகால் ஸீன்' என்பது. நீங்களும் அதைப் பிரயோகித்துப் பாருங்கள். இந்தியா பூராவும் இந்த மருந்தைப் பிரசாரப் படுத்துவது அவசியம் என்று எண்ணுகிறேன்"

''நீங்கள் கூறுவது புதிதாகவும், ருசிகரமாகவும் இருக்கிறது. இந்தக் கோட்பாடு (Theory) எனக்குச் சரியாகவே படுகிறது. சில தினங்கள் முன்பு ராஜு கூட 'ரிகால்ஸிபிகேஷன்' சம்பந்தமாகக் கூறினன். அவன் அனுபவமற்றவன் என்ற எண்ணத்தினல், அவனது வார்த்தைகளில் நான் அதிகக் கவனம் செலுத்தாமலிருந்துவிட்டேன். நான் அவசியம் 'டிரைகால்ஸின்' உபயோகித்துப் பார்க்கிறேன்'' என்று புளகத்துடன் கூறினர், தந்தை.

டாக்டர் ஆசை ததும்பும் பார்வையில், என்னைப் பார்த்த வண்ணம் கூறினர்—''அவசியம் உபயோகியுங்கள். நீங்கள் மட்டுமல்ல. (என்னைக் காட்டி) இவரையும் உபயோகிக்கச் சொல்லுங்கள். இவரது முகம் சற்று வெளுத்துக் காணப்படுகிறது. இவரது 'டெம்பரேச்சர்' 'நார்மல்'ாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும். ஒரு வாரம் வரை 'டெம்பரேச்சர்' எடுத்துப் பார்த்தால்தான் தெரியும், என்ன வென்று. எல்லாவற்றிற்கும் முன் ஜாக்கிரதையா யிருப்பது நல்லது. இந்த வயதில் ஸ்திரீகளுக்குப் பொதுவாக T. B கண்டு விடுகிறது''

'என்ன? T. B. யா?' என்று படபடப்புடன் அப்பா வினவினர்.

டாக்டர் புன் முறுவலுடன், 'எதற்காக இவ்வளவு பதட்டம்? T. B. யா, இல்லையா, என்று ஒன்றும் தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் முன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் அல்லவா!' என்று உரைத்தார்.

'இவளிடத்தில் T. B. யின் 'டெண்டென்ஸி' இருப்பதாக உங்களுக்குத் தோன்றுகிறதோ?'

'டெண்டென்ஸி' இருப்பதுபோலத் தான் தோன்றுகிறது. இருந்தாலும் பரீக்ஷித்துப் பார்த்துத்தான் சொல்லமுடியும்?'

அப்பாவின் முகம் கறுத்தது; உள்ளூற பயம் ஒன்று அவரை நிலைகுலையச் செய்தது. ஏனெனில் பாவியாகிய என்னை உயிருக்குயிராக எண்ணி வந்தார், அவர். ஆனல் என்னுள்ளத்தில் ஆனந்தத் துடிப்பு எழும்பிக்கொண்டிருந்தது. டாக்டர் தம் கவலை, கடமை எல்லாவற்றையும் மறந்து, என் ஞாபகத்தில் மூழ்கிக் கிடக்கிருர் என்பதை அறிந்து என்னுள்ளம் பூரித்தது. T. B. யா, பக்ஷவாதமா என்ற கவலையே எனக்கு உண்டாகவில்லை.

இவ்வளவு நேரம் மௌனியாக அமர்ந்திருந்த புரொபஸர் கூறலானர்—''ஏன் ஸார், பார்ப்பது யார்? இந்தப் பயங்கர வியாதியைப் பரீக்ஷிப்பதில், லேடி டாக்டரை நம்பிவிட முடியாது. டாக்டர் கன்னையாலால் ஸ்பெஷலிஸ்ட்' தான். ஆனல் பெண்களை ஆண்கள் 'ஸௌண்ட்' செய்வது என்பது அசிங்கமாகப் படுகிறது. சமூகத்தின் கண்களிலும் இது உறுத்துகிறது. ஆனல் இதில் ஒருவிதப் பிழை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை''




**உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்**

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணு தபால் தலை அனுப்பினல் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

**எங்கும் கிடைக்கும்**

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணு தபால் தலை அனுப்பினல் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிளோ - இந்தியன்**
**டிரக் & கெமிகல் கம்பெனி,**
**பம்பாய்—2**

தந்தை என்னை ஒரு தடவை நோக்கிவிட்டு மௌனம் சாதித்துவிட்டார்.

10

டாக்டர் தம் தோழருடன் திரும்பிச்சென்று விட்டார். என் உள்ளத்தில் இன்பக்கனவு ஒன்று எழுந்தது. இன்பக்கனவில் மூழ்கிய வண்ணம், என் அறையை அடுத்துப் படுக்கையில் படுத்தேன். இன்று வெகு நாளைக்கு அப்புறம் என்னுள்ளத்தில், விழிப்பும்—உறக்கமும் காதல் லீலை புரிய ஆரம்பித்தன. டாக்டரின் அறிவு தோய்ந்த, அழகுக்களஞ்சியமான அந்த மோகன உருவம் என்னுள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. அவரது ஞாபகத்தில் என்னுள்ளம் ஆழ்ந்து கிடக்கும் சமயத்தில், அடுத்த அறையிலிருந்து 'பியானோ'வின் இனிய ஸ்வரம் என்காதுகளின் வழியே பாய்ந்து லண்டன், பாரிஸ், முதலிய நகரங்களின் உல்லாஸ வாழ்க்கையின் நினைவைத் தட்டி எழுப்பியது. வேலையொன்றுமில்லாததால் ராஜு எவ்வித உத்தேசமுமின்றி, மாசற்ற பாவனையில் மேல்நாட்டு ராகம் ஒன்றை மீட்டிக்கொண்டிருந்தான். 'அவனைப் போன்ற ஸ்வபாவம் வாய்ந்த ஒருவன் மேல்நாட்டுச் சங்கீதத்தின் ஆனந்தத்தில் மூழ்க மாட்டான்' என்பதனால்தான் 'மாசற்றபாவனையில்' என்று கூறினேன். மேல்நாட்டுச் சங்கீதத்தைக் கற்பித்த பெருமை அந்த 'மாதமாஜேல் பாவலோவனா'வையேதான் சாரும். ராஜு அதிலும் என்னைவிடக் கெட்டிக்காரன். அவன் சிற்சில சமயம் உலகப்பிரஸித்திபெற்ற 'ஸோனாடா'வை வாசிப்பதுண்டு 'அயல் நாட்டுச் சங்கீதம் மனச்சாந்தி அளிப்பதில்லை' என்றுதான் அவன் சொல்லிவந்தான்.

நானோவெனில் இடையிடையேசங்கீதானுபவத்தில் லயித்துவிடுவேன். குடும்ப வாழ்க்கையோ, காலேஜ் பழக்க வழக்கங்களோ எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எல்லாவற்றிலும் ஒரு வித வெறுப்புத்தான் எனக்குத் தோன்றியது. இன்று ராஜுவின் பாட்டு, 'உலகில் உனக்கும் இடமுண்டு. அழகேவடிவெடுத்த, யௌவன வெறியில் மூழ்கிய பெண்ணாகிய, நீயும் சில பித்தர்களால் பூஜிக்கப்படுவாய்.' என்று சொல்வதுபோலிருந்தது.

T. B. என்ற கவலையோ, கால்ஷியத்தைப் பற்றிய டாக்டரின் பேச்சோ, எல்லாம் எங்கோ பறந்தது. யௌவன வாழ்க்கையின் ஆனந்த உணர்ச்சியை விழித்த நிலையிலேயே கனவுகாணலானேன். 'டாக்டரும் நானும் சேர்ந்து சுற்றுப்பிரயாணத்திற்குக் கிளம்பி இருப்பதுபோன்றும், அநேக ஆண்கள் என் மோகனவலையில் சிக்குண்டு, 'கண்ணே, மணியே' என்று புகழ்வது போன்றும், டாக்டர் என்பொருட்டே தொழில் நடத்தி வருவதுபோன்றும், என்னைக் காப்பதெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதுபோன்றும், எனது அன்பிற்குப் பாத்திரமானவர் டாக்டர், அவரைத்தவிர எனக்கு வேறு உறுதுணையில்லை என்பதுபோன்றும்' ஏதேதோ மனத்திரையில் எழுந்தன.

இந்தக் கனவில் மூழ்கியிருந்த நான், 'உண்மையில் நோய் வாய்ப்பட்டு, டாக்டர் கன்னையாலால் எனக்குச் சிகித்ஸை செய்ய வருவாராகில் எவ்வளவு நன்றாயிருக்கும்?' என்று கற்பனை செய்யலானேன்.

'அடுத்தபடியாக, என் உருவம் புருஷர்களை மயக்கிவிடும் சக்திபெற்றதுதானா? உண்மையில் கன்னையாலாலிற்கு என்மீது காதல் ஏற்பட்டிருக்கிறதா? என் களையிழந்த முகத்தைக் காணுங்கால் அவருள்ளத்து ஏதாவது கவலை ஏற்படுகிறதா?' என்ற சிந்தனையில் மூழ்கினேன்.

உடன், என் மனத்திரையில் அவரது படம் எழுந்தது. அவரது கண்களினினிமை என் கண்களில் பதிந்தது. அவர்மட்டுமல்ல. அவரது இணைபிரியாததோழரான புரொபஸர் கிசோரி மோகனரின் உருவமும் என் மனத்திரையில் வரையப்பட்டிருந்தது. 'இருவரிலும் அதிக அழகு வாய்ந்தவர் யார்? கன்னையாலால் என்றுதான் எனக்குப் படுகிறது. கிசோரி மோகனும் பார்ப்பதற்கு அழகாகத்தானிருக்கிறார். ஆனால் டாக்டர் கன்னையாலாலின் முகத்தில் தாண்டவமாடும் 'களை' கிசோரி மோகனிடத்தில் காணப்படவில்லை. கிசோரி மோகனைப் போல என்னுருவத்தைப் பூஜிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமிருக்கவேண்டும். ஆனால் டாக்டருக்குத்தான் இதயத்தை அர்ப்பிக்கவேண்டுமென்று நான் விரும்பினேன்.

கடவுளின் கருணையென்றுதான் கூற வேண்டும். ஆண்கள் தம் வலிமையை நன்கு அறிந்துகொள்ளவில்லை. தம் வலிமையைக் கொண்டு பெண்ணுள்ளத்தில் பயங்கரமான புயலை எழுப்பிவிடலாம் என்பதை அவர்கள் நன்கு உணரவில்லை. அதைப் பெண்கள் செய்த பாக்கியம் என்றுகூட சொல்லிவிடலாம். இல்லையேல், உலகத்தில் தற்காலம் பெண்ணினம் அனுபவிக்கும் கொடுமைகள், இரண்டு மடங்காக அதிகரித்திருக்கும். பெண்ணுள்ளத்தைத் தம் சக்தியினால் வசப்படுத்திவிடலாம் என்பது ஆண்களுக்குப் புரியவே இல்லை. அதனால்தான் அவள் பாலுள்ள உரிமைகளுக்குத் தாம் பாத்தியமில்லை என்றெண்ணி, இம்மண் ஆட்சியில் தன் பலத்தைப்பிரயோகிக்கிறது ஆணினம். அடமூடமே! ஆண் வலியின் காரணமாக, பெண்ணுள்ளம் துகள் துகளாக ஆகியிராமல் இருக்குமாகில், உலகத்து எந்த மாபெரும் சக்தியும் அந்தஇனத்தை அடிமைப்படுத்தி யிருக்க முடியாது. தன் உள்ளக் கொதிப்பின் காரணமாகத்தான் வழியின்றிக் கிடக்கிறது, அது. இல்லாவிட்டால் பயங்கர உருவம் படைத்த காளியின் பிரளய நிருத்தியம், யுத்த தேவதையின் ரத்தவெறி, இவைபோன்ற கொடுஞ் செயல்களால் சிருஷ்டியையே அழித்திருக்கும்.

# ஜகஜ்ஜனனீ

கே. சுந்தரம்மாள்

"கலா வல்லப கான மண்டலீ சபா" என்று பெரிய கரும்பலகையில் கில்ட் கொண்டு கொட்டை எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் இதில் எப்பொழுதும் கலையும், கானமும் நர்த்தனம் புரியுமென்று, நினைக்கக்கூடும். ஆனால் உள்ளுக்குள் சென்று பார்த்தால், உயர்தர வேலைப்பாடமைந்த ராம, கிருஷ்ண படங்கள், தூசடைந்து கருத்துப் போன பாசிமணி தோரணத்தின் நடுவில் மாட்டப் பட்டிருப்பதையும் வௌவால் எச்சங்களின் தடத்தையும் தான் காணலாம். ஒருகாலத்தில், அப்படங்களுக்குச் சுக்ரதிசை அடித்திருக்கலாம். அதை ஏற்படுத்திய பெரியார் மறைந்ததும் சனி திசை பிடித்தது.

வறுமையும், அதிசம்சார பாரமுமுள்ள ஒருவர் காலைமாலைகளில் அந்தமடத்திற்குள் உட்கார்ந்து பாராயணம் செய்வார். அவர் கையில் ஏதாவது கிடைத்தவன்று சுவாமிக்கு நிவேதனம் செய்வார். இல்லாத நாள் 'இருவர் நிலைமையும் ஒன்றுதானப்பா ராமசந்திரா' என்று படத்தினடியில் படுத்துக் கொண்டிருப்பார். பதினைந்தாம் புள்ளி விளையாடும் பையன்களுக்கும், சீட்டாட்டமாடும் வாலிபர்களுக்கும் ஸௌகரியமாக இருந்தது. கான மண்டலீ கூப்பாடு மண்டலீயாக விளங்கி வந்தது. இப்படி ஜீவனற்ற நிலைமையிலிருக்கும் மண்டலீ, ஸ்ரீராம நவமி உத்ஸவம் பத்து நாள் மட்டும், பொது ஜனங்களின் முயற்சியால் புத்துயிர் பெற்றது போல் தோன்றும். உத்ஸவம் முடிந்ததும், பழைய குருடீ, கதவைத்திறவடீ' என்ற பல்லவிதான். நான் பார்க்கும் நாளாக இப்படித்தான் நடந்து வந்தது.

உலகத்தில் ஒருவருக்குக் கஷ்டத்தைக் கொடுத்த விஷயம், இன்னொருவருக்கு மிக்க உதவியளிப்பது சர்வசகஜம். அதுபோல யுத்தத்தினால் அதிக கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும் சமயத்தில், அதன் விளைவினால் கான மண்டலிக்கு, ஏன் எங்கள் கிராமத்திற்கே ஓர் அதிருஷ்டம் அடித்தது.

எங்கள் கிராமம் சற்று விசாலமானதே. பழையதெரு, புதுத்தெரு, என்ற இரண்டு பிராம்மண அக்ரஹாரமும், செட்டி, கோமுட்டி, பிள்ளைமார், முதலிய தெருக்கள் நான்கும், ஒருசிவன் கோவிலும், சிறிய ஆறும், கான மண்டலி ஒன்றும் உண்டு. நாலாவது பாரம் வரையிலுள்ள ஆண் பெண் பள்ளிக்கூடங்கள் இரண்டும் உண்டு. பள்ளிக்கூடம் பாதிரிமார் கைங்கர்யம். சாதாரணமாக, ஒளியிழந்தாற் போலிருந்த எங்கள் கிராமம் "எவாகேஷன்" என்ற ஜோதியால் பிரகாசமடையத் தொடங்கியது. இரண்டு ரூபா வாடகைக்குச் சிந்துவாரின்றிக் கிடந்த வீடுகள் பத்துக்கணக்கில் வாடகை உயர்ந்தது. ஓர் உயர்தர உத்யோகஸ்தர், பென்ஷன் தாரின் முயற்சியினால் மின்சார விளக்குப் போடப்பட்டது. பிறகு எங்கள் ஊர் இந்திராபுரி, என்று சொல்லிக்கொள்ளுவதற்குத் தடையேது?

நாட்டியம், சங்கீதம், காவியம், இவைகளின் மீது உலாவிய நாரீமணிகள், சிவன் கோவிலுக்குப் போய் வம்பு பேசிப் பொழுதைக் கழிக்க முடியுமா? ஸ்திரீகள் கிளப் ஒன்று முளைத்தது. சங்கீத சபா ஏற்படுத்த வேண்டுமென்று பேச்செழுந்த சமயத்தில் கான மண்டலீ மீது அதிருஷ்டச் சக்கரம் சுழன்றது. பெரிய கைகள் ஒன்று கூடும் பொழுது செட்டி கோமுட்டிமாருக்கும் சங்கீதத்தில் அதிக ருசி ஏற்பட்டது. கானமண்டலீ கண்ணைக்கவரும் வேலைப்பாடமைந்த ஓர் உன்னத, கட்டடமாக மாறியது. ஆனால் பெயரை மட்டும் மாற்றவில்லை. வருஷந்தோறும் ஸ்ரீராம நவமி உத்ஸவத்தில், அநுமான் ஆவேசம் வந்து ஆடும். மாருதி தாஸனுக்கு ஆவேசம் வந்து பெயரை மாற்றக் கூடாது என்று சொல்லி விட்டார். அந்த வருஷம் ராம நவமி உத்ஸவாரம்பமாகு முன் தான் கட்டடம் முடிவடைந்தது. பெரிய கைகள் ஒன்றுகூடி ஒற்றுமையைக் கடைப் பிடித்து நடத்தினதால் பெயர் பெற்ற வித்வான்கள் வித்வாம்ஸனிகள் கான மண்டலிக்கு விஜயம் செய்தார்கள்,

ஐந்தாவது நாள் ஓர் . இளம் வித்வான் வந்தார். வயது இருபத்திரண்டு. நல்லசிவப்பு நிறம். களைபொருந்தியமுகம். அண்ணாமலைக் கலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவர். கல்வி தேஜஸ் முகத்தில் பிரதிபலித்தது. பாடகருக்குரிய, கடுக்கன், மோதிரம் கழுத்தில் சங்கிலி, முதலிய ஒன்றும் அணியவில்லை, தூய மல்வேஷ்டி. வெள்ளை சில்க் ஷர்ட். ஷர்ட்டின் பித்தானின் வைரம் மாத்திரம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. மேடையின் மீது தீபாலங்காரங்களுக்கு மத்தியில் அவர் உட்கார்ந்திருந்த தோற்றம் அதியற்புதமாக இருந்தது. மண்டையை அதிகமாக உருட்டாமலும் கையை வீசாமலும் அமைதியாகவே பாடினார். சுகமான, கரகரப்பில்லாத சாரீரம். அபார ஜிலு ஜிலுப்பு. தமிழ்,

தெலுங்கு, இரண்டிற்கும் யாதொரு விரோத பாவமும் கிடையாது, இரண்டின் ருசியையும் மாறி மாறி அனுபவித்துத் தெரிந்துகொள்ளட்டுமென்ற எண்ணம் போலும். இரண்டு தமிழ்ப் பாட்டிற்கொருதரம் தெலுங்கு கீர்த்தனையைப் பாடி வந்தார்.

'ஆஹா இது போன்ற கச்சேரியை இதுவரை அநுபவித்ததில்லை' என்ற சப்தம் நாலா பக்கமும் எழுந்தது. ஊசிவிழுந்தால்கூட காது கேட்கும் அமைதியில் கச்சேரி அமைந்தது. இது வரை நான் கேட்டிராத ராகத்தை ஆலாபனம் செய்தார். சபையெங்கும் ஆஹாகார கோஷம் எழுந்தது. ராகம் பாடினதும், "ஜகஜ்ஜனனீ" என்ற கீர்த்தனத்தை அதியற்புதமாகப் பாடினார். ஒரே அப்ளாஸ். அன்றைய கச்சேரியில், ஜகஜ்ஜனனீ அவருக்கு அபார மதிப்பைக் கொடுத்து விட்டாள்.

கச்சேரி முடிந்து வீட்டிற்கு வந்ததும் மாலினி என்னிடம் வந்து "அண்ணா, நீ சபையின் காரியதரிசிதானே?" என்றாள்.

"இது என்ன புதுக் கேள்வி? மாலினீ. ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவழித்து இரண்டெழுத்தைப் பரிசாகப்பெற்று, மனுப்போடும் படலத்திற்கு வந்து, வார்சர்விஸ் எனக்கே கொஞ்சம் யோசனைதான். ஆனால் அதன் பழியை அம்மா ஏற்றுக்கொண்டுவிட்டதால் தற்சமயம் பொழுது போக்கிற்கு, சங்கீத சபாவின் காரியதரிசியாக இருப்பதுதான் நம்ம ஊர் ப்ரஸித்தமே, நீ என்னமோ புதிர் போடுகிறாய்" என்றேன்.

"ஏன் இக்கேள்வி என்றால், இன்று பாடினவர் உனக்குப் பழக்கமாகிவிட்டாரா என்பதைத் தெரிந்துகொள்ள" என்றாள்.

"ஏன்? ஏதாவது கண்டதும் காதல்........."
என்று சொல்லி முடிக்குமுன்,

"சட்! வாயை மூடு. என்ன தாறுமாறாகப் பேசுகிறாய்? நான் சொல்லப்போவதை முழுவதும் காதில் வாங்கிக்கொண்டு பேசு. அவரிடம் அந்த 'ஜகஜ்ஜனனீ' என்ற பாட்டை எழுதி வாங்கித்தர உன்னால் முடியுமா? உனக்குப் பழக்கமுண்டா? சொல்லு. புது மாதிரிப் பாட்டு. ஆஹா! அவர் பாடும் பொழுது எவ்வளவு இன்பமாக இருந்தது!" என்றாள்.

"பூ இவ்வளவுதானா? என்ன விஷயமோ" என்று பயந்தேன். சில மணி நேரத்தில் இருவரும் அத்யந்த நண்பர்களாகிவிட்டோம். நாளை நம் வீட்டிற்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நம்ம ஸபாவில் இன்னொரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்போகிறார்கள். அனுமந்தஞ்செட்டி தன் வீட்டுக் கல்யாணத்தில் வேறு கச்சேரி வைக்கப்போகிறான். ரூபா நூறு கொடுக்க ஏற்பாடு. கவலைப்படாதே. நாளை வந்ததும் எழுதிக் கொடுத்துவிட்டு மறுபடியும் பாடும்படி சொல்கிறேன்" என்றேன்.

"அப்படிச் செய்தாயானால் உனக்கு வெரி வெரி தாங்க்ஸ்" என்றாள்.

மறுநாள் வி. வி. நாதன் (பாகவதர்) எங்கள் வீட்டிற்கு வந்தார். வரவேற்ற என் தாயார் "ஏண்டாப்பா உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டாள்.

"பாலூர்" என்றார்.

"நினைச்சேன், கோபு ஜாடை இருக்கிறதே என்று. நீ கோபுபிள்ளை விச்சுதானேடா?" என்றாள்.

"ஆமாம் மாமி. உங்கள் யூகம் சரியே" என்றாரவர்.

"நானும் உன் அப்பாவும் ஒன்றாக விளையாடினவர்கள். நான் கமலாவைப் பிரசவிக்க வந்திருந்தபொழுது நீ ஒன்பது வயதுப் பையன். அப்பவே நன்றா பாடுவே. அப்புறம் உன்னைப் பார்க்கவே இல்லை. சரி விச்சு! நீ நம்மாத்திலேயே இரு. கண்டவிடத்தில் சாப்பிட வேண்டாம்" என்றாள் தாயார்.

"இந்தாம்மா! விச்சு கிச்சு என்று கூப்பிடாதே. கௌரவமாக வி. வி. நாத் என்று கூப்பிடு" என்றேன்.

"நன்னாருக்கப்பா, நாத்தும் போத்தும். நான் விச்வநாதா என்று வாய் நிறையக் கூப்பிடுகிறேன்" என்றாள்.

பாகவதர் வீட்டிலேயே இருக்கும்பொழுது பாட்டிற்குக் கேட்பானேன். மாலினிக்குச் சிக்ஷை ஒன்றும் கிடையாது. ஏதோ பள்ளிக்கூடத்தில் மியூஸிக் டீச்சர் பத்துப் பாட்டுக்கள் ஒருமாதிரியாகச் சொல்லிக்கொடுத்திருந்தாள். அதில் பாதி சினிமாப் பாட்டு. ஆனால் மாலினிக்குப் பூர்வ ஜன்ம வாஸனை, கேள்வி ஞானம் என்றெல்லாம் சொல்லுவார்களே, அதெல்லாம் அவள் விஷயத்தில் உண்மை. இனிமையான சாரீரம். சினிமாப் பாட்டுமுதல் பஞ்சரத்ன கீர்த்தனை வரை ஒரு தடவை கேட்டவுடனேயே ராகம் வழி எல்லாம் பிடிபட்டுவிடும். அப்படியிருக்க, ஜகஜ்ஜனனீயைக் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யையாகப் பாடுவதில் ஆச்சர்யமென்ன?

இந்தச் சமயத்தில் பள்ளிக்கூடத்தில் வருஷாந்தரக்கொண்டாட்டம் ஏற்பாடாயிற்று. அதில் 'கண்டதுண்டோ' என்ற பாட்டிற்கு மாலினி ஏதோ கையை ஒருமாதிரியாக ஆட்டி அபிநயம் பிடிப்பதாக ஏற்பாடு. ஆனால் வி. வி. நாதனுடைய முயற்சியால், மாலினியின் இஷ்டப்படி ஜகஜ்ஜனனீக்கு அபிநயம் பிடிக்க ஏற்பாடாயிற்று.

வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்கு கலெக்டர் தலைமை வகித்தார். மாலினி அன்று ரொம்ப நன்றாகப் பாடினாள். ஜகஜ்ஜனனி பாட்டிற்கு அபிநயம் பிடித்தாள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது அவளின் பாவம். கலெக்டர் சங்கீத அபிமானமுள்ள தமிழர். மாலினிக்கு முதல் பரிசு கொடுத்ததுடன் ஜகஜ்ஜனனி அபிநயம் பிடித்தற்காக ஸ்பெஷல் பரிசு வைர மோதிரம் ஒன்றும் கொடுத்தார்.

அந்த ஜகஜ்ஜனனி அத்துடன் விடவில்லை. மாலினியின் இஷ்டப்படி என் தகப்பனார், அம்மா பிறந்தஊர்ப் பிள்ளையாண்டானை எங்கள் ஊர் மாப்பிள்ளையாக்கிவிட்டார். ஒரு மாதத்திற்குள் நன்றாகச் சொல்லிவைத்து, மாலினிநாதன் ரேடியோவிலும் பாடிவிட்டார்கள். அடுத்த மாதத்திற்குள், ஓர் சமஸ்தானத்தில் சங்கீதப் பள்ளிக்கூடத்திற்கு வி. வி. நாதன் உபாத்தியாயரானார். மாதம் நூற்றுஐம்பது ரூபா சம்பளம். ஆனந்தமாகக் காலங்கழிக்கிறார்கள் ஜகஜ்ஜனனீயின் அருளால்.

மாலினி ஊருக்குக் கிளம்புமுன் அவள் அந்தரங்க நேசிக்கு ஜகஜ்ஜனனீயை எழுதிக் கொடுத்துவிட்டுச்சென்றாள். அவ்வளவுதான் வந்தது அனர்த்தம். ஜகஜ்ஜனனீயைப் பாடினால் நல்ல புருஷன் கிடைப்பான் என்பது பாட்டிமார்களுடைய அபிப்பிராயமாகிவிட்டபடியால் எங்கள் ஊர்க் கன்னிப்பெண்கள் வாயிலெல்லாம் ராகஸ்வரூபமே சிதைந்து வசிக்கலானாள் ஜகஜ்ஜனனி.

பக்கத்து வீட்டு மாமி குழந்தையைத் தொட்டிலில்விட்டு ஜகஜ்ஜனனீதான் பாடுவாள். ஸ்ருதியிலும் சேராமல் பஞ்சமத்தை ஷட்ஜமத்திலும் ஷட்ஜமத்தைக் காந்தாரத்திலுமாக ஜகஜ்ஜாலவித்தையாகப் பாடுவாள். விளையாடும் குழந்தைகளோ "அடி சகச்சனனீ பாடுவோமா" என்று அவர்களுக்குத் தோன்றியபடி இழுப்பார்கள். தாங்கள் அதிக சங்கதிகள் மெட்டுடன் பாடுவதாக நினைத்து எங்கேசென்றாலும் பாடித் தீர்த்தார்கள் பெண்கள். அது ரதிபதிப் பிரியாவா. கரகரப் பிரியாவா? கமுதைக் காம்போதியா? என்று அந்த ஜகஜ்ஜனனீதான் அறிந்து சொல்ல வேண்டும்.

அமிர்த தாரையாக அன்று அனுபவித்த ஜகஜ்ஜனனீ இன்று கர்ணகடூரமான சப்தமாகத் தோன்றிவிட்டது. இதைத் தவிர்ப்பது எப்படி? என்ற பிரச்னையில் நான் பல விதக் கனவுகள்கண்டு விடிந்து எழுந்துவந்ததும், என் கடைக்குட்டி தங்கை பத்மா, "பாண்டி குமாரி" என்று செப்புக்களை எடுத்துப்பரத்திக்கொண்டிருந்தாள். எனக்கு வந்த ஆத்திரத்தில் அவள் முதுகில் ஓங்கி ஓர் அறை விட்டு, இனிமேல் இப்பாட்டைப் பாடாதே என்றேன். அவள் முகாரி பாடிக்கொண்டு அம்மாவிடம் சென்றாள். 'ஏண்டா தடியா அதுபாட்டும்பாடிட்டுப்போறது, குழந்தையை ஏன் அடித்தாய்?' என்று அம்மா ஸஹஸ்ர நாமம் தொடங்கிவிட்டாள்.

பின்பக்கம் பல் தேய்க்கச் சென்றேன். பாத்திரம் விளக்கிக்கொண்டிருந்த வேலைக்காரி, சகச்சனனீ என்று முணுமுணுத்தாள்.

"ஏ. இந்தா வாயை மூடு" என்றேன். அவள் பயந்துவிட்டாள். காப்பி சாப்பிட்டானதும் அறையில் வந்து உட்கார்ந்தேன். வண்ணான் வந்து சேர்ந்தான். நான் அழுக்குத் துணிகளைப் பொறுக்கிப் போடும்பொழுது, அவன் அவைகளை ஒன்றுசேர்த்துக்கொண்டு, "வேண்டும் வரம்தர" என்று அபஸ்வரமாக இழுத்தான். ஐயோ! ஜகஜ்ஜனனீ என்று அலற வேண்டும்போலிருந்தது. கையிலிருந்த துணியை அவன் முகத்தின்மீது விட்டெறிந்தேன்.

"ஏஞ்சாமி" என்றான்.

"இனிமேல் நீ இந்தப்பாட்டை பாடக் கூடாது" என்றேன்.

"என்ன சாமி! அந்த அய்யரு பாடின பாட்டு நல்லாருக்குது பாடினா என்ன?"

"அந்த அய்யரு பாடினதை நீங்களெல்லாம் பாடினால், போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போய்விடுவான். அது அந்த அய்யர் உத்தரவு" என்றேன்.

"அதென்னசாமி. பாடினா பிடிப்பாங்களா? ஏன் அப்படிச் சொன்னாரு?"

"இதைப் பார்! உன் கழுதையை இன்னொருத்தன் இழுத்துக்கொண்டுபோனால் நீ என்ன செய்வாய்?"

"ஆ! வளக்குப் போடுவேன்"

"அதுபோலத்தான் அவர் பாட்டை நீங்கள் பாடினால் வளக்குப் போடுவாரு. அதனால் உங்க ஆள்களிடமெல்லாம், பாடக்கூடாது என்று எச்சரித்துவிடு" என்றேன்.

"கும்பிடு சாமி. அப்படியே செய்கிறேன்" என்றான். இந்த வழியினால் கீழ்த்தர ஜனங்களின் வாயில் ஜகஜ்ஜனனீ விழாமல் காப்பாற்றினேன். ஆனால் அக்கிரஹாரத்துப் பாட்டி, மாமி, யுவதி, யுவர்கள் இவர்களிடமிருந்து காப்பாற்ற எனக்குச் சக்தியில்லாமல் போய் விட்டது. இந்த அபாயத்திலிருந்து கொஞ்ச நாளாகிலும் தப்ப எண்ணி, மாலினி இருக்கும் ஊருக்குச் சென்றேன். அவ்விடம் இரண்டு மூன்று நாள் மாலினியும், நாதனும் ஜகஜ்ஜனனீயைப் பாடக்கேட்ட பிறகுதான் அவளின், பூர்ணமான ராகஸ்வரூபம் மனதில் பதிந்தது. மனதிலிருந்த பெரும் பாரம் நீங்கினதுபோ

விருந்தது. அன்று ஓர் உறுதி செய்துகொண்டேன். இனிமேல் ஜகஜ்ஜனனீயை மாலினி நாதன் பாடினால் கேட்பது, மற்றப்படி யார் பாடினாலும் அது எந்த ஸதஸானாலும், கண்ணான மனிதரானாலும், அந்த இடத்தைவிட்டு எழுந்துபோய் விடுவது என்று. ஏனென்றால், என்னைப்போல் அந்த அபஸ்ரவத்தைக் கேட்டவர்களுக்குத்தான் தெரியும் அதன் கஷ்டம். நல்ல வேளையாக அந்த ஊரில், ஒருவரும் என் காதில் படும்படி பாடவில்லை. இது ஓர் நல்ல காலம் என எண்ணினேன்.

அந்தச் சமயம் ஓர் பெண்ணைப்பார்க்க வேண்டுமென்றும், தஞ்சாவூர் ஸ்டேஷனில் அம்மா அப்பா இவர்களைச் சந்தித்து, எல்லோரும் சேர்ந்து போகலாமென்றும் அப்பா கடிதம் எழுதியிருந்தார். அன்றைய தினம், மாலினி நாதன் ரேடியோ சான்ஸ் இருந்தபடியினால் அவர்கள்கூட வரமுடியாமல் போய்விட்டது. இந்த ஏற்பாட்டில், எனக்கு இரண்டு விஷயம் வருத்தத்தைக் கொடுத்தன. மாலினிகூட வர முடியாமல் போனது ஒன்று. சென்னையில் நான் படிக்கும்பொழுது, தினம் சாயங்காலம் நாள் தவறாமல் என்னுடன் பஸ் ஏறும் பெண்மணியின் ஊர் பெயரை விசாரித்துத் தெரிந்துகொள்ளாமலிருந்துவிட்டோமே என்ற வருத்தம் ஒன்று. இருவரும் கண்களினாலேயே பேசினோமே தவிர ஒரு விஷயம்கூட பேசியதில்லை. அவளைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்திருந்த விஷயம் எப்படி நடைபெறும்? மனித யத்தனத்தில் தவறிய விஷயத்தை விதியின்மேல் போடுவது இயற்கைதானே. அதுபோல் நானும், விதிப்படி முடியட்டும் என்று ஊமை கண்ட கனவைப்போல், மனதில் உள்ளதை வெளியிட வகையில்லாமல் பெண் பார்க்கச் சென்றேன். மனோன்மணியின் காதல்கனவுபோலாயிற்று என் காதல்.

அவள் வந்து என் தந்தையை நமஸ்கரித்துவிட்டு என்னையும் நமஸ்காரம் பண்ணினாள். அதுவரை எங்கேயோ அலக்ஷியமாகப் பார்த்துக்கொண்டிருந்தவன் திரும்பினேன். எதிர்பாராத ஆனந்தம் ஆச்சர்யத்தில் முழுகடித்தது. தெய்வத்தை மனமார வாழ்த்தினேன். அவள் என் கடைக்கண் காதலியேதான். அவள் உள்ளே சென்று அடுத்த அரையில் உட்கார்ந்து பிடிலை எடுத்து ஸ்ருதிகூட்டி ரதிபதிப்பரியா ராகத்தை ஆலாபனம் செய்தாள். என் நெஞ்சு படக் படக் என்று அடித்துக்கொண்டது. ஜகஜ்ஜனனீயைப் பாடாமலிருக்க வேண்டுமே என்று மனம் தவித்தது. பாடிவிட்டால் என் சபதப்படி நான் அவ்விடம் விட்டுச் சென்றுவிடவேண்டும். அப்படிச் சென்றால் கடைக்கண் காதலியை இழக்க வேண்டியதே. என்ன செய்வது? சபதத்தை மாற்றி விடுவோமா? என்றுகூட நினைத்தேன். பிறகு 'சே, அது கோழைத்தனம், நாம் எதற்கும் பின்வாங்காமல் சபதத்தைக் காப்பாற்றவேண்டும்' என்ற உறுதியே தலைதூக்கிற்று. நாற்காலியினின்றும் எழுந்திருப்பதற்குத் தயாராக இருந்தேன். பிடிலின் வில் ஜகஜ்ஜனனீ என்ற நாதத்தை எழுப்பிற்று. அவ்வளவே இரண்டெட்டில் வெளிவாசலைத் தாண்டிவிட்டேன். அப்பா பெண்ணின் தகப்பனார் இருவரும் 'எங்கே செல்லுகிறாய்?' என்று கேட்டுக்கொண்டே வாசல் பக்கம் வருமுன், அங்கு வைத்திருந்த ஸைக்கிளை எடுத்துக்கொண்டு ஸ்டேஷனை அடைந்தேன். எங்கள் ஊர்வண்டி புறப்படும் சமயம் அவர்கள் வீட்டு வேலைக்காரன் தலைதெறிக்க ஓடிவந்தான். அவனிடம் ஸைக்கிளைக் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் வண்டியில் ஏறினேன். எங்கள் ஸ்டேஷன் வரும்பொழுது டபிள் சார்ஜ் கொடுத்தேன்.

தகப்பனார் வந்தபின்பு 'என்னடா கிறுக்குப் பிடித்தவன்போல் ஓடினாய்? அவர்கள் என்ன நினைப்பார்கள்? என் மானத்தை வாங்கிவிட்டாயே. நல்ல சம்பந்தம். தவறவிட்டாய். இனி உன் முகரக்கட்டையைத்தேடி யார் வரப்போகிறார்கள்' என்று ஸஹஸ்ரார்ச்சனை செய்தார்.

எனக்குப் பதில் சொல்லப் பதமே கிடைக்கவில்லை. ஜகஜ்ஜனனீயைப் பாடினாள் என்று சொன்னால், அப்பா அடிக்க வருவார். பெண்ணைப் பிடிக்கவில்லை என்று சொல்லமுடியாது. அதனால் பதிலே பேசாமல் இருந்துவிட்டேன். கடைக்கண் காதலியை இழந்துவிட்டோமென்ற வருத்தமும், காரணம் சொல்லமுடியாமல் விழிக்கவேண்டியிருக்கிறதே என்ற சங்கடமும், சேர்ந்து என் மனதை வாட்டினதால், உற்சாக மின்றி ஒரு வருடமும் அதிகமாகப் பேசாமலிருந்துவந்தேன். இதைக் கவனித்ததும் எனக்குச் சித்தப் பிரமையோ என்று சந்தேகப்பட்டார்கள். "சபதம், உறுதி" என்ற பதங்களை வார்த்தையுடனில்லாது நடத்திக்காட்ட வேண்டுமென்றும், அதனால் வரும் நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாமலும், விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும் நோக்கமில்லாமலும், சமயங்களில் ஏற்படும் தோல்விகளை வெளிக்காட்டாமலும் ஒருவிதமாகச் சங்கடப்படுவது வாலிபப் பருவத்து அநேக மிடுக்குக்களில் ஒன்றாக இருந்துவருவது ஒவ்வொருவயது சென்றவர்களும், தங்கள் வாலிப சேஷ்டைகளை நினைத்துப் பார்க்கும்பொழுது, தமக்குத் தாமே சிரித்துக்கொள்ளும்படி இருக்கும் என்ற உண்மையை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

பாவம். என்னால் அப்பெண்ணிற்கு ஓர் அவச்சொல் ஏற்பட்டுவிட்டது. 'பெண்ணைப் பார்க்கவந்தவனுக்குச் சித்தப்பிரமைஏற்பட்டுவிட்டது. அந்தப் பெண்ணிற்கு ஏதோ தோஷமிருக்கிறது' என்ற வதந்தி உலாவலாயிற்று. அதையும் நான் பொருட்படுத்தவில்லை. ஒரு சிலரது அபிப்பிராயப்படி கல்யாணம் செய்

தால், பிரமை நீங்கிவிடும் என்ற நம்பிக்கையில், என் தகவல் இல்லாமலே நிச்சயம் செய்துவிட்டார்கள். நானும், ஜகஜ்ஜனனிக்காகக் காதலைத் தியாகம் செய்தோம் என்ற திருப்திக்காகக் கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டேன்.

நாளைக்குக் கல்யாணம். இன்று காலையிலேயே பெண்ணின் ஊர்போய்ச் சேர்ந்தோம். ரயில், பஸ், வண்டி என்ற மூன்றுவிதப் பிரயாணம் செய்யவேண்டியிருந்ததால், அப்படிப் போய்ச் சேர்ந்தோம். என்னுடைய நண்பனொருவனைப் 'பாடிகார்டாக' ஏற்படுத்தியிருந்தார்கள். அவனும் என்னைவிடாமல் சுற்றிக்கொண்டிருந்தான். மத்யானம் சாப்பிட்டானதும் யாவரும் சற்றுக் கண்ணயர்ந்தார்கள். எனக்குக் கடைக்கண் காதலியை இழந்த வருத்தம் தியாக உணர்ச்சியையும் தாண்டிவிட்டது. மனம் நிலைகொள்ளவில்லை. எனது முட்டாள்தனமான செய்கை அப்பொழுதுதான் சற்று விளங்கலாயிற்று. தூக்கம் பிடிக்கவில்லை. நண்பன் நன்ருகக் குறட்டைவிட்டான். மெதுவாகச் சந்தடி செய்யாமல் ஆற்றின் பக்கம் சென்றேன். கல்யாணவீட்டிற்குப் பின்பக்கம் ஓர் அழகிய அடர்ந்த தோப்பு. அதைக் கண்டதும் என்மனதில் ஓர்வித கவர்ச்சி ஏற்படவே அதற்குள் நுழைந்தேன். தோட்டக்காரன் சாப்பிடப் புறப்பட்டான். அவன் வரும்வரை நான் இருப்பதாகச் சொல்லிக் கதவை உட்பக்கம் பூட்டிக்கொண்டு நடந்தேன்.

நடுவில் ஓர்குளம். அதன் கரையில் கூடாரம் அடித்ததுபோல், அடர்ந்து தழைந்த மாமரம். அதன்கிழ் ஓர் கருங்கல் மேடை போடப்பட்டிருந்தது. மேடைமீது உட்கார்ந்தேன். மத்யான வெய்யிலுக்கு ஜலக்காற்றும், குளிர்ந்த நிழலும் என் மனதிற்குச் சற்று இன்பமளித்தன. நாளை ஸஹதர்மிணியாக வரும் பெண்மணி எவ்வித மிருப்பாளோ? என்ற ஓர் சிந்தனை தோன்றலாயிற்று. பிரயோஜனமற்ற விஷயம். ஆனாலும் ஏன் அப்படித் தோன்றினது? என்று எனக்கே புரியவில்லை. "இதுவென்ன வெட்டிச் சிந்தனை" என்று நினைக்கும் பொழுது, "ஜகஜ்ஜனனி" என்ற இனிய குரலெழுந்தது. ஐயோ! இவ்விடமும் வந்ததா ஆபத்து என்று திரும்பினேன். கடைக்கண் காதலி என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள். எனக்கு அவ்விடமிருந்த செடி கொடிகளெல்லாம் ஒரே சுற்றுகச் சுற்றிற்று. இவள் இவ்விடம் எப்படி வந்தாள்? என்ற பிரச்னையில் அவளையே பார்த்த வண்ணம் சிலைபோல் அசையாமலிருந்தேன். "வேண்டும் வரம்தர" என்ற குரல் என் உணர்வைத் திருப்பிற்று. உடனே எழுந்து நடக்கலானேன். "உங்கள் வாழ்க்கையில் முக்யத்வம் பெறும் வித்தையின் மீது ஆணை. நீங்கள் அவ்விடம்விட்டு அசையக் கூடாது" என்ருள்.

ஏனே தெரியவில்லை. மந்திரத்தில் கட்டுண்ட சர்ப்பம்போல் அவ்விடத்திலேயே உட்கார்ந்து விட்டேன். சபதம் அவள்முன் ஆடிக்காற்றுப் பஞ்சின் நிலைமையை அடைந்துவிட்டது. என்ன தைரியம்? முன்பின் பழக்கமில்லாத என்னிடத்தில் என்ன ஸ்வாதீனம் என்று ஆச்சர்யமுற்றேன்.

நான் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் பத்தடி தள்ளி வேறு திக்கை நோக்கியவளாக நின்ருள். சற்றுநேரம் மௌனம் நிலவியது. நமது பலவீனத்தைக் காட்டக்கூடாது என்ற நிலைமையில்,

"ஆணையிட்டு என்னை நிறுத்திய விஷயம் என்னவோ?" என்றேன்.

"தங்கள் சித்தம் தெளிந்துவிட்டதா?" என்ருள்.

"இதற்கு என்ன பதிலைச் சொல்லுவது? ஏதோ சொல்லவேண்டும் என்ற நினைப்பில் இக் கேள்வியின் அர்த்தம்?" என்றேன்.

"அர்த்தமா? அது தங்கள் மனசாக்ஷிக்குத் தெரியும். அதைப்பற்றி யென்ன? நான் வந்த காரியத்தைச் சொல்லிவிட்டுச் சீக்கிரம் திரும்பவேண்டும்" என்ருள்.

எனக்குச் சற்றுத் தைரியமுண்டாகவே "வந்த விஷயம் என்னவோ?" என்றேன்.

"இப்பொழுது நிச்சயிக்கப்பட்டிருக்கும் பெண்ணைப் பார்த்திருக்கிறீர்களா?"

"இல்லை"

"அவள் சம்மதம் பெற்றீர்களா?"

"பார்க்காதிருக்கும் பொழுது நான் சம்மதம் எப்படிப் பெறமுடியும்? அவள் சம்மதமில்லாமலா கல்யாணம் நிச்சயம் செய்திருப்பார்கள்? எதற்காக இக் கேள்விகள்? வந்த விஷயத்தை வளர்த்தாமல் சொல்லுவது மேல்" என்றேன்.

"சுசீலாவும் உங்கள் தம்பியும் இந்த வருஷம் இவள் இண்டர்மீடியட்டும், அவர் பி. ஏ. யும் ஒன்ருகப் பிரசிடென்ஸி காலேஜில் படித்தார்களாம். அப்பொழுது இருவரும் காதலர்களாகிக் கல்யாணம் செய்துகொள்ளுவதாக உறுதி செய்துகொண்டார்களாம். பிறகு வரன்தேடும் படலத்தில் உங்களைத் தேர்ந்தெடுத்தார்களாம். அவள் ஆக்ஷேபிக்கும் சமயம், உங்களது தம்பி, உங்களுக்காகக் காதலைத் தியாகம் செய்வதாகவும், தமதிடத்தில் உண்மையான அன்பிருக்கும் பக்ஷத்தில், தமது தமையன் நிலைமை நன்மையடைய அவரை மணக்கவேண்டும் என்றும், தான் விக்னேச்வரருக்குப் பக்கத்தில் உட்காரப்போவதாக

வும் நீண்டதொரு பிரசங்கம் செய்து கடிதம் எழுதினாராம். அவளும் அவர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கவேண்டி ஒப்புக்கொண்டாளாம். புத்திசாலி. தியாகி.

“பிறகு நாளாக நாளாக அவர் இருக்குமிடம் சென்றால் அவரைப் பார்த்து ஏங்கவேண்டும். நமது மனம் எப்படியோ? என்றெல்லாம் நினைத்துச் செய்யும் வழிதெரியாமல் தவிக்கும் சமயம் நான் வந்துசேர்ந்தேன். நாங்கள் அத்தங்காள் அம்மங்காளானபடியினால் இருவரும் மனம்விட்டே பேசுவோம். விஷயத்தை என்னிடம் சொன்னாள். நானும் சொன்னேன்” என்று சொல்லும்பொழுது,

“நீ என்ன சொன்னாய்?” என்றேன், அதுவரை வாட்டின சங்கோசம் விலகின நிலைமையில்.

“சொன்னேன் சுரைக்காய்க்கு உப்பில்லை என்று. நான் தைரியமாகவே இவ்விடம் வந்திருக்கிறேன். உங்களுடைய எவ்விதமான கேள்விகளுக்கும் பதில் சொல்லத்தயார். நான் இப்பொழுது பி. ஏ. ஜூனியர். ஒரு விஷயத்தின் தீர்ப்பை ஊர்ஜிதப் படுத்தச் சக்தியில்லாவிடில் நான் படித்ததின் பிரயோஜனமென்ன? உங்களுடைய பஸ் ஸ்டாண்டு விஷயத்தையும் ரன்னிங் ரேஸ் விஷயத்தையும் சொன்னேன்.”

“பஸ் ஸ்டாண்டின் விஷயத்தில் குற்றம் என்மீது தானா?”

“உங்கள் கோழைத்தனத்தின் மீது. பெண்கள் வலுவில் பேசுவதுண்டோ? அப்படிப் பேசிவிட்டால் உங்களுடைய அவமதிப்புக்கு ஆளாக வேண்டி வரும், என்பதைக் காலேஜ் அனுபவம் பெற்ற நான்கூட அறியாமல் இருக்க முடியுமா? பிறகு உங்கள் ரன்னிங் ரேஸ் விஷயத்தைச்சொல்லட்டுமா?”

“இதேது பெருத்த வாயாடியாக இருக்கிறாளே” என்று நினைத்தேன். ஆனால் அவள் பேசுவது வீணா நாதம்போல் காதுக்கு இனிமையாக இருந்தது. அதனால் “உம், சொல்லு” என்று சிரித்தேன்.

“நான் ஜகஜ்ஜனனியைப் பாடினதின் விளைவு” என்றாள்.

“என்ன ?” என்று ஆச்சரியத்துடன் அவளை நோக்கினேன்.

“எப்படித் தெரிந்தது என்றுதானே விழிக்கிறீர்கள்? இன்று காலை நீங்கள் வந்ததும், வரவேற்பதற்காக நாங்கள் வந்த பொழுது ஒரு அறையில் உங்கள் தங்கை உங்களிடம் ‘கல்யாண வீட்டில் உன் சபதமெல்லாம் நடக்காது. எல்லோரும் ஜகஜ்ஜனனியைப் பாடத்தான் செய்வார்கள். ஸ்ுஸ்வரமோ அபஸ்வரமோ பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏதாவது முன்போல் எழுந்து போனாயோ கீழ்ப்பாக்கத்திற்குத்தான் செல்ல வேண்டும்’ என்றாள். உடனே விஷயம் விளங்கி விட்டது. முன்னாடியே உங்கள் தங்கையின் கல்யாண விஷயத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்.”

“சரி, நீ இப்பொழுது சொல்ல வந்த விஷயம்?”

“சொல்லுகிறேன். நீங்கள் அரைக் கோழை. உங்கள் தம்பி முக்கால் கோழை. நீங்கள் உறுதியைக் கடைப்பிடிக்கும் வீரர். மாபெருந் தியாகி. உங்கள் தம்பி, தமையனுக்காகக் காதலைத் தியாகம் செய்துவிட்டார். எதிராளியின் நிலைமையை அறியும் சக்தியை இருவரும் இழந்துவிட்டீர்கள். உங்கள் கட்டளைக்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டும். இல்லையா?” என்று சிரித்தவாறு என்னை நிமிர்ந்து பார்த்துக் கூறினாள்.

“ஆஹா! ரொம்ப அழகாகப் பேசுகிறாய். உன்னுடைய சொல் வன்மை நீ என்னை திட்டினாலும், புலப்படாமல் செய்து விடுகிறது. குற்றப் பத்திரிகை படிக்கிறாயே. இப்பொழுது நான் செய்யவேண்டுவதென்ன? என்பதைச் சொல்லு. உன் இஷ்டப்படி நடக்கிறேன்” என்றேன்.

“நிச்சயமாகக் கேட்பதைச் செய்வீர்களா?” என்றாள்.

“நிச்சயமாக” என்றேன்.

“சுசீலாவை உங்கள் தம்பி மணந்து கொள்ளும்படி செய்யவேண்டும்”

“நான்”

“விக்னேசுவரருக்குப் பக்கத்தில் உட்கார வேண்டும் அதுதான் தியாகம். வீரம்”

“சரிதானம்மா நான் உன்னிஷ்டப்படி உட்காருகிறேன். ஆனால் பெரியவர்கள் அப்படி விடமாட்டார்களே. அதற்கு ஒரு வழி சொல்லு”

“உலக வழக்கம் என்னவென்றால் நீங்கள் ஒரு கதலிக்குத் தாலி கட்டவேண்டும். பிறகு உங்கள் தம்பி அவர்காதலிக்குத் தாலிகட்டுவார். அதுதான் வழி”

“ஏனோ! நானும் ஒரு காதலிக்குத்தான் தாலி கட்டுவேன்”

“உங்கள் காதலி நாளையே கிடைத்துவிடுவாளா?” என்றாள்.

“நாளை என்ன? மனமிருந்தால் இந்த நிமிஷமே” என்று சொல்லி விட்டேன் என்னையறியாமலே.

“ஓஹோ! அப்படியா!” என்று கடைக்கண்ணால் ஓர் அம்பை எய்தாள். கன்னம் சிவந்தது.

சற்றுநேரம் இருவரும் என்ன பேசுவதென்று விளங்காத நிலைமையில் ஒருவரை ஒருவர் கடைக்கண்ணுல் பார்த்த வண்ணமிருந்தோம். மேலே ஏதாவது பேச்சுத் தொடங்க வேண்டுமே என்பதற்காக "நான் இவ்விடமிருக்கிறேனென்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன்.

"இது தானு பிரமாதம். இரண்டு நாட்களாக வழிதேடிக் கொண்டிருந்தோம் நாங்களிருவரும். முந்தாநாள் உங்கள் தம்பிக்கு என்னைக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். நான் கண்டிப்பாகப் படிப்பு முடியட்டும், கல்யாணம் வேண்டாம், என்று சொல்லி விட்டேன். உங்களுக்குச் சித்தப் பிரமை என்ற வதந்தியை எழுப்பியவன், என்மீது வலை வீசின ஓர் ஆசாமி. அதனுல் நான் அதை நம்பவில்லை. உங்கள் கல்யாணம் முடிந்த பின்பு, யாவரிடத்தும் பழிவாங்குவதாகத் திர்மானித்திருந்தேன். சற்று முன் நானும் சுசீலாவும் மாடி ஜன்னலருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அவள் மிகவும் வருத்தப்பட்டு அழுதாள். எனக்கு மிகவும் பரிதாபகரமாக இருந்தது. இந்தச் சமயம் உனக்கு எது வேண்டுமானுலும் செய்கிறேன் என்றேன். இந்தக் கல்யாணம் நடவாமல் செய்ய வேண்டும் என்று சொல்லும் பொழுது நீங்கள் இப்பக்கம் சென்றதைப் பார்த்தேன். வேலைக்காரப் பையனை விட்டு நீங்கள் இருக்குமிடத்தை அறிந்து வரச்சொன்னேம். கடைசி ஆசையாக என் மனதை அவரிடம் தெரிவித்து விடு என்றுள். தோட்டம் எங்களுடையது. உட்பக்கம் தாளிட்டுக் கொண்டு வந்தேன். இது பத்தாம் பசலிக் காலம் அல்ல. நாற்பத்து நாலாம் ஆண்டு. பெண்களுக்குச் சம உரிமை என்று மேடைமீது ஏறி மார்புதட்டிப் பேசினுல் மட்டும் பிரயோஜனமில்லை. காரியாம்சத்தில் காட்டவேண்டும். தைரியமாக உங்கள் தம்பியினிடம் விஷயத்தைச் சொல்லி ஒழுங்கு படுத்தி, பெண் உள்ளத்தை மலரச் செய்யுங்கள்"

"திடீரென்று நான் இப்படிச் சொன்னுல், என்னைக் கீழ்ப்பாக்கம் அனுப்பி விடுவார்கள். அதனுல் தம்பியிடம் சொல்லி இருவருமாக ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனுல் என் காதலீ..............என்று நிறுத்தினேன்.

"உங்கள் காதலி ஜகஜ்ஜனனி" என்றுள் மாமரக்கிளையை இரண்டு கைகளினுலும் பிடித்தவாறே.

"இல்லை ஜகன்மோஹினி. சாதுர்ய வசனி" என்று எழுந்து அவள் அருகில் சென்றேன்.

என்னைப் பார்த்துச் சிரித்தவாறே ஜகஜ்ஜனனீயை, மெல்லிய குரலில் முழுவதும் பாடிமுடித்தாள். ஆஹா! என்ன இனிமை, முதல் முதல் வி. வி. நாதன் பாடிக் கேட்ட பொழுது எவ்வளவு அற்புதமாக இருந்ததோ அதைவிட இருமடங்கு இனிமையை அளித்தது. ஜகஜ்ஜனனியை மனமார வாழ்த்தினேன்.

"உங்கள் சபதம் முறிந்ததா" என்றுள்.

"காதலின்முன், வேல்விழியாள் சுழற்றலின் முன், சபதம் உறுதியெல்லாம், சூரியன்முன் பனிபோல்தான்" என்று அவள் கையைப் பற்றி அருகிலிழுத்தேன். பெண்மை வெற்றி என்றுளவள்.

ஒரே முகூர்த்தத்தில் செள. சுசீலாவிற்கும் சி. நாராயணசுவாமிக்கும், செள. விமலா தேவிக்கும் சி. கோபாலசுவாமிக்கும் (நான்) வெகு விமரிசையாகக் கல்யாணம் நடந்தது. ஊஞ்சல் நலுங்கு முதலியவைகளில் விமலா, 'ஜகஜ்ஜனனியை' கடைக்கண்ணுல் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புடன் பாடத் தவறவே இல்லை. ஆக ஜகஜ்ஜனனீ, மாலினிக்கு அவள் பெயரைச் சொன்னதும், பஞ்சாமிர்தத்தையே உண்ணும்படி செய்தாள். என் விஷயத்தில் கொஞ்சம் கும்மட்டிக் காயை ருசிக்கச் செய்துவிட்டு, பின்பு பஞ்சாமிர்தத்தின் மஹிமையை அறியச்செய்தாள்.

இந்த விஷயத்தில், மாலினி, நாதன், விமலா, சுசீலா, நான் யாவருங்கூடி ஓர் தீர்மானம் கொண்டு வந்தோம். இந்த யுத்தகாலத்தில் அரசாங்கத்தைப் பாதிக்குமோ என்ற பிரச்னையினுல் இந்த மாதிரி சினிமாப் படத்தைக் காட்டக்கூடாது என்றும், இன்னும் சில விஷயங்களைச்சர்க்கார் அனுமதியின்றிச் செய்யலாகாது என்றும் சட்டம் விதிப்பதுபோல், இனிமேல் ஓர் வித்துவான் ஓர் நல்ல கிருதியைப் புதிய பாணியில் பாடினதும் அதைப்பாட வேண்டும் என்ற பிரியமுள்ளவர்கள், ஓர் வித்துவானிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டு தான் நாலுபேர் முன்னுலோ, சபையிலோ பாடலாம். நாலுபேர் காதில்படும்படி அபஸ்வரமாகப் பாடக்கூடாது. வேண்டுமானுல் ஒருவருமில்லாத இடத்தில் வாய்க்குள் முணுமுணுத்துக் கொள்ளலாம் என்ற சட்டத்தை ஏற்படுத்துமாறு ஒரு மனுப் போடுவதாக முடிவு செய்தோம். ஏனென்ருல், இந்த மாதிரி அபஸ்வரங்களைக் கேட்பதனுல், யுத்த விஷயமாகச் செய்யும் வேலைகளில் கவனக் குறைவு ஏற்பட்டு, அரசாங்கத்தைப் பாதித்து விடுமோ என்ற பிரச்னை எழுந்துவிட்டது. ஆனுல் எங்கள் நோக்கம் நிறைவேறுமா? என்பதை ஜகஜ்ஜனனியைக்கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சுபம்!

# மின்னல்

**வி. ஜி. ஸ்ரீநிவாஸன்**

"மின்னல்" என்ற உடன் நாம் என்றோ கண்டிருந்த செங்கால் வீசிச் சென்ற ஒரு வண்ணக் கொடியின் ஒளி மிகு சித்திரம் நமது மனக்கண் முன்பு எழுவது திண்ணம்.

"மின்னல்" என்ற சொல் கேட்டவுடனே அதைத் தொடர்ந்து கருவானம், கார்மேகம், புயல், மழை, இடி எல்லாம் ஒரு கணம் தோன்றி மறைகின்றன.

மானிட வாழ்க்கை மிகவும் இருண்டது; பயங்கரமானது. "காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்யம்" நிரம்பிய உலகை இருள் செறிந்த வானத்திற்கு ஒப்பிடுதல் சாலப் பொருந்தும்.

நமது வாழ்க்கைப் பெரு வானிடையே கார் மேகம், புயல் காற்று, இடி முதலியன உண்டு.

இந்த இருள் சூழ்ந்த வாழ்விற்கு ஒரு கணம் அமைதியும், ஊக்கமும் அளித்து, விஷயத்தைத் தெரிவித்துத் தெளிவாக்கும் வன்மை, ஒரு கணம் தோன்றி உடன் சென்றோடி மறையும் மின்னலுக்குண்டு! அந்த மின்னலும் இல்லாவிடிலோ?

கொஞ்சம் கற்பனையைக் கடத்துவோமே!

நாம் ஒரு தனி வழி போய்க்கொண்டிருக்கிறோம். வழி புதிது. திடீரெனக் காற்றெழுகிறது. பேய்க்காற்று புயல் காற்றாக வீசுகிறது. கருமேகங்கள் எங்கிருந்தோ சுழன்று, திரிந்து, வந்து வானவெளியை மறைத்துக் கருமை காட்டுகின்றன. பாதை தெரியவில்லை; மனம் குழம்புகிறது. என்ன செய்வது? ஆசை நிராசையாகி விடுமா என்ன? இல்லை............

ஆம்; ஒரு மின்னல் தோன்றுகிறது கருவானத்திடையே! அது துவள்கிறது; கொடி வீசுகிறது; சாடுகிறது; பாய்கிறது; போராளி வீசுகிறது; அந்த "மோகன மின்சாரத்"திற்குத்தான் எவ்வளவு பிரகாசம்! எவ்வளவு சக்தி!

போதும்! பாதை, இருப்பிடம், சுற்றுப்புறம் எல்லாம் தெளிவாகத் தெரிகின்றன! தைரியம் கொண்டு முன்னேறுகிறோம்.

அஃதே போன்று, நம் இருள் சூழ்ந்த வாழ்விடையே நாம் மறக்கமுடியாத, நினைந்து நினைந்து முன்னேறும்படி செய்யும் சில ஒளி பொருந்திய சம்பவங்கள் நேரிடுவது உண்டு.

வாழ்வு முழுதும் இருண்டதாகவோ, வறண்டதாகவோ இருந்துவிடாது!

நமது கற்பனை நிற்க. கவிஞர் கற்பனையை ரஸிப்போம்!

இந்தக் கவிஞருடைய நோக்கும் தனி; போக்கும் தனி! அவர்களுடைய கற்பனைக் கண்களுக்கு விஷயங்களும் அனுபவங்களும் புதிய புதிய செய்திகளையும், ரகஸியங்களையும் தெரிவிக்கும்.

"மேகத்தைக் கூடிமுயங்கும்—அந்த
மின்னல்செய் நாட்டியம் என்னெனச்
[சொல்வோம்!"

என்று வியப்படைகிறான் ஒரு கவி.

மற்றொரு கவிஞனோ,

"மின்னல் நடமாடும் கார்
மேகத்தைக் கண்டு விட்டால்
வன்னக் கவிமயிலும் என்னுள்
வந்துவந் தாடு தம்மா"

என்று மனம் பூரித்துப் பாடுகின்றான். மின்னல் விளையாடும் கார்மேகம் கவிதா உணர்ச்சியைக் கொடுக்கிறது.

இந்த மின்னின் மென்மையும், துவளும் தன்மையும் பொலிவுறும் பான்மையும் கண்ட கவி, பெண்ணின் சிறு மருங்குலுக்கு ஒப்பாக வைத்து, "மின்னின் இடையாள்" என வருணிக்கிறான்!

இந்த மின்னலைக் கம்பன் எங்கே வைத்து, எப்படிச் சிறப்பித்திருக்கிறான் என்று பார்ப்போம்.

கம்பராமாயணக் காவியத் தலைவியாகிய சீதாதேவியைப்பற்றிக் கம்பன்தான் சொல்ல வேண்டும்! கம்பனே சொல்கிறான்!

வானிடையே தோன்றுகிறதே மின்னல் கொடி! அது அன்பு, அருள், இன்பம், அழகு, அச்சம், நாணம், மடம் பயிர்ப்பு முதலிய அருநலக்குணங்கள் அமையப்பெற்று மண்ணுலகிற்கு வந்தால் எப்படியிருக்கும்? அப்படிப் பொலிவுற்று விளங்கினாள் சீதை!

"விண்ணில் நீங்கிய மின்உரு, இம்முறை
பெண்ணின் நல்நலம் பெற்றது
[உண்டே கொலோ?"

சீதாதேவி, தோழிகள் புடைசூழ, ஒய்யாரமாக, கஜகாமினியாக, அணிபணிகள் மின் தெறிக்கக் கம்பீரமாக வருகிறாள்! ஒவ்வொரு பாங்கியும் ஒரு மின்னற் கொடிபோலத்தான் திகழ்கிறாள். அந்நிலையில் சீதை எவ்வாறு காட்சி கொடுத்திருப்பாள்? கம்பன் சொல்கிறான் கேளுங்கள்!

"சதகோடி
மின்சே விக்க மின்னரசென்னும் படி
[நின்ருள்!"

ஆம், சீதை மின்னலரசியாகத்தான் திகழ்ந்திருக்கவேண்டும்!

வருணனை நிற்க!

"கன்னிக் கவிதையுடன் காலத்துத் தேரேறி மின்னிற் பரந்திடு"கின்ற "மேதைப் பெருங் கவிஞரின்" மின்னல் பற்றிய சித்திரங்களைப் பார்ப்போமே.

"எங்கெங்கே நோக்கிடினும் ஏதெவற்றைப் பார்த்தாலும் அங்கங்கே ஈசனது அற்புதத்தைக் கண்டு" மகிழ்பவனல்லவா கவிஞன்?

ஆகையால் "பேரிடி மின்னல் எதனுலே?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு, அதற்கு விடையாக ஈசனது அற்புத விந்தைகளையும் விளையாட்டுக்களையும் நினைப்பூட்டுகிருன்! ஈசுவர சக்தியை நிலை நாட்டி ஈசன் இருப்பதையும் தெளிவாக்குகிருன்!

மின்னலுக்கு ஒளியும், அதன் விளைவிற்கு முன்பாகப் பேரொலியும் உண்டாவதெப்படி?

கவியுள்ளம் விடை பகர்கிறது!

"விண்ணிலே மாதர்கள் கூடி நின்று-கரு
மேகத்தைக் கழற்சி யாடுராரோ?"

விண்ணக மாதர் கார் மேகங்களைக் கழற்சிக் காயாகக் கொண்டு விளையாடுவதன் விளைவு தானே இடியும் மின்னலும்!

இல்லை.

"வாளினுல் சண்டையும் செய்கிருரோ—
அங்கு
வானவர் பெற்ற மதலையர்கள்?"

தேவகுமாரர் தமக்குள் நேர்ந்த சண்டையில் வாளெடுத்து வீச, வாளுருவும் சப்தமும், வாள்வீச்சின் ஒளியும் தான் இடியாகவும், மின்னலாகவும் பரிணமித்திருக்கவேண்டும்!

ஒரு வேளை ஊழிக் காலத்திற்குத்தான் ஒத்திகை நடக்கிறதோ?

"காளிபோல் ஆங்காரம் கொண்ட
னளோ—அன்னை
கண்ணைச் சிமிட்டிச் சிரிக்கிருளோ?"

என்ற கேள்விகளிலேயே விடையைத் தெரிந்துகொண்டு சமாதானம் அடைகிருன் கவிஞன்!

மற்ருெரு கவிஞன்! இவன் யோக மார்க்கத்தில் சென்று கொண்டிருப்பவன்! இருண்ட வானை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிருன். மின்னல் ஒன்று தோன்றி உடன் சென்ருேடி மறைகிறது.

"நில்லு நீ நில்" எனக் கெஞ்சுகிருன் கவி.

"இங்கு நில்லா உலகியல் வாழ்வு" எனச் சொல்லி, 'நாணிக்கோணி நடித்தெங்கோ' சென்று மறைகிறது மின்னல்.

"மண்ணுலகில் வந்தென்னை அணை" என்கிருன் கவி.

"அடா, என்னைப் போலத்தான் இவ்வுடல் வாழ்வு" என்று சொல்கிறது மின்னல்.

இந்தக்கவி ஞான வேட்கை கொண்டு மின்னலை நச்சுகின்ருன்.

* * * * *

"அது மோனம்" என்றெழுதிவிட்டு மறைந்து விடுகின்றது மின்னலும்!

"மின்னல் எப்படி உண்டாகிறது?" என்ற கேள்விக்கு விஞ்ஞானம் இவ்வாறுதான் பதிலிறுக்கும்!

மேகங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகை மின்சார சக்தி உண்டு. ஒருவகை மேகம் சக்தி கொடுக்கும்; ஒன்று சக்திபெறும். (மின்சார சக்தியில் இரு பிரிவுண்டு. ஒன்று தன மின்சாரம் (Positive) மற்ருென் (negattve) ருண மின்சாரம். இச்சக்திப் பிரிவுகள் முறையே மேகங்களைத் தாக்கி உள்ளன.) காற்றில் அலைபட்ட தன மேகமும் ருணமேகமும் ஒன்றையொன்று நெருங்கி உராயும்போது மின்சாரப் பாய்ச்சல் ஏற்படுகிறது. ஒலியும் கிளம்புகிறது: மின்சாரப் பாய்ச்சலே மின்னல்; ஒலியே இடி.

விஞ்ஞானம் ஏது சொன்னுல் தானென்ன?
நாம் மின்னல் பற்றிய கவிஞர் தம்
கற்பனையைத்தான் ரஸிப்போம்!



டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

# ஜாதிக்குழப்பம்

கே. சந்தானம்

ஊர்வசி மித்திரா மாலைக்கோலம் முடித்துக் கிளப்புக்குத் தயாராகத் தன் கணவன் அறைக்குள் புகுந்தாள். அவர் கையில் புஸ்தகம் பிரித்தவாறிருந்தது. ஆனால் கண்மூடி சாய்வு நாற்காலியில் அரைத் தூக்கத்தில் இருந்தார். முதுகில் மெதுவாகக் கை வைத்து ஊர்வசி அவரை எழுப்பினாள்.

'கிளப்புக்குப்போகநேரமாய்விட்டது, புறப்படுங்கள்' என்றாள்.

'இன்று அலுப்பாய் இருக்கிறது. நீ போய் வா' என்று சரத்சந்திரர் சொன்னார்.

'இந்தஅலுப்புஅடிக்கடி வருகிறதுபோலிருக்கிறதே? கிளப்பின் சகவாசம் பிடிக்கவில்லையோ?' என்று கேட்டாள்.

'அதுவும் ஒரு காரணம்தான். நான் டில்லிக்கு 15 வருஷத்திற்கு முன் வரும்பொழுது அதில் பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மட்டுமே அங்கத்தினர்களாக விருந்தனர். இப்பொழுது வியாபாரிகளும், கண்டிராக்டர்களும் வந்து குவிந்துவிட்டார்கள். அவர்களாவது போகட்டும். பத்திரிகை நிருபர்களைக் கண்டு எனக்குச் சகிக்க முடியவில்லை. அவர்களுடைய அகங்காரம் தானென்ன? மாதம் 200 ரூபா சம்பளம். கவுன்சில் மெம்பருக்குச் சமானமாகப் போய் உட்கார்ந்து அரசியல் பேச ஆரம்பித்து விடுகிறார்கள்' என்றார் அவர்.

'பேசினால் என்ன? எனக்கு இப்பொழுதுதான் கனவுமாதிரி இருக்கிறது. முன் பெண்களுக்குப் பேசவே தெரியாது. ஆண்களும் பெண்களைக் கண்டு ஒதுங்கிப் போய்விடுவார்கள். இக்காலத்துப் பெண்கள் கலகலவென்று பேசுவதையும் சிரிப்பதையும் பார்த்தால் எனக்குப் பத்து வயது குறைந்ததுபோல் தோன்றுகிறது' என்றாள் அவள்.

'ஏன் இவ்வளவு இகழ்ச்சி? உண்மையில் உன்னை இப்பொழுது பார்த்தால் 25 வயது கூட மதிக்கமாட்டார்கள்' என்று சிரித்தார் சரத்சந்திரர்.

'பரிகாசம் போதும். நீங்கள் வரப்போகிறீர்களா? தனியாகப்போகப் பிடிக்கவில்லை. ஆனாலும் வீட்டிலேயே நாள் முழுதும் இருந்துவிட்டு, சாயங்காலம் சிறிதுநேரம் கிளப்புக்குப்போய் வராவிட்டால் சரியாகத் தூக்கம் வருகிறதில்லை' என்று கொஞ்சம் கோபத்துடன் கூறிவிட்டு ஊர்வசி வெளியில்வந்து காரில் உட்கார்ந்தாள்.

( 2 )

தமிழ் நாட்டில் கிளப் என்கிற பதம் சாப்பாட்டு விடுதியைக் குறிக்கிறது. உண்மையில் இந்த ஆங்கிலப்பதத்திற்குஉல்லாச விடுதி என்று பொருள். புது டில்லியில் செம்ஸ்போர்டு கிளப் மிகவும் சிறப்புற்றது. பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரும் பணக்காரர்கள், பிரபலபத்திராதிபர்கள், எல்லாப்பெரிய பேர்வழிகளும் அதில் மெம்பர்கள். அதன் பிரவேசக் கட்டணம் ரூ. 200. மாதச் சந்தா ரூ. 10. பானங்களும் சிற்றுண்டிகளும் சதாகாலமும் கிடைக்கும். நீந்தும் குட்டையிருக்கிறது. நர்த்தன மேடையும் தயாராக இருக்கும். கோடைக் காலத்தில் பரந்த புல்தரையில் மேஜை நாற்காலிகள் அழகாகப் பரப்பப்பட்டிருக்கும். டென்னிஸ், பிலியர்ட்ஸ் முதலிய விளையாட்டு வசதிகள் உண்டென்று கூறத் தேவை இல்லை.

கிளப்புச் சேர்ந்ததும், ஊர்வசியின் காரை நண்பர்கள் சூழ்ந்து ஆரவாரிக்கலானார்கள். 'மிக்க சந்தோஷம்' என்றாள் ஒருத்தி. 'நான் எதிர்பார்த்தபடிதான்' என்றாள் இன்னொரு தோழி. 'மூன்று வருஷத்திற்குமுன் கிடைத்திருக்கவேண்டும்' என்றாள் மூன்றாவது சிநேகிதி. ஊர்வசிக்கு ஒன்றும் புரியவல்லை. ஆனாலும் கிளப்பு அங்கத்தினர் முகத்தில் எப்பொழுதும் ஓர்விதப் புன்முறுவல் பூத்திருக்கும். அதைக்கொண்டு எந்த நெருக்கடியையும் சமாளித்துக்கொள்ளலாம். சகிகள் எல்லோரும் போய் ஒரு மேஜையைச்சுற்றிலும் உட்கார்ந்ததும், வில்லைபோட்ட சேவகர்கள் பழரச பானம் கொண்டுவந்து வைத்தார்கள். எதிலும் முன்னிற்கும் காமாக்ஷி-விசுவநாதன்:

'லேடி மித்திராவின் ஆரோக்கியத்திற்கு' என்று டம்ளரைத் தூக்கிப் பானத்தைப் பருகினாள். ஊர்வசிக்கு அப்பொழுதுதான் விளங்கிற்று. அடுத்தநாள் பட்டங்கள் பிரசுரமாகும் தினம். சரத்சந்திரருக்கு ஸர் பட்டம் கிடைத்திருக்கிறதென்று இவர்கள் அறிந்திருக்கவேண்டும். ஆனால் தனக்கு ஏன் சரத்சந்திரர் சொல்லவில்லை? ஒருவேளை இவர்கள் ஏமாற்றப்பட்டிருந்தால்? என்ன வெட்கக்கேடு. நாளைமுதல் கிளப்பில் தலைகாட்ட முடியாது. ஆனால் காமாக்ஷியின் புருஷன் உள்நாட்டு இலாகாவில் டிபுடி காரியதரிசி. சரத்சந்திரர் வியாபார இலாகாவில் காரியதரிசி. இந்திய சர்க்காரின் காரியதரிசிகளில் இவர்

ஒருவருக்கே இதுவரையில் ஸர் பட்டமில்லை. அவருடைய இரண்டாவது மகன் நிர்மலசந்திர மித்திரா பொது உடைமைக் கக்ஷியைச் சேர்ந்து தன்னுடன் சீமையில் படித்த கல்யாணி என்னும் தமிழப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டதே இதற்குக் காரணம். திடீரென்று சர்க்கார் மனம் மாறுவானேன்? என்று பலவாறு சிந்திக்கலானுள். சீட்டாட்டத்தில் புத்திபோகவில்லை. அவள் போடும் தப்புச் சீட்டுகளுக்காக மற்றவர்கள் பரிகாசம் செய்தார்கள்.

லேடிகளுக்கெல்லாம் சரியாக விளையாடத் தெரியாதென்ருள் மீராபாய் அமீர்சந்த்.

'மாடிப்படி ஏறினல் யாருக்குத்தான் மூச்சுத் திணறுது' என்று சிரித்தாள் ராதா சௌத்ரி.

மௌனமும் முறுவலு மிருந்தால் எந்தக் கேலிக்கும் கவலைப்படவேண்டியதில்லை. வழக்கப்படி 10மணியானதும் ஊர்வசி வீடுவந்து சேர்ந்தாள். நேரில் சரத்சந்திரரிடம் சென்று 'ஏன் என்னை இப்படித்திண்டாடவிட்டீர்கள்?' என்று கேட்டாள்.

'எதற்காகத்திண்டாட்டம்?'என்ருர் கணவர்.

'பாசாங்கு செய்ய வேண்டாம். உங்கள் பட்டத்தை எனக்கு முன்னதாகச் சொல்லி விட்டால் என்ன கெட்டுவிடுமோ?' என்று முணு முணுத்தாள் ஊர்வசி.

'எந்த ரகசியமும் உங்கள் கிளப்பில் வெளிக் கிளம்பி விடும். உண்மையில் மாலை 5 மணி வரையில் நிச்சயமாகவில்லை. வைசிராய் நமக்குச் சாதகமாக இருந்தார். வேறு சிலர் இதை மும்முரமாக எதிர்த்தனர். பொதுவுடைமைக் கக்ஷியில் பிள்ளையிருக்க, தகப்பனுக்கு ஸர்பட்டம் கொடுத்துவிட்டால் நமது சாம்ராஜ்யத்தின் கதி என்னவாகும் என்று வாதித்தார்களாம். நான் இதை பற்றிப் பேசுவது கேவலமென்று வந்து விட்டேன். அதனல் தான் உன்னிடம் சொல்லவில்லை. நாளைப்பேப்பரில் பார்த்த பிறகுதான்நிச்சயம்' என்று சமாதானப் படுத்தினர்.

3

அடுத்த நாள் முழுதும் சரத்சந்திரரையும் ஊர்வசியையும் வாழ்த்த நண்பர்கள் ஓயாமல் வந்துகொண்டிருந்தனர். ஊர்வசியும் சிறிதும் சளைக்காமல் முகத்தில் முறுவலுடன் அவர்களுக்கு வந்தனமளித்து காப்பி, டீ, கொடுத்து உபசாரம் செய்தாள். மாலை 4மணிக்கு அவளுடைய அந்தரங்கத் தோழிகள் காமாக்ஷி, மீராபாய், ராதா முதலியோர் வந்தனர். அவர்களை எதிர்பார்த்தே ஊர்வசி ஒரு டீபார்ட்டி ஏற்பாடு செய்திருந்தாள். சரத்சந்திரர் அவர்களுடன் அரைமணிநேரம் பேசிவிட்டுத் தம் அறைக்குப் போய்விட்டார். சகிகள் ஒருவர் பின்னெருவராகப் பாடினர். கடைசியில் ஊர்வசி ரவிந்தரநாத் தாகூர் கீதங்களில் ஒன்று பாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது சரத்சந்திரர் அறையிலிருந்து ஒரு வேலைக்காரன் ஒரு தந்தியைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான். 'கர்னல் பூர்ணசந்திரன் இதாலியில் வீரப்போர் புரியும் பொழுது மாண்டான். மனப்பூர்வமான அனுதாபம். சேனதிபதி' என்று படித்தாள். ஒரு நிமிஷம் ஒன்றும் விளங்கவில்லை. பழைய புன்முறுவல் தோன்றி உடனே மறைந்தது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகலாயிற்று. தந்தியைப் பக்கத்திலிருந்தவளிடம் கொடுத்தாள். மௌனமாக அது கைக்குக்கை மாறிற்று. பத்து நிமிஷம் ஒருவரையொருவர்பார்த்துக்கொண்டு பிரமித்திருந்தனர். தமது துக்கத்தையும் அனுதாபத்தையும் தாழ்ந்த குரலில் தெரிவித்து விட்டுச் சகிகள் போனர்கள். ஊர்வசி மௌனமாகச் சரத்சந்திரர் அறையில் போய் அவர் பக்கத்துச் சோபாவில் படுத்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

ச. ச. 'ஏன் அழுகிருய்? யுத்தத்தில் இது சகஜம்தானே?'

ஊ. 'இன்னும் முப்பது வயது முடியவில்லை. இப்படியா நாம் பலிகொடுக்கவேண்டும்?'

ச. ச. 'இதுவரையில், கோடி வாலிபர்கள் இந்த யுத்தத்தில் இறந்திருப்பதாகச் சொல்லுகிருர்கள். அவர்களுக்கெல்லாம் நம்மைப் போல் பெற்ருேர்கள் இல்லையா?'

ஊ. 'எல்லோரும் இப்படித்தான் துக்கப் படுவார்கள். ஆனல் மற்றவர்கள் தங்கள் நாட்டிற்காகச் சண்டை செய்கிருர்கள். எல்லோரையும் அந்தச்சர்க்கார்கள்கட்டாயமாகக் கொண்டுபோகிருர்கள். நமக்கென்ன சம்பந்தம்? நாம் வேண்டுமென்று அனுப்பினேமல்லவா?'

ச. ச. 'நாம் ஒன்றும் அனுப்பவில்லை. சமாதான காலத்தில் சைனிய உத்தியோகம்கவர்ச்சியாக விருந்தது. அதற்காகப் பூர்ணசந்திரன் அதில்போய்ச் சேர்ந்தான். இப்பொழுது தன் கடமையைச் செய்யும்பொழுது இது நேர்ந்தது'

ஊ. 'இப்படித் தர்க்கம் செய்தால் சமாதானமாகிவிடுமா? ஒரு பிள்ளையை உயிருடனிழந்து விட்டோம். இவனும் போய்விட்டான். என்ன செய்வேன்?'

ச. ச. இதில் நாம் செய்வதென்ன? பழைய படி நான் என் ஆபீசுக்குப் போவேன். நீயும் உன் கிளப்புக்குப் போவாய்'

ஊ. 'உங்களுக்கு உணர்ச்சியே இல்லையா? இதயமெல்லாம் உலர்ந்து விட்டதா? எனக்கு இனி கிளப்பும் வேண்டாம், பட்டமும்

வேண்டாம், ஒன்றும் வேண்டாம். இதோடு என் வாழ்க்கை ஒழிந்து விட்டது’

அவள் மீது சரத்சந்திரருக்குத் தயவு பிறந்தது. பக்கத்தில் வந்து உட்கார்ந்து கண்ணீரைத்துடைத்துத் தேற்றினார்.

பத்து நாளைக்குப்பின் தோழிகளின் நிர்ப்பந்தத்தால் ஊர்வசி செம்ஸ் போர்டு கிளப்புக்குப் போகச் சம்மதித்தாள். அன்று சரத்சந்திரரும் கூடப்போனார். அவர்களைப் பார்த்ததுமே கிளப்பு முழுதும் மௌனமாயிற்று. சீட்டாட்டம் நின்று விட்டது. சிறிதுநேரம் சிநேகிதர்களுடன் உட்கார்ந்து விட்டு வீடு திரும்பினார்கள். உள்ளே நுழைந்ததும் வேலைக்காரன் ஒரு தந்தியை சரத்சந்திரரிடம் கொடுத்தான். ஊர்வசி அதை எடுத்துப் பிரித்து முதலில் வாசித்தாள், ‘நானும் கல்யாணியும் நாளை டில்லி வந்து சேருகிறோம்: நிர்மலச் சந்திரன்’ அவள் திகைப்பைக் கண்டு தந்தியை வாங்கிப் படித்துச் சரத்சந்திரர் சிரித்தார்.

‘உன் முகத்தில் மகிழ்ச்சியைக் காணவில்லையே? பிள்ளை பிடிக்கவில்லையா? நாட்டுப் பெண்ணை நினைத்தால் கசப்பாக இருக்கிறதோ?’ என்றார்.

‘உங்களுக்கு மட்டும் சந்தோஷந்தானா? பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வைசிராய் பேட்டி கண்டு வரலாம்’ என்று சீறினாள்.

‘ருஷியா சண்டையில் சேர்ந்தது முதல், பொதுவுடைமைக்காரர்களின் செல்வாக்கு அதிகமாய்விட்டது. ஒருவேளை வைசிராயே நிர்மலனைக் கூட்டிக்கொண்டுவரச் சொல்லலாம். உன்னுடைய தோழிகளும் நாட்டுப் பெண்ணுக்குச் செம்ஸ் போர்டு கிளப்பில் விருந்தளிக்க விரும்புவார்கள்’ என்றார் கணவர். மனைவிக்கு இது பொறுக்கவில்லை. கல்யாணியை அவள் பார்த்ததில்லை. நல்ல கறுப்பென்றுமட்டும் பம்பாயிலிருந்த ஒரு தோழி எழுதியிருந்தாள். ஊர்வசி குடும்பத்திலேயே கறுப்பு நிறக்கலப்பே கிடையாது. நல்ல உத்தியோகத்தை விட்டு மூடப்பிள்ளை புரட்சிக் கூட்டத்தில் தான் சேர்ந்தது. தன் ஜாதி விட்டுக் காக்கைமாதிரிஒரு பெண்ணையும் க்லியாணம் செய்து கொள்ள வேண்டுமா? தமிழ்நாட்டிலும் காமாக்ஷியைப் போல் கன்னிகள் இல்லையா? தனது வாழ்க்கை ஆரம்பிக்கும் பொழுது உலகமெல்லாம் அவளைக் கண்டு பொறுமைப் பட்டது. வங்காளத்தில் அழகிலும் செல்வத்திலும், செல்வாக்கிலும் அவளுக்கு இணையில்லை. சரத் சந்திரரும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஐ. சி. எஸ். பரீக்ஷையில் முதலாகத் தேறியவர் பாக்கிய கோபுரத்தின் உச்சி அடையும் தறுவாயில், ஏன் இப்படிக்கீழே விழவேண்டும்? நாட்டுப் பெண்ணை மரியாதையாக நடத்த வேண்டும். அவளைக் கிளப்புக்கு அழைத்துப் போகாமலிருந்தால் நன்றாகவிராது. மீராபாயின் குறும்புச்சிரிப்பு அவள் கண் முன் நின்றது. அவசர காரியமென்று சாக்குச் சொல்லிக்கொண்டு வங்காளம் போய்விடலாமென்று யோசித்தாள். ஆனால் மூட்டைகட்டச் சாவகாசமில்லை. நாளைக்கு அவர்கள் வரும் பொழுது, இன்று போனால் பயந்து ஓடுவது போலாகும். நிர்மலனைப் பார்த்து நான்கு வருஷமாகி விட்டது. காலம் கெட்டு எல்லாம் குழப்பமாகவிருக்கிறது. எதையும் முகமலர்ச்சியுடன், புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்ளுவதே அழகல்லவா? என்று குழம்பி வேதாந்தத்தில் சரணடைந்தாள்.’

5

கல்யாணி நல்ல கறுப்புத்தான். ஆனால் அவளோடு இரண்டு நிமிஷம் சம்பாஷித்த பின் அவள் நிறத்தைக் கேவலமாக ஒருவரும் நினைக்க முடியாது. முகத்தின் களையும், கண்ணின் மின்னொளியும், குரலின் இனிமையும், அறிவின் தெளிவும் எல்லோரையும் பரவசமாக்கின. நிர்மல சந்திரன் பொன்னிறமான போதிலும், அவளுக்கு நிழல் போலிருந்தான். சிக்கலான பிரச்னைகளைப் பற்றி அவள் வாதாடும் திறமையைக் கண்டு சரத் சந்திரரும் பிரமித்து விட்டார். ஊர்வசி ஒருத்திக்கு மட்டும் இதெல்லாம் பிடிக்கவில்லை. போதும் போதாதற்குடில்லியிலுள்ளபொதுஉடைமைக் கக்ஷி அங்கத்தினரெல்லாம் நிர்மலசந்திரனையும் கல்யாணியைப் பார்க்க ஓயாமல் வந்து கொண்டிருந்தார்கள். பல மாணவர் கூட்டங்களில் பேச ஏற்பாடு செய்தார்கள். தினந்தோறும் பத்திரிகைகளில் கல்யாணியின் சொற்பொழிவு பிரசுரிக்கப்பட்டது. ஊர்வசியின் தோழிகள் பரிகாசம் செய்வதற்குக் கேட்க வேண்டுமா? அவள் வீட்டைப் ‘பொதுவுடைமைப் பவனம்’ என்று அழைக்கலானார்கள்.

ஊர்வசியைக் காட்டிலும் வைசிராய்க்குக் கல்யாணியின் பிரசாரம் கஷ்டமாக இருந்தது. இந்திய சர்க்காரின் காரியதரிசியின் வீட்டிலிருந்து இம்மாதிரி காரியம் நடந்தால், பிரிட்டிஷ அரசாங்கம் என்னவாகும்? இதைத் தடுக்காத சரத்சந்திரர் மீதும் கோபம். ஆனால் என்ன செய்வது? கடைசியில் சரத் சந்திரரை ஆஸ்திரேலியாவுக்கு இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக அனுப்புவதென்று தீர்மானித்தார்.

இதைக்கேட்டு ஊர்வசிக்கு மிகவும் சந்தோஷம். இந்தியாவை விட்டு வெளியில் சில வருஷம் இருப்பதே மேல் என்று நினைத்தாள். ஆனால் புதியதோர் சங்கடம் தோன்றிற்று. அவளுடைய தோழிகள் செம்ஸ் போர்டு

கிளப்பில் ஒரு பெரிய பிரிவு விருந்து அவளைக் கேட்காமலேயே ஏற்பாடு செய்து விட்டார்கள். டில்லியிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களும் பிரமுகர்களும் வருவார்கள். வைசிராயும் அவர் மனைவியும் கூட வர ஒப்புக் கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் கல்யாணியை அறிமுகப் படுத்த வேண்டிய கடமை அவளைச் சேர்ந்தது. உடம்பு சரியில்லையென்று படுத்துவிடலாமா வென்று யோசித்தாள். ஆனால் 15 வருஷம் செம்ஸ் போர்டு கிளப்பின் ராணியாகவிருந்து இந்த மாபெரும் கௌரவத்தை எப்படி இழப்பது? விருந்து ஏற்பாடு செய்த தோழிகளின் நிலைமை என்னவாகும்? நெடுநேரம் யோசித்து ஒரு யுக்தி தோன்றிற்று. கல்யாணியை அழைத்துக் கொண்டு சரத் சந்திரர் முதலில் போய்விட வேண்டுமென்றும் தான் பிறகு நிர்மல சந்திரனோடு வருவதாகவும் ஏற்பாடு செய்தாள்.

இந்தப் பாட்டி கல்யாணிக்காகக் கொடுத்தது மாதிரியாயிற்று. ஆண்களும் பெண்களும் ஊர்வசியிடம் வந்து 'இம்மாதிரி நாட்டுப் பெண் கிடைத்தது அதிர்ஷ்டம் தான் என்று புகழ்ந்தார்கள். வைசிராயின் மனைவி 'இவ்வளவு கெட்டிக்காரப்பெண் பொதுவுடைமைக் கக்ஷியில் சேர்ந்தது மிகவும் வருந்தத் தக்கது. மெதுவாக விலகிவிட ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றாள். விருந்து முடிந்து வீடு வந்ததும் ஊர்வசியின் தலையிலிருந்து மேரு மலை கீழே இறங்கியது போலிருந்தது.

'பாட்டி எப்படியிருந்தது? உன்னைப் பற்றித் தான் ஒரே பேச்சு' என்றாள் கல்யாணியிடம்.

'நீங்கள் எப்படித்தான் சகிக்கிறீர்களோ! இன்னும் இரண்டுநாள் இந்தக் கிளப்புக்குப் போனால் என்மூளை கலங்கிவிடும்' என்றாள் மருமகள்.

'பெண்களுக்கு மூளைதான் முக்கியமோ' என்று தன் பழைய புன்முறுவலுடன் வினவினாள் ஊர்வசி.

கல்யாணி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அடுத்தநாள் புருஷனுடன் பம்பாய் போய் விட்டாள்.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

| | |
|---|---|
| கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி. | திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு |

# யாருக்கு யார்?

வெ. பத்மநாபன்

21 JUL 1944
MADRAS

'மாம்பலம் வந்துவிட்டோம் ஸார். எந்தத் தெருவிற்குப் போக வேண்டும்?' என்று டாக்ஸி டிரைவர் கேட்டபோது சந்துரு திடுக்கிட்டுத் திரும்பினான்.

டாக்ஸி மிக வேகமாகப் பாண்டி பஜாரில் போய்க்கொண்டிருந்தது. இராணுவத்தில் டாக்டராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டு போர்முனைக்குச் சென்றிருந்த அவன், மூன்று மாத ரஜாவில் தன்னுடைய சொந்த ஊரான திருச்சிக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். இடையே சென்னையில் ரயில் மாற்றத்திற்காகத் தங்கவேண்டியதாயிற்று. அவனுடைய அத்தை மகள் வனஜா தன் கணவனோடு மாம்பலத்தில் வசித்து வந்தாள். அவன் என்னதான் மனதைக் கட்டுப்படுத்திப் பார்த்தும் அவனால் வனஜாவைக் கடைசியாக ஒரு முறை பார்க்காமல் அப்பால் செல்ல முடியாது என்பதாகத் தோன்றியது. அவள் பொருட்டே அவன் தன் பந்து ஜனங்களைத் துறந்து நெடுந் தூரத்திற் கப்பால் சென்று விட்டான். தன் முறைப் பெண்ணான அவள் தனக்கே சொந்தம் என்று இறுமாந்திருந்த அவனிடமிருந்து வனஜா பலவந்தமாகப் பறிக்கப்பட்டுவிட்டாள். அவனுடைய மனத்தில் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

'எங்கே ஸார், பேசாமலிருக்கிறீர்களே' என்று பார்க்கு மூலையில் வண்டியை நிறுத்தி மீண்டுமொருமுறை வினவினான் டிரைவர்.

சந்துரு தன் மனவெழுச்சியை அடக்கிக் கொண்டு 'ரஹ்மான் ரோடு நெம்பர் ஏழு பங்களாவிற்குப் போ' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி ஒரு பங்களாவின் போர்ட்டிகோவில் நுழைந்து 'ஜக்' கென்று நின்றது.

சந்துரு வண்டிக்குள்ளிருந்தபடியே 'ராமரத்தினம் இருக்கிறாரா?' என்று தன்னை ஆச்சர்யத்துடன் நோக்கிக் கொண்டிருந்த வேலைக்காரியைக் கேட்டான்.

'ஐயா ஊரில் இல்லை. நேத்துதான் வேலை மேலே பம்பாய்க்குப் போயிருக்காங்க' என்றாள் அவள்.

சந்துரு மேற்கொண்டு என்ன கேட்பதென்று தோன்றாமல் ஒரு கணம் தயங்கினான். இதற்குள் கார் உள்ளே வந்த சத்தத்தைச் செவியுற்று வெளியே வந்த வனஜா சந்துருவைக் கண்டதும் 'அடே சந்துருவா! ஏது அத்தி பூத்தாப் போல வா, வா' என்று மிக்க குதூகலத்துடன் அவனை வரவேற்றாள்!

வனஜா இந்த இரண்டு வருடங்களில் எவ்வளவோ மாறுதலடைந்து விட்டிருப்பாள் என்று எதிர்பார்த்திருந்தான் சந்துரு. ஆனால் அவள் பழைய வனஜாவாகவே இருந்தாள். அவளுடைய எழில் முன்பிருந்த வண்ணமே ஒரு சிறிதும் குன்றாது முன்னைவிட சற்று அபிவிருத்தியுடனேயே காணப்பட்டது. ஏன்? அவளுடைய புன்னகையும் பழையபடி அவனை மயக்கமுறச் செய்யக்கூடியதாகத்தான் இருந்தது.

சந்துரு பதில் பேசாமல் தன்னுடைய சாமான்களுடன் அவளைப் பின் தொடர்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு கைகால்களை அலம்பிக்கொண்டு கூடத்திலிருந்த ஊஞ்சலின்மீது வந்து உட்கார்ந்த போது கொஞ்ச தூரத்தில் வனஜா ஒரு ஸ்டவ்வின் முன் உட்கார்ந்துகொண்டு அவனுக்காகக் காப்பி தயார் செய்வதில் முனைந்திருந்தாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு தன்னெதிரில் வீற்றிருக்கும் இதே வனஜாவைத் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருந்தான் சந்துரு. அந்த ஸ்வர்ண விக்ரஹத்தையடைய அவன் இன்பக் கனவுகள் கண்டு களித்த நாட்கள் அவன் மனக்கண் முன் தோன்றின.

பர்...ர்...பர்...என்று ஸ்டவ்வின் விசையை வேகமாக அழுத்திக் கொண்டிருந்தாள் வனஜா. அவளுடைய நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்பிக்கொண்டிருந்தது. விசையை அவள் அழுத்தும்போது அவளுடைய பொன் வளையல்களும் கண்ணாடி வளையல்களும் ஒன்றொடொன்று உராய்வதனால் ஏற்பட்ட சத்தம் மிகவும் இனிமையாக அவனுடைய காதுகளில் ஒலிக்க ஆரம்பித்தது. அவளுடைய சுந்தர வடிவத்தையும் ஆர்வமுடன் அவள் காப்பி தயாரிக்கும் அழகையும் அன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலத் தோற்றியது அவனுக்கு.

* * * *

ஒரு நாள் மாலை சந்துரு தன்னுடைய அத்தையின் வீட்டிற்குச் சென்றிருந்தான். வழக்கப்படி அவனுடன் கலகலப்பாகப் பேசும் வனஜா அன்றுஅவனெதிரிலேயே வரவில்லை. ஆனால் அவளைப் பார்க்காமால் வரவும் சந்துருவின் மனம் இடங்கொடுக்கவில்லை. அத்தையின்

வீட்டு மூலை முடுக்குக்களிலெல்லாம் தேடிப் பார்த்துக் கடைசியில் அவளைக் கண்டு பிடித்தான். தோட்டத்திலிருந்த மல்லிகைச் செடியின் பந்தலடியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவள். சந்துருவைக் கண்டதும் அவள் தன்னுடைய தலையைத் தாழ்த்திக்கொண்டாள். சந்துரு மிக்க ஆவலுடன் 'என்ன? வனி! உனக்கு என்மீது ஏதாவது கோபமா?' என்று கேட்டான்.

அவள் மறுமொழி கூறாமல் தலை நிமிர்ந்து ஒரு முறை அவனைப் பரிதாபமாக நோக்கினாள். சந்துரு திடுக்கிட்டான். அவள் நெடுநேரம் அழுதுகொண்டிருந்தாள் போலும். நெற்றியிலிருந்த குங்குமம் கலைந்து துமு துமுவென்றிருந்தாள் அவள்.

சந்துருவால் அவளுடைய இந்த நிலைமையைக் காணச் சகிக்கமுடியவில்லை. அவன் அவளுடைய முகவாய்க்கட்டையைப் பிடித்து நிமிர்த்தி 'வனி' ஏன் இந்தமாதிரி இருக்கிறாய்?' என்று கேட்டான்.

'ஆமாம் உங்களுக்கெல்லாம் ஒன்றும் தெரியாது தான்' என்றாள் அவள். இவ்வளவு நேரமாக அடக்கி வைக்கப் பட்டிருந்த அவளுடைய அழுகை கட்டுப்பாட்டை மீறி வெளிப்பட்டது.

சந்துரு முன்னைவிட மிக்க கலவரத்துடன் 'எனக்கொன்றும் தெரியாது வனஜா. விஷயம் என்னவென்று சொல்லேன்' என்றான் அழமாட்டாக் குறையாக.

'நிஜம்மா உனக்குத் தெரியாதா?' என்று அவள் நீர் மல்கிக் கொண்டிருந்த தன்னுடைய கண்களை அகலவிரித்து அவனை ஆச்சர்யத்துடன் நோக்கினாள்.

'எனக்கொன்றும் தெரியாதே' என்றான் சந்துரு.

வனஜா மறுபடியும் மௌனமானாள். அவளுடைய விசிப்புக்கள் மாத்திரம் அவனுடைய செவிக்குத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

சந்துருவுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. தங்கு தடையின்றிப் பெருகிக் கொண்டிருந்த அவளுடைய கண்ணீர்ப் பெருக்கை எவ்விதம் நிறுத்துவதென்று அவனுக்குத் தெரியவில்லை. சுபாவமாகவே சற்றுக் குழைந்த மனமுடைய சந்துருவின் கண்களிலும் அப்பொழுது கண்ணீர் நிறைந்து தளும்பியது. இதைத் தவிர அவன் வேறென்ன செய்திருக்க முடியும்?

மறுபடியும் அவன் துக்கம் கலந்த குரலில் 'வனி, நான் உனக்குக் கோபம் வரும்படி என்னவாவது சொல்லி விட்டேனா' என்ன? அப்படியிருந்தால் என்னை மன்னித்து விடு' என்றான்.


பலவருஷ முயற்சியின் பலனே

- ஜப்கோ -

# ஹெர்பாம்

நமது குடும்ப வைத்தியன்




அபூர்வமான மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட சிறந்த மருந்து

இது ஒரு சரும நோய் நிவாரணி

சொறி, சிரங்கு, கரப்பான், புண், வெட்டுக்காயம், சுளுக்கு, வண்ணான் சிரங்கு, நாவிதன் சிரங்கு, தேமல், வீக்கம், படை, நெருப்புப்புண் முதலிய சகல வியாதிகளுக்கும் தலை சிறந்த — ஔஷதம் —

குடும்பத்திற்கு இன்றியமையாதது

காற்று உட்புகாத கண்ணாடி புட்டிகளில் அடைத்து விற்கப்படுகிறது.

அவள் தன்னுடைய புடவையின் முன்றுனை யினுல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சோகம் கலந்த பார்வையுடன் சந்துருவை நோக்கி, 'அதெல்லாம் ஒன்றுமில்லே சந்துரு. நான் யாரைச் சொல்லி என்ன பிரயோசனம்? என் அதிருஷ்டம் நன்ருயில்லே' என்ருள்.

சந்துருவுக்கு மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. மெல்ல, 'என்ன, சமாசாரம்? அதை முதலில் சொல்லேன்' என்ருன்.

'ஆமாம்; நம்ம ஜாதகம் தான்' என்ருள் அவள்.

சந்துரு மிகவும் பரபரப்புடன் 'ஆமாம், அதற்கென்ன? எப்படியிருக்குன்னு சொன் ஞராம் ஜோசியர்?' என்று கேள்விகளே அடுக்கிக் கொண்டே போனுன்.

'அது சரியாயிருந்தா நான் ஏன் இப்படி அழப் போகிறேன்?'

'நிஜமாகவா? நம்ம ஜாதகம் ஒத்து வரல்லயா?'

சந்துருவின் தலேயில் ஒரு பேரிடி விழுந்தாற் போலிருந்தது. இவ்வளவு நாட்களாக அவன் யாரைத் தன்னுடைய சொத்து என்று பூரண மாக நம்பிக் கொண்டிருந்தானே அவள் இப்பொழுது அவனிடமிருந்து பலாத்கார மாகப் பறிக்கப்பட்டுவிட்டாள். வனஜா இனி தன்னுடையவள் அல்லள். ஐயோ தெய் வமே! நீ இவ்வளவு கருணேயற்றுவிட்டாயா?

ஃ ஃ ஃ ஃ

'என்ன யோசனே பலமாயிருக்கே. காப்பி சாப்பிடல்லே' என்று கேட்டுக்கொண்டே கையில் ஒரு டம்ளர் காப்பியுடன் நின்று கொண்டிருந்தாள் வனஜா.

சந்துரு ஒரு அசட்டுச்சிரிப்புச் சிரித்தான். அவள் காப்பி டம்ளரை அவன் கையில் கொடுத்துவிட்டு 'என்ன உன்னுடைய போர் முனேயெல்லாம் எப்படியிருக்கு சந்துரு? என் கல்யாணத்தின் போது வரவில்லேயே. இரண்டு வருஷத்திற்கப்புறமானும் என்னேப் பார்க்க ணும்னு தோணித்தே? என்ருள்.

'ஆமாம் அப்போஎன்னமோ வேலேத் தொந் தரவினுலே வரமுடியல்லே. இங்கே எப்படி சௌக்கியமா இருக்கியோல்லியோ'

'எனக்கு சௌக்கியத்திற்கென்ன குறைச் சல்? இப்போ எங்கிருந்து வராப்போல'

'இப்பொ அஸ்ஸாமிலிருந்து வருகிறேன். போற வழியிலே இங்கே தங்க வேண்டுமே. அப்போ உன் உருவம் என் கண் முன்னுலே வந்தது............'

'என் உருவமா?' என்று சொல்லி, கலகல வென நகைத்தாள் வனஜா.

'நீ பழைய வனஜாவாக இருப்பாயோ மாட்டாயோ என்று யோசனே பண்ணிக் கொண்டே வந்தேன்' என்ருன் சந்துரு.

'ஆமாம், உனக்கென்ன வேலே. நான் புது வனஜாவாகறதுக்கு எனக்கு என்ன கொம்பா முளேச்சிருக்கா?' என்று சொல்லிக்கொண்டே அவள் உள்ளே சென்ருள்.

'ஆஹா! அவள் எனக்குச் சொந்தமாயிருந் தவள். ஆனுல் இப்பொழுது மற்ெருருவரின் சொத்தாகி விட்டாள். பாழும் ஜாதகம் அல்லவோ எங்களேப் பிரித்துவிட்டது. ஆனுல் எங்களால் போஷிக்கப்பட்ட காதல் செடி கூடவா பட்டுப்போயிருக்கும்' என்று எண்ணினுன் சந்துரு.

வனஜா மறுபடியும் அவன் இருந்த இடத்தி ற்கு வந்தாள். அவளுடையநடையுடைபாவனே யெல்லாம் முன்போலவே இருக்கின்றனவே. அவளுடைய மனமும் பழையபடியே தான் இருக்கும் என்று எண்ணினுன் அவன்.

உடனே அவள் 'இன்னிக்கு நானே உனக்கு சமைச்சுப் போடப் போறேன். உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு' என்ருள்.

மாலே நேரம் கழிந்து விட்டது. மெல்ல மெல்ல இருள் கவிந்து கொண்டிருந்தது. வனஜா அவனுடைய பதிலே எதிர்பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். 'வனீ......' என்ருன் சந்துரு.

அதற்கு மேல் அவனுல் பேசமுடியவில்லே. இந்த மாதிரி அவளேக் கூப்பிடுவதற்குத் தான் அருகதையுள்ளவனு இல்லேயா என்ற சந்தேகம் அவனுள் எழுந்தது. வனஜாவை அடைந்தும் அவன் இழந்துவிட்டவனல்லவா.

'வெங்காய சாம்பார் செய்யட்டுமா?' என்று கேட்டாள் வனஜா.

'உன்னிஷ்டம்'

'இல்லே; முன்னெல்லாம் உனக்கு வெங்காய சாம்பார் என்ருல் பிராணனுயிற்றே?'

'அந்தக்காலம்தான் போய்விட்டதே. இப்பொழுது நீ எதைச் சமைத்துப் போட் டாலும் சம்மதம்தான்'

'விசாரப் படாதே. உருளேக்கிழங்கு வறு வல்கூட செய்யப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டே அவள் உள்ளே சென்ருள்.

சந்துரு ஊஞ்சலில் அமர்ந்த வண்ணம் ஏதோ யோசிக்க முயன்ருன். வனஜாவைப் பற்றிய நினேவுகளே மாறி மாறி வர ஆரம்பித்தன. தன் வாழ்க்கையையே ஆனந்தமயமாக்கி இருக்கக்கூடிய அவளேச் சிறுவயது முதலே

தனக்குச் சொந்தமானவள் என்றெண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தான். கடவுள் அவனுடைய கர்வத்தைக் காணச் சகியாது அவனை நிரந்தரமாகத் துக்கப்படும்படி செய்துவிட்டார். எந்தவனஜாவைத் தான் அடையமுடியாமல் பெருத்த ஏமாற்றத்திற்காளாகி இருந்தானோ அதே வனஜாவின் வீட்டிற்கு யாதொரு அழைப்புமின்றியே அன்று வந்திருந்தான். 'வனஜா' உன்னுடைய ஹிருதயம் இப்பொழுதாவது மாறிவிட்டிருக்குமா?'

'அடாடா. இருட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாயே' என்று சொல்லிக்கொண்டே மின்சாரவிளக்கின் விசையை அமுக்கினாள் வனஜா.

பளிச்சென்றிருந்த பிரகாசமயமான ஒளியில் அவளுடைய சௌந்தர்யம் பன்மடங்கு சோபையுடன் மிளிர்ந்தது. அவளுடைய பரந்த நெற்றியில் பளபளவென ஜிகினா துகள்களுடன் கலந்திருந்த குங்குமம் மிகவும் அழகாகத் தோற்றமளித்தது. அவளுடைய தலையிலிருந்து ஓரிரண்டு மயிரிழைகள் நெற்றியின் மீது சுருண்டுருண்டு ஊசலாடிக் கொண்டிருந்தன. அவளுடைய கண்களின் கவர்ச்சியை எடுத்துரைக்கமுடியாது போலத் தோன்றியது. அவள் அதே வனஜாதான். ஒரு காலத்தில் அவனுடைய வாழ்க்கையின் சூரியன் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தவள் தான். அவள் கழுத்திலணிந்துகொண்டிருந்த பொன் அணிகளைக்காட்டிலும் அவள் முகக் காந்தியே ஒளி மிகுந்து பிரகாசித்தது. வனஜா ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'உன்னுடைய உத்தியோகம் எப்படி யிருக்கு?' என்றாள்.

'நன்றாத்தான் இருக்கு.'
'தங்கை ராஜத்திற்குக் கலியாணமாய்விட்டதா?

'என்ன தெரியாதவள் போலக்கேட்கிறாயே? அவள் கலியாணத்திற்குத்தான் நீ வந்திருந்தாயே.'

'ஐயோ, ஞாபகமில்லை. உனக்கு எப்போ கலியாணம்?'

'எப்போதாவது நடக்கும்.'
'அப்போ எனக்கு ஒரு நல்ல சாப்பாடு இருக்கு' என்று சொல்லிவிட்டுக் கலகலவென நகைத்தாள் அவள்.

பிறகு சாப்பிடச் சென்றனர். வனஜாவே அவனுக்குப் பரிமாறினாள். சந்துருவுக்குச் சாப்பிடுவதைக் காட்டிலும் பரிமாறுகிறவளைப் பார்த்துக்கொண்டேயிருப்பதில்தான் அதிகத் திருப்தி இருப்பதாகத் தோன்றியது. அன்றைய சாப்பாட்டில் அவன் ஒரு புது உற்சாகத்தைக் கண்டான். வழக்கத்தைவிட அதிகமாகவே சாப்பிட்டுவிட்டான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

சாப்பிட்ட பிறகு மாடியின் மேலிருந்த ஹாலில் ஒரு ஈஸிசேரில் சாய்ந்துகொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப்புரட்டினான் சந்துரு. ஆனால் மனம் அதில் செல்லவில்லை. ஒவ்வொரு பக்கத்திலும் வனஜாவைப்பற்றிய வெவ்வேறு விதமான வர்ணனைகளே இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. இதற்குள் வனஜாவும் தன்னுடைய சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெற்றிலைப்பாக்குத் தட்டுடன் மாடிக்கு வந்தாள்.

இருவரும் வெற்றிலைப்பாக்கு மென்று கொண்டே கடந்த இரண்டு வருஷங்களைப்பற்றிய சமாசாரங்களைப்பற்றிப் பேசலாயினர்.

'இங்கே உனக்கு எல்லாம் சௌக்கியமாக இருக்கிறதா வனி?' என்று கேட்டான் சந்துரு.

'வனீ... என்று அவன் அவளை அழைத்ததைச் செவியுற்று அவள் ஏதோ யோசிக்கலானாள். அவளுடைய கணவர் ஒருவர்தான் அவளை வனீ என்று கூப்பிடலாம் என்றாலும் அவன் இதயத்திலிருந்து பொங்கியெழும்வனீஎன்னும் நாமத்தில் தொனிக்கும் அன்பைப் பற்றித்தான் அவள் சிந்தித்திருக்கவேண்டும், சட்டென்று அவள் 'என்னகேட்டாய்? நான் சௌக்கியமாகத் தான் இருக்கிறேன்' என்றாள்.

சந்துரு ஏதோ பேசிக்கொண்டே போனான், வனஜாவும் உம் ... 'உம்' என்று கேட்டுக் கொண்டேயிருந்தாள். மெல்ல அவள் உம் கொட்டுவது நின்றது. சோபாவில் சாய்ந்தபடியே வன்ஜா துயின்று விட்டனள் போலும்.

சந்துரு பேசுவதை நிறுத்திவிட்டு அவளையே உற்று நோக்கினான். பார்க்கப்போனால் அவன் அவளை ஒரு காலத்தில் காதலித்துக் கொண்டிருந்தான். இப்பொழுதும் அதன் சாயை மறைந்து போகவில்லை. ஆனால் அவனால் அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முடியுமா?

அவன் தான் வீற்றிருந்த இடத்தைவிட்டு எழுந்திருந்து அவளருகில் சென்றான். சிலைபோல நின்றுகொண்டு அவளுடைய ஒப்பற்ற சௌந்தர்யத்தையே மனமாரப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் மனத்தில் ஒரு பெரும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. 'வெற்றிலைப் பாக்கு மென்றதினால் செக்கச்செவேலென்று இரத்தம்போலச் சிவந்திருந்த அவளுடைய மெல்லிய உதடுகளில் ஒரு முறை .........' என்று அவன் மனம் பெருங்கிளர்ச்சி செய்துகொண்டிருந்தது.

'சே.........கேட்காமல்', அவள் அனுமதியில்லாமல், அதுவும் தூங்கும் போதா? கூடவே கூடாது? அவனுடைய மனச்சாட்சி அத்தகைய காரியத்திற்கிடங்கொடுக்கவில்லை.
சந்துருவின் மனவெழுச்சி நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிக்கொண்டு வந்தது. பயித்

தியம் பிடித்தவனைப்போல் காதலும் பயமும் ஒருங்கே கலந்த குரலில் 'வனி' என்று கூப்பிட்டான்.

அவள் தூக்கம் கலைந்தது. அழகாக மூடிக் கொண்டிருந்த தன் கண் இமைகளை மெல்லெனத் திறந்து அவனை நோக்கி 'என்ன?' என்றாள்.

சந்துருவால் யாதொரு பதிலும் கூற முடியவில்லை. மௌனமாக நின்றான்.

வனஜா எழுந்து நின்றுகொண்டு கடியாரத்தைப் பார்த்து 'மணி பதினொன்றாகிவிட்டதே. இன்னும் தூக்கம் வரவில்லையா?' என்று சொல்லிக்கொண்டே ஹாலை விட்டுத் தன் அறைக்குச் செல்லலானாள்.

சந்துரு மறுபடியும் ஒருமுறை 'வனி' என்று கூப்பிட்டான்.

அவள் தன்னுடைய அறைவாயிற்படியில் நின்றபடியே 'என்ன, ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டாள்.

சந்துருவுக்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. வனஜாவின் பெருமூச்சுக்கள் அமைதியாக இருந்த அந்த நேரத்தில் பெருத்த சத்தம் போலத் தோன்றியது. அவன் ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் என்ன சொல்ல முயன்றான் என்பதுதான் தெரியவில்லை. பிறகு மெல்லச் சமாளித்துக்கொண்டு 'ஒன்றுமில்லை, போய்த் தூங்கு' என்றான்.

வனஜா சென்றுவிட்டாள்.

மறுநாட் காலையில் சந்துரு நித்திரை தெளிந்து படுக்கையில் எழுந்துட்கார்ந்தபோது மணி எட்டரையாகிவிட்டிருந்தது,

'நல்ல தூக்கம்தான் போலிருக்கிறது' என்று கேட்டுக்கொண்டே அறையில் நுழைந்தாள் வனஜா.

சமையற்காரன் ஒரு கூஜாவில் காப்பி கொண்டுவந்து வைத்தான். சந்துரு பல் துலக்கி விட்டு வந்து வனஜாவின் அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்துகொண்டான். ஒரு டம்ளரில் அவனுக்குக் காப்பியை ஊற்றிக் கொடுத்தாள் வனஜா. சந்துரு ஒரு வாய் குடித்துவிட்டு அவளை நோக்கி 'என்ன வனி, நீ காப்பி குடிப்பதில்லையா?' என்று கேட்டான்.

'குடிக்கிறேன். ஆனால்.........?'

'என்னோடு குடிக்கப் பிடிக்கவில்லையாக்கும்'

'இல்லை. நான் இன்னும் பூஜை செய்யவில்லை.'

'இந்தப் பூஜை எவ்வளவு நாட்களாக நடக்கிறது?' என்றான் சந்துரு.

வனஜா சற்று வெட்கத்துடன் தலை குனிந்தாள். மறுபடியும் சந்துரு 'பரவாயில்லை குடி...' என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த டம்ளரை அவளுடைய வாயில் வைத்தான். வனஜாவால் யாதொரு மாற்றுரையும் உரைக்க முடியவில்லை. பேசாமல், நான்கு வாய் குடித்துவிட்டு 'போதும்; வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டே இன்னொரு டம்ளரில் காப்பியை ஊற்றினாள்.

'வனி நான் குடித்த காப்பியை நீ குடித்து விட்டாயே' என்று சிரித்துக்கொண்டே கேட்டான் சந்துரு.

'அதனாலென்ன தோஷம்?' என்றாள், அவள்.

'வனி', உங்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு இருந்தேன்' என்று ஆரம்பித்தான் சந்துரு.

'சொல்லிவிடேன்' என்றாள் அவள்.

'நேற்று இராத்திரி ஒரு சமாசாரம். சொல்லட்டுமா?'

வனஜா பதில் கூறவில்லை.

'நேத்து ராத்திரி நீ ரொம்ப அழகாயிருந்தே. அப்போ நான்.........

வனஜா கம்பிரமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் சந்துரு 'நேத்து ராத்திரி வாஸ்தவமா சொல்றேன், நீ ரொம்ப அழகா இருந்தே. அப்போ நான்.........

வனஜா கீழ்நோக்கிய வண்ணம் ஏதோ யோசிக்கத் தொடங்கினாள். சந்துரு தொடர்ந்து 'நான் அதைப் பாவம்ன்னு நினைக்கல்லே. வேறே எந்த விதமாகவும் அதைச் சொல்ல முடியாது வனி' என்றான்.

அவள் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்துக் கொண்டே 'அதைப்பற்றியெல்லாம் இப்போ ஒன்றும் வேண்டாமே' என்று சொல்லிக் கொண்டே சற்று வெட்கமடைந்தவள் போல உள்ளே ஓடினாள்.

சந்துருவுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. 'இந்த வனஜா இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்ததைப் போலவே இப்பொழுதும் கள்ளங்கபடற்று இருக்கிறாளே' என்று எண்ணினான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் மறுபடியும் உள்ளே வந்தபோது சந்துரு ரயில்வே கால அட்டவணையைப் புரட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு 'அதுக்குள்ளே அந்தப் புஸ்தகத்தை ஏன் பார்க்கணும்?' என்றாள்.

'இல்லை, நான் ராத்திரி ஒன்பது மணி வண்டிக்குப் போயிடணும். எனக்கும் இருக்கணும்னு தான் இருக்கு. லீவுகிடையாதே' என்றான் சந்துரு.

'பரவாயில்லை; கொஞ்ச நாள் இங்கேயே இருந்தூட்டுப் போகலாம்' என்றாள் வனஜா.

'நான் சீக்கிரம் போகவேண்டியிருக்கிறதே. உன்னைப் பார்க்கணும்னு மனசு துடிச்சிண்டிருந்தது, உன்னைப் பார்த்தாச்சு. அவ்வளவு தான்?'

அன்று மாலை வனஜாவின் காரில் இருவரும் மெரினாவுக்குச் சென்றனர். சமுத்திரத்திலிருந்து ஜில்லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. நடைப்பாதையில் விதவிதமாக உடையணிந்துகொண்டு இப்படியுமப்படியுமாக உலவுகிறவர்களைப் பார்த்தவண்ணம் இருவரும் காரிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தனர். வனஜாவின் மனம் அன்று ஓர் நிலையில் இருக்கவில்லை என்பது அவள் அடிக்கடி அர்த்தமில்லாமல் பேசியதிலிருந்து தெரிந்தது. மாலை நேரம் கழிந்தது. சமுத்திரக்கரையிலும் இருள் கவியஆரம்பித்தது. ஆங்காங்கே யுத்தத்திற்காக இருப்புக்குல்லாய் தரித்த விளக்குக்களின் வட்ட வட்டமான ஒளிகள் தென்படலாயின,

திடீரென்று வனஜா தன் முகத்தைத் தன் கைகளால் மூடிக்கொண்டாள். சந்துரு மிகப் பரிவுடன் அவளுடைய முகத்திலிருந்து கைகளை விலக்கியபோது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

வனஜாவும் தன்னை அவனுடையவளாகவே நினைத்திருந்தாள். அவள் தான் என்ன செய்கிறாள் என்றோ அல்லது என்ன நடக்கிறது என்றோ அறிந்தவளாகக் காணப்படவில்லை. அவள் தன்னுடைய உணர்ச்சிகளின் எல்லையை மீறிவிட்டிருந்தாள் போலும். சந்துரு இன்னமும் தன்னை மனமாரக் காதலித்து வருகிறான் என்பதை அவள் அறிந்திருக்கவேண்டும். இரண்டு வருடங்களுக்குமுன் செழித்துக்கொண்டிருந்த அவர்களுடைய காதல் அன்று அகண்டமாக வியாபித்துவிட்டது போலத் தோன்றியது. அவள்மீண்டும் தன் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசித்து விசித்து அழலானாள்,

சந்துருவால் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் தானாகவே சமாதானமடைந்தனள் போலும். அவள் வீட்டிற்குச் செல்ல விரும்பினாள். சந்துரு ஹாரன் அடித்தவுடன் பக்கத்துவண்டி டிரைவருடன் பேசிக்கொண்டிருந்த வனஜாவின் டிரைவர் வந்து அவர்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

அன்றிரவு சாப்பிடும்போது வனஜா சந்துருவின் எதிரில் வரவேயில்லை. சந்துரு தன் பெட்டி படுக்கைகளைப் பிரயாணத்திற்காகத் தயார் படுத்திக் கொண்டிருந்தபோது கலகலவெனச் சப்தித்த வளையல் சத்தத்தைக் கேட்டுத் திரும்பினான். அங்கேயிருந்த சோபாவின்மீது சாய்ந்தவண்ணம் நின்றிருந்தாள் வனஜா. அவளுடைய முகம் வாடிப்போயிருந்தது. அவளுடைய கன்னங்களில் விழிநீர் ஓடிய கறை படிந்திருந்தது. அவள் வெகு நேரம் அழுதிருக்க வேண்டும். உலர்ந்துபோயிருந்த அவளுடைய உதடுகள் அசைந்தன. 'சந்துரு, நாம் இரண்டுபேரும் எங்கேயேனும் கண்காணாத தேசத்திற்குப் போயிட்டா நல்லதில்லையா?' என்றாள்.

'வனீ......' என்று வியப்புடன் கூவினான் சந்துரு.

அவள் திடுகிகிட்டுத் தன்னைச் சமாளித்துக்கொண்டு 'உம்; மறந்துபோயிட்டேன், இனிமே பழைய சமாசாரத்தைப் பத்தியெல்லாம் மறந்துபோயிடணும் சந்துரு' என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

சந்துருவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. டிரைவர் அவனுடைய சாமான்களை வண்டியில் ஏற்றிவிட்டான். வனஜா உள்ளே இருந்தாள், அவனை வழியனுப்ப அவள் வரவில்லை. அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை.

'நான் போயிட்டு வரேன் வனீ' என்று உள்ளே ஈஸிசேரில் படுத்துக்கொண்டிருந்த வனஜாவிடம் கூறியபோது அவள் திடுக்கிட்டு எழுந்து நின்றாள்.

'கட்டாயம் போகத்தான் வேண்டுமா? புறப்பட்டாச்சா?' என்று கேட்டாள் அவள்.

'ஆமாம்; நான் புறப்பட்டுவிட்டேன்' என்றான் சந்துரு,

அவள் அவனைப் பின் தொடர்ந்து வெளிவாயிற்படிவரை வந்தாள். சந்துரு காரில் ஏறி உட்கார்ந்துகொண்டு கடைசியாக ஒரு முறை அவளை நோக்கினான். இருவருடைய கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன. காரும் புறப்பட்டுவிட்டது. சந்துருவுடைய அந்தராத்மா 'என்ன வனஜா உன்னுடையவள் தானா' என்றுகேட்பதைப்போலிருந்தது. அதே சமயத்தில் வனஜாவின் மனத்திலும் 'சந்துரு'வுக்கும் நமக்கும் இனி என்ன சம்பந்தம்? என்னும் கேள்வி எழுந்திருக்கவேண்டும்.

# பிரதிக்ஞை

மானஸிகன்

தக்ஷசீலத்தில் மாலை. அன்று தேசம் புயலில் சிக்கிக்கொண்டு நடுங்கியது. வானத்தில் இருண்ட மேகங்கள் பொருமிக்கொண்டு குவிந்தன. காற்றின் வேகம் கொடூரமாய் இருந்தது. எங்கும் புழுதியைக் கிளப்பி அதை நடப்பவர் கண்களில் தூவிச் சென்றது. சோலைகளில் புகுந்து பூக்களையும் காய்களையும் உதிர்த்தது. தென்னந்தோப்பில் புகுந்து "சோ" வென்றிரைச்சலிட்டுக் கடலில் கலந்தது. அகண்ட விருக்ஷங்கள் காற்றின் வேகத்திற்கடிபணிந்தன.

எங்கும் பரந்த புல்வெளி. அதன் நடுவில் ஒரு குடிசை. இருளதிகமாக அக்குடிசையில் வைக்கப்பட்டிருந்த விளக்கும் நன்றாய்த் தெரியவந்தது. அச்சமயம் அது காற்றின் வேகத்தை எதிர்த்துநிற்கப் போராடிக்கொண்டிருந்தது. குடிசையினுள் ஒரு கிழவி கிடத்தப்பட்டிருந்தாள். அவள் [illegible]ர்வைக்குத்தான் கிழவியாக இருந்தாள். [illegible]மையும் கவலையும் கிழத்தன்மைக்கு வேண்டிய சின்னங்களை அவளுக்கு அளித்துவிட்டன. வெளுத்த துணி போல் நரைத்த மயிர். உடம்புக்கட்டுத் தளர்ந்துபோய்ச் சுருக்கங்கள் நிறைந்த முகம்; தேகம். உண்மையில் அவள் கிழவியல்ல. வயது நாற்பதைத் தாண்டவில்லை. அடிக்கடி இருமிக்கொண்டு புரண்டுகொண்டிருந்தாள். அவள் ஆவி யமனுடன் போராடிக்கொண்டிருந்தது.

கதவண்டை காலடிச் சத்தம். ஓரிளைஞன் இருள் நிறைந்த குடிசையினுள் நுழைந்தான். விளக்கைத் தாண்டிவிட்டுவிட்டுப் படுக்கையருகில் வந்து நின்றான். அவன்தான் அவள் மகன் மதுரன்.

கிழவி உடம்பைத் திருப்பினாள். ஒளியிழந்த கண்கள் மகனை நோக்கின. மிகவும் கஷ்டப்பட்டுப் பேசத் தொடங்கினாள்.

"மதுரா! இன்று ஏதாவது கிடைத்ததா?"

"மிகவும் குறைவாகத்தான் கிடைத்தது; நாள் முழுவதும் எவ்வளவுதான் கஷ்டப்படுகிறதம்மா; பாதி வயிற்றைக் கழுவ முடியவில்லையே! உனக்கு மருந்துக்குக்கூட மிஞ்சவில்லையே!" என்றான் மதுரன். அவன் குரலில் வெறுப்பும் வருத்தமும் தொனித்தன.

கிழவி இரண்டுதரம் இருமினாள். மகன் கீழே கிடந்த கணப்புச் சட்டியை நன்றாகக் கிளறிவிட்டு ஊதினான். தாய் பேச ஆரம்பித்தாள்.

"மதுரா! நான் நாளை வெளிச்சத்தைக் காணமாட்டேன் போலிருக்கிறது; இதுவே என் கடைசி இரவாயிருக்கும், இவ்வளவு நாளாகக் கூறவேண்டிய தொன்றை இப்போது நான் உனக்குச் சொல்லவேண்டும்; என்னால் பேசமுடியவில்லை; என்னருகில் வந்து உட்கார்"

மதுரன் தாயருகில் அமர்ந்தான்.

தாய் மறுபடியும் பேசலானாள்.

"நான் இப்போது கூறப்போவது நீ பிறந்த கதை. அதை நீயறியவேண்டியது அவசியம். இப்போது தக்ஷசீலத்தில் சேனைத் தலைவனாய் விளங்கும் பாஹு ஸிம்மன் என் தந்தை. அவருக்கு நான் இரண்டாவதுபெண். நான் கலியாணப் பருவத்தில் உன் தகப்பன் ஆர்யவர்மனை வரித்தேன். என் தந்தை எங்கள் மணத்தைத் தடுத்தார். நான் ஆர்யவர்மனுடன் வீட்டைவிட்டு வெளியேறினேன். நாங்கள் வேறுதேசம் சென்று சிலகாலம் பிழைத்திருந்தோம். மதுரா, அப்போதுதான் நீபிறந்தாய். நீ பிறந்த வேளையோ அல்லது என் கர்மபலனோ, நீ பிறப்பதற்கு ஒரு வாரத்திற்குமுன் உன் தந்தை உன்னையும் என்னையும் அனாதையாக விட்டுவிட்டு ஓடிவிட்டார். பச்சைப் பாலகன் உன்னை வைத்துக்கொண்டு தகப்பன் வீடுதிரும்பினேன். மதுரா! எனக்கு அங்கு இகழ்ச்சியே கிடைத்தது. என் தந்தை என்னை உள்ளே விடவும மறுத்தார். குழந்தையாகிய உன்னை வைத்துக்கொண்டு ஒருவாயுணவுக்குக் கஷ்டப்பட்டதைக் கடவுள் தான் அறிவார். பெரிய குடும்பத்தில் பிறந்த நான் செய்த வேலைகள் எவ்வளவு இகழ்ச்சியானவை? எவ்வளவு கஷ்டம் பொருந்தியவை? இவ்வளவையும் சகித்துக்கொண்டு உன்னை வளர்த்துவிட்டேன். எப்படியோ இருபது வருஷங்கள் கழிந்துவிட்டன. நீயும் பெரியவனாகிவிட்டாய். நான் உன்னை அனாதையாய் விட்டுச் செல்கின்றேன். நீஎனக்காகச் செய்யவேண்டியது ஒன்றுளது."

சிறுவன் கண்கள் பிரகாச மடைந்தன' "அம்மா நான் உனக்காகச் செய்யவேண்டியதென்ன? அதைச் சொல் சீக்கிரம்" என்று வற்புறுத்தினான்.

நீ ஒரு பிரதிக்ஞை பண்ணிக்கொள்ள வேண்டும். அதன்படி நீ செய்யச் சித்தமாய் இருக்கவேண்டும்"

"இதோ பண்ணிக்கொண்டு விட்டேன், இது சத்யம். நீ கூறப்போவதை நான் என் உயிருள்ள வரைக்கும் முடிக்க முயற்சி செய்வேன். இதுவே என் வாழ்க்கையின்

லட்சியம்'' மகன் கண்களில் ஓர் ஆனந்தம்! குரலில் ஓர் ஆவேசம்.

தாய் மறுபடியும் ஆரம்பித்தாள். ''அப்பா! அந்தப் பிரதிக்ஞை மிகவும் கடினமானது. மனதுக்குப் பிடிக்காதது. நான் கூறியபின்பு நீ அதைச் செய்யாமலிருக்கக்கூடாது. நீ தயங்குவதாக இருந்தால் அது வெளிவர வேண்டாம்; என்னுடன் இறந்து போகட்டும்'' என்றாள்.

''இல்லை இல்லை; நான் அதைச் செய்துவிடுகிறேன். இதற்கு என் உயிர்மேல் ஆணை?'' என்று கையிலடித்துச் சத்தியம் செய்தான்.

'மதுரா! நான் உன்னை இவ்வளவுநாள் வளர்த்ததே இந்தப் பிரதிக்ஞைக்குத்தான். உன் தகப்பன் நம்மை அனாதையாய் விட்டுச் சென்றபோது நான் பட்டகஷ்டங்கள் என்னை உயிர்விடத்தூண்டின. அநேக தடவைகள் உன்னை எடுத்துக்கொண்டு நான் கிணற்றங்கரைகளை அடைந்து உயிர்விடத் துணிந்திருக்கிறேன். ஆனால்.........ஆனால் அதேமனம் கோபத்தில் என்னை வேறொன்று செய்யத் தூண்டிற்று. அதன் பலன் நான் மேற்கொண்ட பிரதிக்ஞை. அதைத்தான் நீ நிறைவேற்றவேண்டும். நானிறந்த பின்பு எனக்குச் செய்ய வேண்டிய கிரியைகளில் இதுவும் ஒன்றாக இருக்கவேண்டும்.''

இடி இடித்தது. மின்னல் படர்ந்தது. மகன் மனமும் புயற்காற்றில் ஊசலாடியது. 'பிரதிக்ஞை'' என்று கூவினான்.

''நான் போன பின்பு நீ நமக்கு இக் கஷ்டங்களை விளைவித்த உன் தகப்பனை, அவன் எங்கிருப்பினும் சரி, கண்டுபிடித்து அவனைப் பழிவாங்க வேண்டியது'' உணர்ச்சி மேலீட்டால் உடல் துடித்தது; குரல் உயர்ந்தது. ''இதைத்தான் நீ செய்யப் பிரதிக்ஞை பண்ணியுள்ளாய், அதை நீ இப்போது செய்ய வேண்டும்''

பிரகாசமடைந்த கண்கள் ஒளியிழந்தன. ''என் தகப்பனையா நான் பழிவாங்கவேண்டும்?'' குரலில் ஏக்கம் தொனித்தது.

''ஆம், உன் தகப்பனைத்தான். ஆசைகாட்டி மோசம்செய்த பாதகனைத்தான். ஒருபெண்ணை ஏமாற்றி விட்டதாக நினைத்துக்கொண்டு இப்போது உலகில் ஓர் மூலையில் களித்துக் கொண்டிருக்கிறான். தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை கிடையாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பழி அடைய வேண்டும், அவன் செய்த குற்றத்திற்குத் அவன் தண்டனை பெற்றுத்தான் ஆகவேண்டும். மதுரா, நீதான் இதைச் செய்யவேண்டும். உயிர்கொடுத்து உயிர்வளர்த்த தாய்க்குச் செய்ய வேண்டிய கடமை இதுதான்'' கோபத்தால் பலங்குன்றியது. குரலும் அடங்கியது.

மகன் வெகு நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் மனம் நிலை தடுமாறியது.

''என்ன பதிலில்லை?'' என விளித்தது கிழவியின் குரல்.

மதுரன் எழுந்து நின்றான். ''சரி உன்னிஷ்டப்படியே ஆகட்டும்'' என்றான். தாயின் படபடப்புத் தளர்ந்தது. அவள் மூச்சு அதிகரித்தது. ''சீக்கிரம் பானையை எடு'' என்றாள்.

பானையைக் கொண்டுவந்தான் மகன்.

பானையிலிருந்து இரத்தம் தோய்ந்த ஓர் கயிற்றை எடுத்தாள். அதை மிகவும் சிரமத்துடன் மதுரன் கையில் முடியிட்டாள். ''இது உன் பிரதிக்ஞையின் அறிகுறி. கஷ்டங்களால் நான் சிந்திய இரத்தவெள்ளத்தில் தோய்க்கப்பட்ட இக் கங்கணம் உன் மனதில் பழியை உறுத்திக் கொண்டேயிருக்கட்டும்'' என்றாள்.

பானையிலிருந்து ஓர்பையை எடுத்து ''மதுரா, இதுதான் உனக்காக நான் வைத்துப் போகும் சொத்து. இதை நீ வைத்துக்கொண்டு உன் வாக்கை நிறைவேற்றுவாய்'' என்றாள்.

வானவெளியில் சூழ்ந்திருந்த கருமேகங்கள் விரைவில் நீங்கிக் கொண்டிருந்தன. அடிக்கடி மின்னல்கள் தோன்றி, இருளை விலக்கிக் குடிசையை வெளிச்சப்படுத்தின. புயல்காற்று குடிசையின் ஓலை[illegible]னூடே ''குய்'' என்ற சப்தம் செய்துகொ[illegible]சென்றது. கதவுகள் படபடத்தன, ஜன்னல்கள் முனுகின. அண்டபேரண்டம் சாய்ந்தது போல் ஓர் இடி இடித்தது. மகன் கையில் பணப்பை விழுந்தது. ''அப்பா! இடித்தது நல்ல சகுனம். உனக்கு நல்ல மங்களம் உண்டாகட்டும்'' கிழவி சாய்ந்தாள், அவள் உயிரைப் பிடித்து வைத்திருந்த காரியம் ஆய்விட்டது.

அந்த இருளில் திடீரென்று மதுரன் உரத்த குரலில் ''அம்மா நான் தகப்பனைக் காணாவிட்டால் என்ன செய்வது?'' என்று கத்தினான்.

''அவன் சந்ததி'' என்று தீனக்குரல் வந்தது, கிழவியினிடமிருந்து.

அன்றிரவு புயலும் அடங்கியது. தாயின் சடலமும் சலனமற்றதாகியது. அவள் ஆவி அந்தகாரத்தில் கலந்தது. மறுநாள் கதிரவன் வந்தபோது குடிசை நிர்மானுஷ்யமாக இருந்தது. அந்த இரவே தாயை அடக்கஞ்செய்து விட்டுப் புறப்பட்டுவிட்டான் மதுரன் பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக.

ஃ ஃ ஃ

பாடலிபுரத்தில் அதே மாலை. வணிகர் தெருவில் ஓர் வீடு. சற்றுப் பாழடைந்துவிட்டது. ஓர் அறையில் ஓர் கிழவர் கிடத்தப்பட்டிருந்தார். அவர் உயிரும் ஊசலாடிக்கொண்டிருந்தது, அவர்தான் ஆர்யவர்மன்.

மருந்துகொண்டு வந்து கொடுத்தான் அவர் மகன் குமுதன். ''அப்பா உங்கள் உடம்பு தேறிவிடுமென்று வைத்தியர் சொல்லுகிறார்'' என்றான்.

தந்தை முகத்தில் ஓர் வறண்ட புன்னகை. அன்புடன் மகன் தலையைத் தடவிக்கொடுத்தார். "குமுதா அது கிடக்கட்டும் என் ஆயுட்காலம் முடிந்துவிட்டதென்று என் மனங் கூறுகிறது. நாளைச் சூரியனை நான் காண்பது சந்தேகம். நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்றார்.

குமுதன் "அப்பா நீங்கள் பயப்படாதீர்கள். நீங்கள் பிழைத்து விடுவீர்களென்று வைத்தியர் தைரியங் கூறுகிறார்" என்றான்.

"நோயா என்னைக்கொல்கிறது? இல்லை. என் மனந்தான் என்னைக்கொல்கிறது. வைத்தியர் மனநோய் அறியார். குமுதா, நான் போனபின்பு நீ எனக்காகச் சில காரியங்கள் செய்வாயா?"

"உங்களுக்குச் செய்யவேண்டியதென்ன? நீங்கள் காலாவிட்ட பணியைத் தலைமேற்கொண்டு செய்வேன் சீக்கிரம் சொல்லுங்கள்"

"நானுனக்காக ஓர் கதை சொல்லவேண்டியிருக்கிறது; சற்று என் அருகில் வா"

படுக்கையை நெருங்கி அமர்ந்தான் குமுதன்.

"குமுதா உனக்கிப்பொழுது பதினெட்டு வயதாகிறது. நீ பிறப்பதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன் அ[illegible]து இருபது வருடங்களுக்கு முன் நா[illegible]ன் தாயை மணந்தேன். பாவி நான் அதற்கு முன்பே ஒருத்தியை மணந்து அவளைக் காப்பாற்றச் சக்தியில்லாமல் கர்ப்பிணியாய் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டேன். உன் தாயை அவள் பணத்திற்காக நேசித்தேன். அவள் என்னை உண்மையில் காதலித்தாள். மணமான இரண்டு வருடங்களுக்கெல்லாம் உன்னைப் பெற்றுவிட்டு இறந்தாள். இந்தப் பதினெட்டு வருஷங்களாக நானே உனக்குத் தாய், தந்தை, யாவும். வியாபாரம் பெருகவே நான் உன்னைச் செல்வாக்குடன் வளர்த்து வந்தேன். அதே சமயம் என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? செல்வாக்குடன் இருந்த நான் ஒரு பாவி. என்மேல் அன்பு வைத்துப் பெற்றோர், சுற்றம் செல்வம் அனைத்தையும் துறந்து வந்த ஓர் உத்தமியை நடுத்தெருவில் உலகத்தின் இகழ்ச்சிக்காளாகவிட்ட பாதகன். நானவளை விட்டு வரும்போது அவள் கர்ப்பிணியாக இருந்தாள். அவள் குழந்தை பிறந்து உயிரோடிருந்தால் அது உன்னைவிட இரண்டு வயது பெரிதாயிருக்கும். பிறந்த குழந்தை ஆணோ பெண்ணோ நானறியேன். அப்பா குமுதா! அக்குழந்தை மிகவும் சிறுமைப்பட்டிருக்கும். பலநாட்கள் பட்டினியில் கிடத்தப் பட்டிருக்கும். பல நாட்கள் பாதி வயிறுகூட நிரம்பாது சென்றிருக்கும். அதைக் காப்பாற்ற என்னால் முடியவில்லை. குமுதா, நீ குடிக்கும் ஒவ்வொரு பானமும், உண்ணும் உணவும் நியாயமாக அக்குழந்தைக்குக் கிடைத்திருக்க வேண்டியவை. நான் செலுத்தும் அன்பனைத்தும் அது பெற்றிருக்கவேண்டியது. ஆனால் பாவம், யாதொரு காரணமுமில்லாமல் வறுமையில் ஆழ்த்தப்பட்டது. அவர்கள் உயிரோடிருக்கிறார்களோ இல்லையோ? அதுவே சந்தேகம்............"

குமுதன் மனம் பாசத்தால் பிணைக்கப்பட்டது. "நிஜமாகவா அப்பா, எனக்கொரு அண்ணாவோ அக்காவோ உண்டா? எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான்.

"குமுதா, நான் விட்டு வரும்போது அவர்கள் தக்ஷசீலத்தில் இருந்தார்கள். அவள் தகப்பன், பெயர் பெற்ற சேனாவீரன் பாஹுலிம்மன். நான் கூறப்போகும் விஷயம் அவர்களைப்பற்றித்தான். நீ ஒரு பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளவேண்டும். அது மிகவும் கடினமானது. ஆனால் நீ எனக்காக அதைச் செய்யவேண்டும். இறந்த தந்தைக்கு நீ செய்யவேண்டிய கிரியைகளில் இதுவும் ஒன்றாக இருக்கவேண்டும்"

"அப்படியே ஆகட்டும் அப்பா. நான் செய்யவேண்டியதென்ன சொல்லுங்கள் சீக்கிரம்"

"குமுதா என் மனம் ஏனோ சந்தேகிக்கிறது. சத்யம் செய்துகொடு. அப்போதுதான் மனம் சாந்தியடையும்"

குமுதன் கையிலடித்துச் சத்யம் செய்து கொடுத்தான்.

"இது சத்யம். என் உயிர் மேலாணையாக நீங்கள் சொல்லும் காரியத்தைச் செய்வதே என் வாழ்க்கையின் லட்சியமாக இருக்கும். தாமதிக்காதீர்கள். சீக்கிரம் உங்கள் கருத்தைக் கூறுங்கள்"

"குமுதா, நான் இறந்தவுடன் நீ எப்பாடுபட்டேனும் நான் விட்டுவந்த மனைவியையும், அவளுக்குப்பிறந்த குழந்தையையும் அவர்கள் எங்கிருந்தாலும் சரி, கண்டுபிடித்து அவர்களைக் காப்பதே உன் வாழ்க்கையின் லட்சயமாக இருக்கவேண்டும். அவர்கள் தினமும் என்னைச் சபித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களை அநாதரவாய் விட்டதற்கு நீ போய் அவர்கள் துன்பங்களைப் போக்கி எனக்கு மன்னிப்பை வாங்கித் தரவேண்டும். இதை எனக்காக நீ செய்வாயா?"

குமுதன் எழுந்து நின்றான். "அப்படிச் செய்வதே என் கடமை, என் பிரதிக்ஞை. இது சத்யம்; இது சத்யம். உங்கள் அன்பைப் பெறவேண்டிய இன்னொரு ஆவியைக் காப்பதே என் கடமையாக இருக்கும். அப்புனிதமான ஆவி, ஒரு தந்தையின் அன்பும் ஆதரவு எப்படியிருக்கும் என்பதை அறிந்திருக்காது. அதற்கு ஓர் தம்பியின் அன்பும் ஆதரவும் எப்படியிருக்கும் என்பதைக் காட்டுவதே என் வாழ்க்கையின் நோக்கம்" என்றான். உணர்ச்சி மேலீட்டால் உடல் பதறியது.

தந்தை முகம் மலர்ந்தது. "குமுதா, நீயே உத்தமன். நீ இதைச் செய்வாயானால் என் ஆவி சாந்தமடையும்" என்றார். கிழவர் தம் மடியிலிருந்து ஒரு துணியை எடுத்தார். "குமுதா கையை நீட்டு" என்று கூறித் துணி

யைக் கிழித்து அவன் கையில் கட்டினர். "மகனே, இந்தத் துணிதான் உன் பிரதிக்ஞையின் கங்கணம். இந்தக் கந்தல் மிகவும் புனிதமானது. பலநாட்கள் அனுதையாய் விடப்பட்ட மனைவியையும் குழந்தையையும் நினைத்து நான் விட்ட கண்ணீரால் நனைக்கப்பெற்றது. நீ இதைப் பார்க்குந்தோறும் நான் விட்ட கண்ணீர் உன் நினைவிற்கு வரட்டும். என் மனது குழைந்த வண்ணம் உன் மனதும் குழையட்டும். உன் பிரதிக்ஞையையும் நீ நிறைவேற்றுவாய்." தூரத்தில் கோயில்மணி அடித்தது, கும்மென்று ஜன்னல் வழியாய் வீசிய காற்று அதைச்சுமந்து வந்தது. "குமுதா மணி அடிப்பது சுப சகுனம். உனக்கு நன்மங்களமும் ஜயமும் உண்டாகட்டும். கிழவர் கட்டிலில் சாய்ந்தார்.

அன்றிரவு கிழவர் ஆவி பிரிந்தது. குமுதனும் புறப்பட்டுவிட்டான் தன் பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக.

ஃ ஒ ஃ

மேட்டுப்பாதையில் இருவர் சந்தித்தனர். பிராதக்காலம். அருணன் இன்னும் துயிலுணரவில்லை. குணதிசையில் ஓர் ஜோதிமட்டும் இருட்பிழம்பை விலக்கி நின்றது. புள்ளினக் கூட்டங்கள் பறந்து சென்றன. எங்கும் கண்ணுக்கினிய குளிர்ச்சி. மலர்களும் கொடிகளும் பிரபாகரன் வரவைக்குறித்து ஆனந்த பாஷ்பம் சொரிவதுபோலப் பனித்துளிகளைத் தாங்கி நின்றன. சந்தித்தவர்கள் யார்? குமுதனும் மதுரனும்தான்.

"பிரயாகைக்குப் பாதை எதுவோ?"

"நானும் அதைத்தான் உங்களைக் கேட்கலாமென்று வந்தேன்."

"ஓஹோ, நீங்களும் பிரயாகைக்குத்தான் போகிறீர்களோ?"

"ஆமாம், அப்படித்தானுத்தேசம். நீங்கள்"

"நானுந்தான் பிரயாகைக்குச் செல்லவேண்டும்."

"அப்போது இருவரும் ஒன்ருகச் செல்லலாம். ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கும்."

சூரியன் கண் விழித்தான். மலைச்சிகரங்களிலிருந்து எட்டிப்பார்த்தான். இருவரும் ஒன்று சேர்ந்ததைக்கண்டு திடுக்கிட்டவன் போல் திடீரென்று அவர்களூடே தன் ஒளிக் கதிர்களைப் பாய்ச்சினுன். இனி அவனுல் அவர்களைப் பிரிக்க முடியுமா? விதிதான் அவர்களை ஒன்றுசேர்த்துவிட்டதே. பிரயாணிகள் இருவரும் நீண்ட பாதையை நோக்கி நடந்து சென்ருர்கள்.

"தாங்கள் எந்த ஊர்களிலிருந்து வருகிறீர்களோ?"

"தக்ஷசிலத்திலிருந்து. நீங்கள்?"

"பாடலிபுரத்திலிருந்து. உங்கள் பெயர்?"

"மதுரன், க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவன்"

"நானும் க்ஷத்திரியன் தான்; என் பெயர் குமுதன். பிரயாகை செல்ல ரொம்பநாள் பிடிக்குமா?"

"குறைந்தது ஆறுமாதங்கள் பிடிக்கும்; பிரயாகையில் என்ன வேலையோ?

"வேலையொன்றுமில்லை; தேடியதகப்படும் வரையில் ஊர் சுற்றுவதே என் வாழ்க்கையின் லட்சியம்."

"என்ன ஆச்சரியம்! என் லட்சியமும் அதுவேதான்."

இருவரும் கதிரவன் கொடுமைக்கஞ்சி விரைந்து நடந்தனர்.

மாதங்கள் ஓடி மறைந்தன. அவை போகும்போது பிரயாணிகள் இருவரையும் பாசம் என்னும் நாணுல் இன்னும் இறுக்கிக் கட்டின. மாதம் செல்லச்செல்ல அவர்களிடை பாசமும் வளர்ந்தது.

கோடை வந்தது. பூமி தகித்தது. கதிரவன் கொடுமை தாளாது புல் பூண்டுகள் நசித்தன. ஏரிகள் வற்றின, மரங்கள் வாடின. அனல் கொண்ட காற்றில் வாடிய இலைகள் அசைந்து கொடுத்தன. சுவாசம் அடைத்தது. நா வறண்டது.

புழுதி நிறைந்த [illegible]தையில் இரு பிரயாணிகள் மதுரனும் குமு[illegible] நெடுவழி நடந்து வந்தனர் போலும். நி[illegible] நாடித் தள்ளாடி வந்தனர்.

'மதுரா, சூரிய வெப்பம் தாளவில்லையே"

"குமுதா, இன்னும் சில நிமிஷ நேரங்களில் நாம் நிழலை அடைவோம் இந்தா, இந்தக் கம்பளியை ,போர்த்துக்கொள்"

"உனக்கு, நீ வெயிலில் சாவாயே?"

"நான் பிறந்ததுமுதல் இக்கொடிய சூரியனிடம் பழகியிருக்கிறேன், அவன் வெப்பம் உறைத்து உறைத்து முதுகு காய்ந்துவிட்டது. என்னை ஒன்றும் செய்யாது.

"என்னுல் இந்த வெயிலைத் தாங்கமுடியவில்லையே; மதுரா நீ இல்லாவிட்டால் நான் இந்த வெயிலில் இறந்துபோயிருப்பேன்"

"எல்லாம்பழக்கந்தான் காரணம். அதோஓர் ஆலமரம் தெரிகிறது, அதன் நிழலை அடைவோம் வா. உனக்குத் தாகம் எடுத்தால், இந்தா, என் குடத்திலிருக்கும் நீரைக்குடி. எனக்குத் தாகம் எடுக்காது"

இருவரும் நிழலை அடைந்தனர். குமுதன் சோர்ந்து விழுந்தான். மதுரன் அவனைப் படுக்கவைத்தான்.

"மதுரா! உனக்கு என்மேல் எவ்வளவு அன்பு! சொந்தமான தம்பி அண்ணன்கூட இவ்வளவு உதவமாட்டார்களே. ரத்த பாசம் என்பார்களே அதுபோல் இருக்கிறதே நம்மிருவரிடம் இருக்கும் நட்பு.

"குமுதா எல்லாவற்றிற்கும் பழக்கம்தான் காரணம்"

கோடை அகன்றது. வசந்தம் வந்தது. வானம் துளித்தது. பூமியில் பச்சை நிறம் படர்ந்தது. மலர்கள் மிளிர்ந்தன. எங்கும் குதூகலம் தென்பட்டது. பிரயாணிகள் தங்கள் வாழ்க்கையின் லட்சியத்தை நிறைவேற்றக் கடுகி நடந்தனர்.

சரத்காலம் வந்தது, சூரியன் தக்ஷிணக் கோடியில் தள்ளப்பட்டான். வானம் இருண்டது. கார் முகில்கள் குவிந்தன. எங்கும் 'சோ'வென்று மழை பொழிந்தது. ஆறுகள் உயர்ந்தன, காட்டாறுகள் மலைகளின் இடுக்கின்கண் பேரிரைச்சலிட்டுப் புரண்டன. கோடைச் சூரியனை வெறுத்த ஜீவராசிகள் அவன் முகத்திற்காக ஏங்கின. எங்கும் ஜலப் பிரவாகம். நீண்ட மலைப்பாதையில் இருவர். மதுரனும் குமுதனும். மழையில் நனைந்து நடுங்கின அவர்கள் உடம்பு.

"மதுரா! ரொம்பவும் குளிர்கின்றதே; தாங்க முடியாது போலிருக்கின்றதே!"

"பயப்படாதே; விரைவினில் நாம் மழைக்கு ஒதுங்குவோம். இந்தா, இந்தக் கம்பளியைப் போர்த்திக்கொள்"

"மதுரா, உனக்கென்ன செய்வாய்?"

"நான் பிறந்தது முதல் குளிரும் வெப்பமும்தான் எனக்குப் போர்வைகள். உனக்குப் பழக்கமில்லை. அதனால் பயப்படாமல் போர்த்திக்கொள்"

"மதுரா, உனக்கு என்மேல் எவ்வளவு அன்பு? நீயில்லாவிட்டால் இந்தக் கொடிய மழையில் சிக்கி இறந்திருப்பேன்"

"குமுதா! எல்லாவற்றிற்கும் பழக்கந்தான் காரணம். அதோ ஓர் கோயில் தெரிகிறது வா. நாம் அங்கு சென்று ஒதுங்குவோம்"

இருவரும் பாழடைந்த கோயிலை நோக்கி நடந்துசென்றனர்.

நாட்கள் சென்றன. இருவரும் பிரயாகையை அடைந்தனர், மாலை பிரயாகையை நோக்கிச்சென்ற பாதையில் இருவர் வந்தனர்.

"குமுதா, அதோ தெரிகிறது பார். பிரயாகையின் உயர்ந்த கோபுரங்கள்; நாளைக்காலை நாம் அங்கிருப்போம்."

"மதுரா, நாம் கூடிய சீக்கிரத்தில் பிரிய வேண்டும் போலிருக்கிறதே. அதை நான் விரும்பவில்லையே. பாசம் உன்னைவிட்டுப்பிரிய மாட்டேனென்கிறதே"

"அதற்கென்செய்வது? நம் வாழ்க்கையின் போக்கு அப்படி இருக்கிறது. வா, சற்றே கங்கைக் கரையில் அமர்வோம். இன்று இங்கு தங்கி நாளைக் காலையில் நகரத்தினுள் செல்வோம்."

இருவரும் நதிக்கரையை அடைந்தனர். இனிய குயிலொன்று காதல் கீதம் பாடியது. சந்திரன் தன் இரவுக் காவலை நடத்த எழுந்தான். காதலர்க்குக் களிப்பூட்டும் அவன் சுடர் எங்கும் பரவிக்கிடந்தது.

"மதுரா, பிரயாகையில் நான் தேடிய பொருள் அகப்பட்டுவிடுமென்று நினைக்கிறேன். கடவுள்தான் அருள் செய்யவேண்டும்."

"நானும் நெடுந்தூரம் வந்திருக்கிறேன். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்."

"இவ்வளவு நாட்கள் பழகிய பின்பு உன்னிடம் சொல்லாமல் இருக்கமாட்டேன். மதுரா, நான் ஊர் சுற்றுவது ஓர் பிரதிக்ஞையின் காரணமாக. அதைச் சொல்வதற்கு முன் ஒரு கதை சொல்லவேணடும். கேட்கிறாயா?"

"குமுதா. பொழுது போக்கிற்காக உன் கதையைச் சொல்; கேட்கலாம்"

எங்கும் நிசப்தம் நிலவியது. தூரத்தில் தென்னைமரத்திலிருந்து தண்ணீரில் விழுந்த தேங்காய் உண்டாக்கிய ஓசை அதைச் சற்றுக் குலைத்தது.

குமுதன் ஆரம்பித்தான்.

"மதுரா, நான் எடுத்துள்ள பிரதிக்ஞை மிகவும் புனிதமானது. மிகவும் கருணை நிறைந்தது. என் தகப்பனார் ஒரு நங்கைக்குக் கணவனின் அன்பையும் ஆதரவையும் மறுத்தார். அதை என் தாய்க்கு அளித்தார். அப்பெண்ணிற்குப் பிறந்த குழந்தைக்கு ஓர் தகப்பனின் அன்பையும் ஆதரவையும் அளிக்கவில்லை. அதை என்மேல் சொரிந்தார். பின்னால் தாமிழைத்த பிழையைக் குறித்து வருந்தினார். அவரால் அதை அளிக்கமுடியவில்லை. நான் அந்தப் பாபம்செய்தவரின் புத்திரன். அனாதரவாய் விடப்பட்ட குழந்தைக்கு ஓர் தம்பியின் அன்பும் ஆதரவும் எப்படியிருக்கும் என்பதைக் காட்டப் போகிறேன். என்னிடம் நிறைந்து கிடக்கும் அன்பையெல்லாம் அக்குழந்தையின்மேல் செலுத்தப்போகிறேன். என் வாழ்நாள் முழுவதையும் அக்குழந்தையைக் காப்பாற்றுவதிலேயே செலவிடப்போகிறேன். இதன்மூலம் என் தந்தை இழைத்த பிழையை அகற்றப் போகிறேன். இதுவே என் வாழ்க்கையின் லட்சியம். என் தந்தை ஆர்யவர்மன் செய்த பிழையை உலகத்தோர் மறக்கவேண்டும்." குமுதன் குரல் உணர்ச்சி மிகுதியால் உயர்ந்தது. நதியின் சலசலப்பையும் சற்றுக் குறைத்தது.

ஆனால் மதுரன் முகம் ஏன் சட்டென்று மாறுதலடையவேண்டும்? அன்பும் கனிவும் பொருந்திய முகத்தில் வருத்தமும் யோசனையும் புகுந்தன. ஆர்யவர்மன் என்ற பெயர் அவனைத் துள்ளிக்குதிக்கச் செய்தது; கண் கொட்டாமல் பதுமைபோல ஜலப் பிரவாகத்தையே நோக்கிக்கொண்டிருந்தான்.

"என்ன மதுரா! மௌனம் சாதிக்கின்றாய். நான் அவ்வாறு செய்யமுடியாதென்கிறாயா? நான் சொல்லும் பிரதிக்ஞைமீது உனக்கு நம்பிக்கையில்லையா? நீ பார்க்கவேண்டும், நான தை நிறைவேற்றுவதை. என் பெரிய அன்னை பெற்ற குழந்தை ஆணோ பெண்ணோ அறியேன். எனக்கு அண்ணாவோ அக்காவோ

பார்க்காத கேட்காத ஒருவரின்மேல் அன்பு செலுத்தப் போகின்றேன். இப்பொழுதே அதன்மேல் பாதி அன்பு செலுத்திவிட்டேன். என் வாழ்நாட்கள் தாம் எவ்வளவு இனிமையானவை. பிறர் மனதைக் களிக்கவைப்பதில். அவர்கள் தக்ஷசிலத்தில் இருந்ததாக என் தந்தை சொன்னார். ஆனால் அங்கு அவர்களைக் காணவில்லை. அவர்களைக் கண்டுபிடிப்பதே என் முதல் வேலை''

மதுரன் முகம் சோகத்தின் சிகரத்தை எட்டியது. அவன் விழிகள் வெறுப்பைக் கக்கின. அவன் முகபாவங்கள் அவன் மனதில் ஏற்பட்ட புயலை நன்கு எடுத்துக் காட்டின. இக் கதையை அவன் விரும்பவில்லைபோலும்.

குமுதன் ஆரம்பித்தான்; ''மதுரா, இன்னும் சொல்கிறேன் கேள். நான் தேடி அலையும் உயிர்......''

மதுரன் எழுந்தான் ஆவேசத்துடன். ''வேண்டாம் நிறுத்து'' என்று கூவினான். குமுதன் திடுக்கிட்டான். அவன் உணர்ச்சி குலைந்தது. ''மதுரா, உனக்கிது பிடிக்கவில்லையா? அப்படியானால்.........'' என்று நிறுத்திவிட்டான்.

மதுரன் வெகுநேரம் மௌனத்தில் ஆழ்ந்தான். அவன் மனதில் ஓர் போராட்டம் ஏற்பட்டுவிட்டது. விஷயம் அவனுக்குப் புலப்பட்டது. தன் பிரதிக்ஞைக்கு குமுதன் பலியாக வேண்டியதுதான். ஆனால்.........ஆனால் அவன் அன்பு அவனைத் தடுக்கிறதே. எவ்வளவு நாட்கள் எவ்வளவு மாதங்கள் அவன் குமுதனை வெயிலினின்றும் மழையினின்றும் கண்ணிமை காப்பதுபோல் காத்துவந்திருக்கிறான்? பலியிடும் ஆட்டைக் கொழுக்க வைப்பதுபோலாகிவிட்டதே காரியம். மதுரன் மனம் தளர்ந்தது. ஒரு பாலகனையா, குற்றம் ஒன்றும் அறியாத உத்தமனையா, தன்மேல் முழுநம்பிக்கை வைத்து உறவாடின சிரேஷ்டனையா, கொல்வது? சே! இது என்ன உலகம்? இது என்ன வாக்குறுதி? குமுதன் எண்ணங்கள் தாம் எவ்வளவு உயர்ந்தவை? தன்னைக் கொல்லத் தீர்மானித்திருக்கும் ஒருவனை நேசிப்பதல்லவோ அவன் தீர்மானம்?

அதே சமயம் அவன் தாய் அவன் முன் தோன்றினாள். அவள் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், அவன் அன்று குடிசையில் கொடுத்த வாக்குறுதி அவள் பட்ட கஷ்டங்களுக்குப் பழியில்லாமல் செல்வதா? அவள் கட்டிய கங்கணம் மதுரன் கண்ணில் பட்டது. இரத்தக் கயிறு மதுரனை நோக்கி கண்ணைச் சிமிட்டியது. மதுரன் மனம் உறைந்தது. பழி பழி என்று எங்கும் கூவியது. அவன் கண்கள் இருண்டன. ஒரு கணம். மதுரன் அடாது செய்துவிட்டான். குமுதன் இரத்த வெள்ளத்தில் சாய்ந்தான்.

''ஐயோ''வென்றலறிக் கீழே சாய்ந்தான் குமுதன். கழுத்தில் நல்ல வெட்டு. உயிர் பிழைக்காது. ''பாதகா''வென்று கூவினான் குமுதன். ஆவேசம் தெளிந்தது மதுரனுக்கு. ''கொலை கொலை'' என்று கூவினான், மறு கணம் குமுதன் காலடி பணிந்தான். ''குமுதா, என்னை மன்னித்துவிடு, என்னை மன்னித்துவிடு, நான் செய்யவில்லை. நானா உன்னைக் கொல்வேன்? இல்லை. ஒருகாலுமில்லை. என் தாய்க்கு அளித்த பிரதிக்ஞை செய்துவிட்டது. என் தாயின் ஆவி செய்தது. நீ தேடிவந்த உயிர் நான்தான். குமுதா, உன் அன்பைப் பெறவேண்டியவன். பாபி நான் கொடுத்து வைக்கவில்லையே. நான்தான் உன் அண்ணன்'', மதுரன் குரலில் சோகம் கலந்தது.

குமுதன் உயிர் தள்ளாடியது. அவன் முகத்தில் துக்கம், ஏமாற்றம். ''ஐயோ, என்ன காரியம் செய்தனை? நயவஞ்சகம் செய்தனை. மதுரா, நீயாகக் கேட்டிருந்தால்கூட என் உயிரைக் கொடுத்திருப்பேனே, என் உயிரை அர்ப்பணம் செய்யவல்லவோ நான் வந்தேன். உன் செயல் என் பிரதிக்ஞையைத் தடுத்துவிட்டதே. அப்பா, என் உயிர் நில்லாது. நான் தந்தைக்கு அளித்த வாக்கில் தவறினேன். மதுரா உன் காரியம்.''

''கொலை, கொலை'' என்ற சத்தத்தைக் கேட்டு. இரு காவலா[illegible] புதரைத் தள்ளிக் கொண்டு வந்தனர். [illegible]ரக் காட்சியில் ஸ்தம்பித்தனர். மதுரன் விலவிலத்துப் போய் ஓட முயன்றான். ஆனால் ஒரு இரும்புப் பிடி அவனை நிறுத்தியது. மூடிய கண்கள் திறந்தன. தன் முன் நடந்த சம்பவத்தைக் கண்டான் குமுதன். ஒரு கணத்தில் அவன் முகம் மலர்ந்தது. பலத்தையெல்லாங் கூட்டிப் பேசினான். ''ஐயா! அவரல்ல கொலையாளி, கொலையாளி அதோ ஓடி.........'' ஒரு திக்கைக் காட்டியது குமுதன் கை. மறு கணம் மலர்ந்து மடிந்தது குமுதன் முகம். அதில் தான் எவ்வளவு மலர்ச்சி, சாந்தி, தன் வாக்கை நிறைவேற்றியதற்கு. சுட்டிய கையில் கட்டிய கங்கணம் தோய்ந்தது ரத்தவெள்ளத்தில், தியாக வெள்ளத்தில்.

திருடனைத்தேடக் காவலாளிகள் மதுரனை விட்டுச் சென்றனர். மரங்களால் மறைந்த சந்திரன் தன் முன் நின்ற காட்சியைக்காண மரங்களைத் தள்ளிக்கொண்டு வந்தான். அந்நடு இரவில் நிர் மானுஷ்யமான காட்டில் மதுரனின் ''ஐயோ' வென்ற தனிமைக் குரல் எங்கும் பரவி ஒலித்து நதியின் சலசலப்பில் கலந்தது.

இருவர் வாக்கும் நிறைவேறின. ஆனால் அதில்தான் எவ்வளவு சோகம்?

இக்காட்சியைக் காணவிரும்பாது மதி தன் முகத்தை முகிலால் மூடினான். அவன் சிந்திய இருகண்ணீர் முத்துக்கள் கீழே உதிர்ந்தன.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



கர்நாடக சங்கீத உலகில் நற்கியாதியுடன்
பிரகாசித்துவரும் புதிய நக்ஷத்திரம்

## கும்பகோணம்

# A. D. சுல்தான்

## இவர்களின் இனிய சங்கீதக் கச்சேரியை
## கேட்டு ஆனந்தியுங்கள்

**அன்னாரின் பாட்டுக் கச்சேரி சம்பிரதாயத்துடனும் பண்டிதர் முதல் பாமரர் வரை ரஸிக்கக்கூடிய முறையிலும் அபரிமிதமாக அமைந்திருக்கிறது.**

**For Engagements apply to:-**

*A. D. Sultan & Co.,*

***Kittappa Mark Tobacco Manufacturers***

**KUMBAKONAM.**

Regd. No. M. 4405 CAUVE




PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.